அபிஷேகத்தையும் செய்தார். அதனால் அக்நிகுண்டத்தி
நின்றும், தேர், குதிரைகள், சிங்கக்கொடி, வில், அம்புத்தூணி
கள், கவசம் இவைகள் கிடைத்தன. பிறகும் வாடாத பூமா
லையும் சுக்ரன் சங்கையும் கொடுத்தார்கள். பிரஹ்
லாதனையும் ப்ராம்மணர்களையும் வணங்கி அவர்களுடை
ய ஆசி பெற்று அஸுரப் படைகளுடன் தேவலோகத்தி
ற்கு படையெடுத்தான். இதை அறிந்த இந்திரன் ப்ரு
ஹஸ்பதியிடம் யோசனை செய்ய, ப்ருஹஸ்பதி — பலி இப்போது ப்ரம்ம
வர்ச்சஸ்ஸைப் பெற்றுள்ளான். ஸ்ரீமந் நாராயணனைத் தவிர வேறு தே
வராலும் அவனை ஜயிக்க முடியாது. ஆகையால் நீங்கள் தே
வர்கள் எல்லோரும் நாட்டை விட்டு ஓடி ஒளிந்து உங்களுக்
கு உகந்த காலத்தை எதிர்நோக்கியிருக்க வேண்டியதுதான்
என்று கூறினார். தேவர்களும் அவ்விதமே செய்தார்கள்.
மஹாபலி தேவலோகத்தைக் கைப்பற்றி மூன்று லோகங்களு
க்கும் அதிபதியானான். சுக்ராசாரியார் அவனுக்கு நூ
று அச்வமேதயாகங்களை நடத்தி வைத்தார். இவ்விதம்
மஹாபலி சக்ரவர்த்தி கீர்த்திமானாகவும் ஐச்வர்யவானாகவும்
விளங்கினான்.

திவ்வாதம், அசுரர்களால் தேவராஜ்யம் அபகரிக்கப்பட்டு
தேவர்கள் ராஜ்யமிழந்து மறைந்து வாழ்ந்து வருவதைக் கண்டு தேவ
ர்களின் தாயாரதிதியும் வருந்திக் கொண்டிருந்தாள். அவளுடைய செ
ன்றியில் கச்யப ப்ரஜாபதி தவத்திலிருந்து வந்து துன்பத்தில் அதிதி வாடியிரு
ப்பதைக் கண்டு என்ன காரணம் என்று கேட்டார். அதிதி - ப்ர
போ! தாங்கள் ஸத்யத்தியுள்ளவர்கள், இந்திரனும், ராஜ்யம் ஐச
ர்யம் புகழ் எல்லாவற்றையும், பலவான்களான அசுரர்
க்களால் இழந்து என் புத்ரர்களான தேவர்களையும் என்னை
யும், திரும்ப அவைகளை அடையச் செய்து காப்பாற்ற வே
ண்டும் என்று ப்ரார்த்தித்தாள். கச்யபர் - ப்ரியே! புண்யாத்
மாவான வாஸுதேவனை ஆராதித்தால் அபீஷ்டம் நிறைவே
றும் என்று ஆராதனத்தின் முறையைக் கூறுகிறார் - பங்குனி மா
தம் சுக்லபக்ஷம் ப்ரதமையிலிருந்து த்வாதசிவரையில் பன்னிர
ண்டு நாட்கள் பகவான் வாஸுதேவனை அர்ச்சாவதார
த்தில் த்வாதசாக்ஷர மந்த்ரத்தால் ஆவாஹனம் செய்து
ன பதினாறு உபசாரங்களைச் செய்து ஸ்தோத்ர நமஸ்கார
ங்கள் செய்ய வேண்டும். பன்னிரண்டு நாட்களும் பாலை
யே ஆகாரமாகக் கொள்ள வேண்டும்; மூன்று காலஸ்நான
ம், பூஜை, ஹோமம், ப்ராம்மண போஜனம் இவைகளையும்

சிரத்தையுடன் செய்து பதினோம் ஜூம்நாள் வாசேசுவா
ன் மேனியல்லாமல் பதிசெய்ய வேண்டும் (பால்) கிருஷ்ண யோசர்வத
ம்மனை உதை சிரத்தையுடன் அனுஷ்டித்தால் பகவான் வே
ண்டியவரங்களைக் கொடுப்பார் என்று கூறினார். அவரும் அவ
ரது மேமிகுந்த பக்தியுடன் அனுஷ்டித்தார். பகவான் அந்தச்
ரதகாலபாணியாகத் தோன்றினார். அதிதி உபசாரம் செய்து அஞ்சலி
பந்தனத்துடன் தோத்திரம் செய்து. அச்யுதா! தங்களுடைய பாதாரவிந்த
ஏற்பட்டால் கூட மேன்மேல் கிடைக்கும் பொருள் சத்திரைய
மாம்ப வென்று வேண்டியதில்லை என்று கூறினாள். பகவான் உ
ன்னுடைய புத்திரர்களான தேவர்கள் இழந்த ஸ்வர்க்க ராஜ்யத்
தை யடைந்து சந்தோஷமாக இருக்க வேண்டும் என்று விரும்புகி
றாய். இதனால் இப்பொழுது அசுரர்களுக்கு அனுகூலகாலமானதால்
ஜெயிப்பது கடினம். இந்திரனுடைய ராஜ்யத்தைக் கைப்பற்ற
ளிப்பதற்காக நான் உனக்குப் புத்திரனாக அவதரித்து உன் புத்திர
களைக் காப்பாற்றுகிறேன். இந்த விரதத்தை ஒருவருக்கும் சொல்ல
வேண்டாம் என்று கூறி மறைந்தார். கச்யபர் ஞானதி
ருஷ்டியால் அறிந்து பகவானை தியானம் செய்து அதிதிக் கர்ப்பத்
தை அளித்தார். கர்ப்பத்திலிருக்கும் பகவானை பிரம்மா ஸ்துதி
செய்தார். பகவான் சிராவண மாதம் சிரவண நக்ஷத்திரம்
திருவோணம்

சூடிய சுபதினத்தில் மத்யான்னம் விஜயா என்ற முகூர்த்தில் வைகுண்டத்தில் உள்ளது போல் திவ்ய ரூபத்துடன் ஆவிர்பாவத்தை அடைந்தார். ஸகல தேவர்களும் ரிஷிகளும் வாத்ய கோஷங்களுடன் ஸ்துதி செய்து புஷ்ப வர்ஷம் பொழிந்தனர்கள். அதிதியும் கச்யபரும் மிகுந்த ஸந்தோஷத்துடன் ஸ்துதி செய்தார்கள். அவர்கள் பார்த்துக் கொண்டிருக்கும் பொழுதே பகவான் குட்டையான உபநயன வயதுள்ளவராக மாறினார். அந்த வாமனரைக் கண்டு மஹரிஷிகள் ஸந்தோஷத்துடன் கச்யபரைக் கொண்டு உபநயனத்தை நடத்தி வைத்தார்கள். அதில் சூரியனே காயத்ரி மந்திரத்தை உபதேசித்தார், ப்ருஹஸ்பதி யக்ஞோபவீதத்தையும், கச்யபர் மௌஞ்ஜியையும், பூமிதேவி மான் தோலையும், சந்திரன் புரச தண்டத்தையும், கௌபீனத்தை அதிதியும், ஸ்வர்க்க தேவதை குடையையும், ப்ரம்மா கமண்டலத்தையும், ஸப்த ரிஷிகள் தர்ப்பங்களையும், ஸரஸ்வதி தேவி ஜபமாலையையும், குபேரன் பிக்ஷா பாத்திரத்தையும் கொடுத்தார்கள். உமா தேவியே நேரில் வந்து பிக்ஷையளித்தாள். ஸமிதாதானம் செய்து மிகுந்த ப்ரம்ம தேஜஸ்ஸுடன் பகவான் ஸபையில் விளங்கினார். பிறகு பகவான் நர்மதையின் வடகரையில் மஹாபலி செய்யும் அச்வமேத யாகசாலைக்குச் சென்றார். அவனிட

ஜ்வலிக்கும் ப்ரம்மதேஜஸ்ஸைக் கொண்ட யோகசாலையாலிருந்து
சுக்ராசாரியர் மற்றவர்கள் மஹாபலியின் ஸேவகர்கள் இவர் சூரியனோ
அல்லது அக்நியோ அல்லது ஸநத்குமாரரா, என்று ஆலோசித்துக்
கொண்டிருக்கும்போதே, உள்ளே வந்த வாமனரைக் கண்டு யாக
ஸதஸ்ஸிலிருக்கும் அக்நியும் மகாபலியும் எழுந்திருந்து மரியாதை
செய்தனர் / மகாபலி அவருக்கு ஆஸனம் கொடுத்து கால்
களை அலம்பி தீர்த்தத்தைத் தலையில் ப்ரோக்ஷணம் செய்து கொ
ண்டு—பல—உபசாரங்களை [illegible] நமஸ்காரம் பண்ணி
[illegible] வந்திருப்பதாக நினைக்கிறே
ன், உங்கள் வரவால் என் பித்ருக்கள் திருப்தியடைந்தார்கள்
என் குலமே பரிசுத்தமாயிற்று, நான் செய்த புண்யங்களெல்லா
ம் பலமாயின், உங்கள் பாதம் பட்ட பூமியும் பரிசுத்தமாயி
ற்று. தாங்கள் ஏதோ ப்ரயோஜனத்தைக் குறித்து வந்திருப்ப
தாக நினைக்கிறேன், பசு, ஸ்வர்ணம், நல்ல வீடு, நல்லசா
ப்பாடு (போஜனம்) கல்யாணம் செய்து கொள்ள கன்னிகை
கிராமங்கள், குதிரைகள், யானைகள், தேர்கள் இவைகளில் தங்க
ளுக்கு வேண்டியவைகளைக் கேளுங்கள் கொடுக்கிறேன் என்
று கூறினான். பகவான்—அரசனே! நீ ப்ரஹ்லாதனுடைய பேரன், சு
க்ராசாரியனின் சிஷ்யன், உன் வம்சத்தில் ஜனித்தவர்கள் யுத்தத்தில்

சத்திக்க ஸாக்ஷயாக்காமல் இருப்பமாட்டார்கள் யாசிப்பவ
ர்களுக்கு எதையுமில்லையென்று சொல்லமாட்டார்கள், இவ்வா
மானவன் உலகத்திற்குப் பொருத்தமானதனை யாசிப்பது.
ஆகையால் கொடையாளியான உன்னிடமிருந்து என்னுடைய கால
டியால் மூன்றடி பூமியை யாசிக்கிறேன், தன் தேவைக்கு
வேண்டிய அளவு அறிவாளியாயிருப்பான் அதனால் அவனுக்கு பா
பமில்லை என்று கூறினார். பலி - ஹே ப்ராம்மணச் சிறுவனே! உன்
பேச்சுக்கள் வயதானவர்களுடைய பேச்சுக்கள் போலுள்ளன,
நீ சிறுவன் என்றும் புத்தி பக்வமடையவில்லை, ஆகையால் தனக்
கு வேண்டியதைக் கேட்கத் தெரியவில்லை, மூன்று லோகங்க
ளுக்கும் அதிபதியான என்னை வெகுவாகப் புகழ்ந்துவிட்டு மூ
ன்றடி பூமியை யாசிக்கிறாய், நான் ஒரு த்வீபத்தையே
வேண்டினால் கொடுப்பேன், என்னிடம் யாசித்தவன்
மறுபடியும் வேறு ஒருவனிடம் யாசிக்கச் செல்லக்கூடாது, ஆ
கையால் உனக்கு காலக்ஷேபத்திற்கு வேண்டிய அளவு பூ
மியை தானமாகத் தருகிறேன் பெற்றுக்கொள் என்று கூறி
னான். பகவான் - அரசனே! மூன்றடி பூமியால் திருப்தியடையா
தவன் மூன்று லோகங்களாலும் திருப்தியடைய
மாட்டான், ஆசைக்கு அளவு இல்லை, பெரிய பூமண்டலாதி

பக்தியும் அர்த்தகாமங்களால் திருப்தியடையாமலே
ஸம்ஸாரம் விரும்புகிறார்கள் என்று அறிக. கிடைத்ததைக்கொண்
டு ஸந்தோஷமடையாதவன் ஸம்ஸாரத்தில் உழல்வான், கிடைத்த
தைக்கொண்டு ஸந்தோஷமடையும் ப்ராம்மணனுக்குப் பெருமை தேஜ
ஸ்ஸு விருத்தியடையும்; அதிகமாகத் தேவைக்கு மேல் தானம் வாங்கு
ம் ப்ராம்மணனுக்குப் பெருமை தேஜஸ் குறையும். ஆகையால் மூன்
றடி பூமியே போதும் என்று கூறினர். மஹாபலி, அவ்வாறே ஆக
ட்டும் என்று கூறி தானம் கொடுக்க ஜலபாத்திரத்தை எடுத்தான்.
அந்தஸமயம் பலியின் ப்ராஞ்ஞத்தை அபஹரிக்க வந்தவர் விஷ்ணு
என அறிந்த சுக்ராசாரியார் - அரசனே! உன்னுடைய ஐச்வரி
யம் ஸ்தானத்தையும் அபகரித்து தேவர்களுக்குக் கொடுக்க வா
மனையால் ப்ரம்மசாரி வேஷத்துடன் விஷ்ணு வந்திருக்கிறார்;
நீ அறியாமல் ப்ரதிக்ஞை செய்துவிட்டாய்; இவர் பூமியையும்
ஆகாயத்தையும் இரண்டடியாக அளந்து விடுவார். மூன்றாவது
அடி பூமிக்கு என்ன செய்வாய், சொல்தவறினால் நரகமே கி
டைக்கும். தன் ஜீவனத்திற்குக் கேடு நேரும்படி தானங்கொடுத்
தல் செய்யக்கூடாது, ஜீவனத்திற்குக் கிடைக்கும் விதமா
னத்தை ஐந்து பங்காக வைத்து ஒரு பங்கு தர்மத்திற்கு, புகழுக்காக
ஒரு பங்கு, பொருள் விருத்தி செய்ய ஒரு பங்கு, தன் போகத்

தீர்க்கவேண்டு, பந்துக்களவேண்டுமென்று வாறி
மோகிப்பவனை ஸ்ரீராமனையோ லோகத்தில் என்னை
யும் எவனுக்கும் கொடுக்காமல் இல்லையென்றே சொ
ல்லுகிறபடி, எனதுயும் தருகிறேன் என்று சொல்லியி
ருப்பது. அப்படியிருந்தால் தான் பெரிதாயிருக்கும் அது
போல் தன் ஜீவனத்திற்கு வைத்துக்கொண்டிருந்தா
னதுரோகங்கள் செய்யவேண்டும், ஆனையால் ஸ்திரீகளின் தி
ருத்தி செய்வதற்க்கும் விவாஹவிஷயத்திலும், பராணுபந்து
க்காலத்திலும், ஜீவனத்திற்கு கேடுவருங்காலத்திலும்
பசுப்ராமணனிவர்களைக் காப்பாற்றுவதற்க்கும் பொ
ய் சொல்லலாம் பாபமில்லை யென்பது ஸ்ம்ருதி சாஸ்திரம் ஆனது
பற்றி விவாதிக் கேட்டபடி கொண்டாட்டால் பாபமில்லை
என்று சொன்னேன். மஹாபலி - ஆசார்யரே! கீழ் சொன்ன
ஜீவனத்திற்க்கு இடம் ஏற்படும்படியாக தீங்கு செய்யக்
பாவென்றுதான் சொன்ன நீதி சாஸ்திரம் அர்த்த சாஸ்
திரம், தர்ம சாஸ்திரத்தின்படி நான் பிரதிக்ஞை செய்தபடி
ராஜ்யபண்டாரத்தை கொடுக்காவிட்டால் பொய்
சொன்ன பாபமும் ப்ரதிஞாவிருத்தமும் எனக்கு அ
பகீர்த்தியும் ஏற்படும் பொய் சொல்லுகிறவனை லோகமென்

ஜலதாரத்தை விடியாது என்று பூமிதேவி கூறினாள். ஸத்ய
த்தைக் காட்டிலும் உயர்ந்த தர்மம் கிடையாது, ராஜ்யம் போனாலும்
நரகம் கிடைத்தாலும் மரணம் ஏற்பட்டாலும் ப்ராமணர்களை ஏமாற்றமா
ட்டேன். மரணத்திற்குப் பின் தேகத்தை விட்டுத்தான் மனிதன் செல்லப் போ
கிறான். உயிர் போனாலும் கொடுத்த தானம் செய்வதில் தவறில்லை.
தானத்தால் ஸ்ரீ பரமாத்மாவை நேரில் அடைவதால் புண்யமே,
ததீசி முனிவர், சிபி சக்ரவர்த்தி முதலானவர்கள் உயிரையே
கொடுத்து கீர்த்தி பெற்றார்கள். யுத்தத்தில் உயிரைக் கொடுப்பவர்க
ளைக் காட்டிலும் ஸத்பாத்ரம் கிடைத்த காலத்தில் தானம்
கொடுப்பவர்கள் அதிகமாக சுவர்க்கத்தை அடைந்து யா
காதிகள் செய்கிறார்களோ அவரே நேரில் வந்து தானம்
கேட்கும் பொழுது இல்லை என்று சொல்லலாமா, என்று
ல் அவர் கேட்டபடி தானம் கொடுக்க முடியாமல் அதர்மமா
காக் கூடாது. அவர்க்கு ஐசுவர்யம் கொடுக்கவே செய்வேன்
ஹரியே ப்ராமண வேஷத்துடன் வந்திருப்பவரா அல்லது
ப்ராமண வேஷத்துடன் வந்திருப்பவன் ராக்ஷஸனாயினும் மறுக்க
யாவரும் மாட்டேன், கொடுக்கவே செய்வேன் என்று கூறினான்
இவ்வாறு தன் சொல்லை மீறியதால், சுக்ராசார்யார் சீக்கிரத்திலே
யே உன் ராஜ்யம் அழியட்டும் என்று சாபம் செய்தார்.

269

+ விந்த்யாவலி கெண்டியால் ஜலம் வார்க்கும் பொழுது சுக்ரன் கெண்டியின் த்வாரத்தை ~~அ...~~ வண்டு ரூபத்துடன் அடைக்க வாமனர் தர்ப்பையால் குத்த சுக்ரனுடைய ஒரு கண் கெட்டது என்று வேறு புராணத்தில் உள்ளது.

மகாபலி இவ்விதம் தன் குரு சாபமிட்டும் ஸத்யம் தவறாது வாஜக வாமனரை ஆஸனம் கொடுத்து பாதங்களை அலம்பி தீர்த்தத்தை சிரஸில் ப்ரோக்ஷித்துக்கொண்டு பலி பத்நி விந்த்யாவலியுடன் ஜலம் வார்க்க தானம் கொடுத்தான்,+ அவனுடைய பெருமையைக் கண்டு தேவர்கள் புஷ்பமழை பொழிந்தார்கள். உடனேயே பகவானுடைய சரீரம் விச்வரூபமாக வளர்ந்தது. அந்த சரீரத்தில் பலி பதினாலு லோகங்களையும் பார்த்தான், சங்க சக்ர கதா பாணியான அந்த ரூபத்தைப் பார்த்து ஸனந்தனர் முதலான பக்தர்கள் ஸ்துதி செய்தார்கள். வாமனர் ஒரு அடியால் பூமியெல்லாவற்றையும் அளந்து இரண்டாவது அடியால் மேல் உலகங்களையெல்லாம் அளந்தார், மூன்றாவது அடிக்கு இடமில்லை, ப்ரம்ம ஸத்யலோகத்தில் பகவானுடைய பாதங்களை அலம்ப ப்ரம்மன் கமண்டலு ஜலம் எடுத்துக்கொண்டார், அது தான் பாபம் போக்கும் கங்கை தெய்வமாக ஆகின்றது, ப்ரம்மலோகத்திலுள்ளவர்கள் பூஜித்து ஸ்துதி செய்தார்கள். ஜாம்பவான் அந்த வாத்ய பேரிகை வாத்யத்தை முழக்கிக்கொண்டு திக்கெல்லாம் ப்ரதக்ஷிணம் செய்தார். தீனமாயிருந்த யஜமானர் பொய் சொல்லவில்லையாமல் பேயாதுஉன்று கோபத்துடன் அஸுரர்கள் வாமனரிடம் யுத்தம் செய்ய ஆரம்பித்தார்கள். விஷ்ணுவின் ஸைன்யங்கள் அவர்களை எதிர்த்து யுத்தம் செய்ய ஆரம்பித்தார்கள். மஹாபலி ப்ரா

மஹாபலி தன்னுடைய லோகமான மூன்று லோகங்க
ளையும் இரண்டடிக்கு அளித்தான் மூன்றாவது அடிக்கு தன்
னை சிரசை அளித்தான், அனைத்தையும் கொண்டார் வாமனர். அவ
னை தேவர்கள் காலை வைத்து பாதாளத்தில் தள்ளினான் [illegible]
கொடுப்பட்டவன்

(ஆ)த்துயுத்தம் செய்வதால் ப்ரயோஜனமில்லை வேண்டாம் என்று தடுத்

தான். அவர்களும் ரஸாதல லோகத்திற்குச் சென்றார்கள். பகவானுடை

ய அபிப்ராயமறிந்து, மூன்றாவது அடி பூமி கொடாததால் கருடன் பலியை

பாசத்தால் கட்டினான். சொன்ன பூமி கொடாததால் [illegible] அடைவாய்

என்று அறியும் பகவானே, பலி கலங்காமல் பகவானே நான் உமது

பதாகத்திற்கான் நினைத்தால் தங்கள் திருவடியை என் சிரசில் வையுங்

கள். அயோக்யனான என்னை அபயர் எனக்கு வரவேண்டாம், என்பதாமனோ ப்ரஹ்

லாதன் ஸர்வத்தையும் தியாகம் செய்து அடியாத தங்களுடைய திருவடி

தனை அடைந்தான். யோகிகளுக்குங் கிடையாத பாக்யம் எனக்குக் கிடைத்த

து என்று சொல்லிக் கொண்டிருக்கும் போது ப்ரஹ்லாதன் அங்கு வந்தான்

பாசத்தால் கட்டுண்டிருக்கும் பலி அவரை சிரஸால் வணங்கினான்.

ப்ரஹ்லாதன், பகவானே தாங்கள் பலிக்கு அநுக்ரஹம் செய்தீர்கள் என்

று கூறி பகவானை வணங்கி ஸ்துதி செய்தான். பகவானே தாங்கள் ஸ்ரு

ஷ்டி செய்த லோகங்கள் தங்களுடைய அவ லீலைகள் வந்தனைய

ன்று தங்களை பதாகக் கூறுகிறார்கள் என்று ப்ரஹ்லாதன் [illegible]

னான். ஹே தேவதேவனே மஹாபலி தன்னுடைய ஸகல ஸொத்துக்க

ளையும் தங்களுக்குக் கொடுத்துவிட்டான், தங்களுடைய பாதங்களில்

அர்ச்சனம் பண்ணி ஸமர்ப்பணம் செய்தாலும் உத்தம கதிகி

டைக்கும். அப்படி இருக்க ஸகல ஐச்வர்யத்தையும் அர்ப்பணம் செய்த

இவனுக்கு உண்டான அவஸ்தை நீக்கிடுங்கள் என்று ப்ரஹ்மா கூறினார். பகவான் — பணத்தால் கர்வமுடையவன் என்னையும் மற்றவரையும் அவமதிப்பான். அவ்வாறு இல்லாதவனை அனுக்ரஹம் செய்வதற்காகவே அவனை ஐச்வர்யத்தை இழக்கும்படி செய்கிறேன். பலிக்கு கீர்த்தி கிடைக்கும். ராஜ்ய ப்ரஷ்டனாயும் கஷ்டப்பட்டாலும் மனம் கலங்காமல் ஸத்யத்தைக் காப்பாற்றினான். ஆகையால் இவன் ஸாவர்ணி மன்வந்தரத்தில் இந்திரனாக ஆவான். அதுவரையில் ஸகல ஸௌக்யங்களுடன் ஸுதல லோகத்தில் அஸுரர்களுடன் வஸிக்கட்டும் என்று ப்ரஹ்மாவிடம் கூறிவிட்டு, பலியிடம் கூறினார் — ஸுதல லோகத்தில் அஸுரர்களுடன் வாஸம் செய்து அங்கு உனக்கு ஆபத்து இன்றி என்னுடைய ஸுதர்சனம் ரக்ஷிக்கும், நானும் உனக்கு அங்கு என்றும் தரிசனம் கொடுத்துக் கொண்டிருக்கிறேன், உனக்கு அஸுர ஸ்வபாவமும் நீங்கும் என்று கூறினார். பிறகு மஹாபலி ப்ரஹ்மாவையும் பரமசிவனையும் வணங்கிவிட்டு அஸுரர்களுடன் சென்றான். பகவானுடைய ஆக்ஞையால் ப்ரஹ்லாதனும் பலியுடன் சென்றான். பகவானுடைய ஆக்ஞையால் சுக்ராசாரியார் பலி யாகத்தைப் பூர்த்தி செய்தார். இந்திரன் ஸ்வர்க்க ராஜ்யத்தையும் வைபவத்தையும் திரும்பப் பெற்றான். ப்ரஹ்மா முதல ஸகல தேவர்களுட

னும் சேர்ந்து ஸகலதேவர்களுக்கும் அதிபதியாக பகவானை உபேந்தி
ரனாகச் செய்தார். இந்திரன் உபேந்திரனுடன் ஒருவித பயமுமின்றி தேவ
ராஜ்யத்தை அரசாட்சி செய்தான். வந்திருந்த ஸகல தேவரிஷிகளும் பகவானு
டைய கீர்த்திகளை கானம் செய்துகொண்டு தேவர்களிருப்பிடம் சென்றார்க
ள். இந்த வாமனவதார சரித்திரத்தைக் கேட்பவர்களும் படிப்பவர்களும் மோ
க்ஷத்தை அடைவார்கள். மேலும் இந்த சரித்திரத்தை தேவகாரியம் பித்ருகாரி
யம் நடக்கும்பொழுது படித்தால் அது அக்ஷய பலனைக் கொடுக்கும் ॥ 8-23

மத்ஸ்யாவதாரக் கதை —

ஒருசமயம் ப்ரும்மாவானுடைய ஒரு பகல் காலம் முடிந்து ராத்ரி
ஆரம்பகாலத்தில் கல்ப ப்ரளயம் ஏற்பட்டது, பூலோகம் முதலா
னவை ஜலத்தால் மூழ்கின, ப்ரும்மா நித்திரை செய்ய ஆரம்பித்தா
ர். அந்த ஸமயம் ஹயக்ரீவன் என்ற அஸுரன் ப்ரும்மாவின்
முகத்திலிருந்து வேதங்களை அபகரித்துச் சென்றான். திராவிட
தேசாதிபதியான ஸத்யவ்ரதன் என்ற ராஜரிஷி விஷ்ணு பக்
தன். அவர் ஒருகாலம் கிருதமாலா என்ற நதியில் அனுஷ்டா
னம் செய்துகொண்டு அர்க்யம் (தர்ப்பணம்) செய்யக் கையில் ஜலத்தை
எடுத்தார், அந்த ஜலத்தில் ஒரு சிறு மீன் விழுந்தது, அவர் ப
யந்து அதை நதிஜலத்தில் விட்டார், அந்த மீன், அரசனிடம்
பெரிய மீன்கள் என்னைத் தின்றுவிடாதபடி காப்பாற்றும் என்று

று அவர் அதைத் தன் ஜலபாத்திரத்தில் போட்டுத் தன் ஆசி
ரமத்திற்குக் கொண்டு ~~கொண்டு~~ சென்றார். அந்த மீன் ஒ
ரே நாளில் பெரிதாகி இருந்த இடம் எனக்குப் போதாது என்று கூ
றியது. அதைப் போதாமல் வாய்க்கால் குளம் என்று
கடைசியாகத் தன்னுடைய பலத்தால் ஸமுத்திரத்தில் சேர்த்தா
ர். அந்த மீன் நூறு யோஜனை தூரம் பெரிதாக உயர்ந்து நி
ன்றதைக் கண்டு ஆச்சரியமடைந்து, தாங்கள் யார்? நாராயணனாகத்
தான் இருக்க வேண்டும். என்னுடைய இந்த ரூபம் எதற்காக என்று
கேட்டார். பகவான் - இன்றிலிருந்து ஏழாவது நாள் மூன்று லோ
கங்களும் ஜலத்தால் மூழ்கப் போகிறது, என்னுடைய தூண்டு
தலால் ஒரு தோணி வரும். அதில் ஸகல தான்ய வர்க்கங்களுடன் ஸப்
த (7) ரிஷிகளுடனும் ஏறி அமர்ந்திருப்பீர்கள். அந்த ஜலத்தில்
காற்றினால் தோணி தத்தளிக்கும் பொழுது நான் மீண்டும் வ
ந்து உடன் என்னுடைய கொம்பில் பெரிய பாம்பினால் அந்
த தோணியைக் கட்டிவிடுங்கள். நான் அந்த தோணியை ப்ரம்மா
வின் இரவு காலம் முடியும் வரை இழுத்துக் கொண்டு ஸஞ்சார
ம் செய்கிறேன். அந்த ஸமயம் உனக்கு ஸகல தத்வத்தை உபதே
சிக்கிறேன் என்று கூறி மறைந்தார். அவரும் தர்ப்பாஸனத்தில் அம
ர்ந்து பகவானை தியானம் செய்து கொண்டிருந்தார். ப்ரளய ப

ஏழாவது நாள் நினைவுபடி மழை பொழிய ஸமுத்ரம் பொங்கி
ஸத்ய பகவானை த்யானம் செய்தார்; அப்பொழுது பூமிதேவியே
தோணியாகவர அதில் ஸகலதான்யங்களுடன், ஸப்த ரிஷிகளு
டன் ஏறி நிர்த்தாணும் அமர்ந்தார், அப்பொழுது ஸமுத்ரத்தில் ஒரு
லக்ஷ விஸ்தாரத்துடன் தங்கநிறமாகவும் ஒரு கொம்புள்ளதாகவு
ம் ஒரு மீன் வந்தது. முன்பு பகவான் கூறியபடி ஒரு பெரிய பா
ம்பாகவே தோணியை மீனுடைய கொம்பில் கட்டினார். பகவா
னை ஸேவையாக ஸ்தோத்ரம் செய்தார், பகவான் அந்த ப்ரளய
ஸமுத்ரத்தில் ஸஞ்சாரம் செய்து கொண்டே அரசனுக்கு தத்வோ
பதேசம் செய்தார். அந்த மத்ஸ்ய புராணத்தை ரிஷிகளும் கே
ட்டார்கள். அந்த ப்ரளயம் முடிந்ததும் ரிஷிகளையும் அரசனை
யும் அனுப்பிவிட்டு ஹயக்ரீவ அஸுரனைத் தன் கொம்பால்
இத்திஸம்ஹாரம் செய்து வேதங்களை வாங்கித் தெரிந்து ப்ரம்ம
மாவுக்கு அளித்தார். அந்த ஸத்யவ்ரத அரசன்தான் பின்
பு வைவஸ்வத மநுவாக ஆனான். இந்த மத்ஸ்யாவதாரகதை
யைப் படிப்பவர்கள் ஸர்வ பாக்கியங்களையும் புண்ய லோகத்
தையும் அடைவார்கள். எட்டாவது ஸ்கந்தம் முற்றிற்று.

இந்த மத்ஸ்யாவதாரம் ஸத்யவ்ரத ராஜரிஷிக்கு கல்ப ப்ரளயத்தைக்
காண்பித்து ஆத்ம தத்வோபதேசம் செய்து வேதங்களை அபகரித்த ஹயக்ரீ
வாஸுரனை வதம் செய்து வேதோத்தாரணம் செய்வதற்காக

॥ ஸுத்யும்ன உபாக்யானம் —

1 ப்ரஹ்மாவின் புத்ரன் மரீசி முனிவர் அவருடைய புத்ரன் கச்யப மு-
னிவர் அவருடைய புத்ரன் விவஸ்வான் என்ற ஸூரியன், ஸூரியனுக்
கு ஸம்ஞ்ஞை என்ற பத்னியிடம் பிறந்தவர் இவரே வைவஸ்
வத மனு என்பவர். அவருடைய பத்னி ச்ரத்தை என்பவள், அவர்
களுக்கு புத்ரனில்லாமையால் வஸிஷ்டர் புத்ர யாகத்தைச் செ-
ய்வித்தார். ச்ரத்தை "ஹோதா" என்ற ரித்விக்கிடம் எனக்கு பெண்
வேண்டுமென்று ப்ரார்த்தித்தாள், யாகம் முடிந்து யாகவேதியி
ன் இருந்து பெண் பிறந்தது, மனு விரும்பியதோ புத்ரனை வேண்டி செ-
ய்த யாகத்தில் பெண் பிறந்ததால் என்ன விசாரித்தபோது
"ஹோதா ச்ரத்தையின் வேண்டுகோளின்படி தேவதையை த்யா
னித்து ஹோமம் செய்ததால் என்றறிந்த வஸிஷ்டர் மேலும் அப்பெண்ணை புருஷ
னாக வேண்டி ஸ்ரீஹரியை ஸ்துதி செய்து அதனால் இளா என்ற பெண்
ணை ஆணாக செய்து ஸுத்யும்னன் என்று பெயரிட்டார்கள்.
ஸுத்யும்னன் ஒரு ஸமயம் வேட்டைக்குச் சென்று மே-
ரு பர்வதச் சாரலில் உள்ள வனத்தில் நுழைந்தான். அங்-
கு சென்றதும் ஸுத்யும்னன், குதிரை ஸைனியங்கள் எல்லோரு-
ம் பெண்களாக மாறிவிட்டார்கள். அதன் காரணம் - ஒரு ஸமய-
ம் பார்வதி பரமேச்வரனுடைய மடியில் இருக்கும்போது அங்-
கும் பெரு முனிவர்கள் சிவ தரிசனத்திற்காக வந்தார்கள்,

அதனால் பார்வதி லஜ்ஜையடைந்து ஓடினாள், பரமசிவன் இனிமேல்
இந்த வனத்தில் வந்தவர்கள் ஸ்திரீகளாகக்கடவதென்று சாப
ஞ்செய்தார், இந்த வரலாறு ஸுத்யும்னன் அறியாமல் அதனால் இந்
ப்பட்டது। பிறகு ஸுத்யும்னன் வனத்தில் ஸஞ்சாரம் செய்துகொண்
டிருக்கும்போது தேவியான அவளைக்கண்டு சந்திரனுடைய
புத்ரனான புதன் மோஹமடைந்து தன் ஆச்ரமத்திற்கு அழைத்துச்செ
ன்றான், அவர்களுக்கு ஒரு புத்ரன் உண்டானான், அவனே புரூரவஸ்
ஸு சந்த்ரவம்ச அரசர்களில் ப்ரஸித்தமானவன், ஸுத்யும்னன்
வஸிஷ்டரை நினைத்தான், வஸிஷ்டர் பரமசிவனை ஸ்துதி செய்து இவ
ன் ஒரு மாதம் புருஷனாகவும் ஒரு மாதம் ஸ்திரீயாகவும் இருக்க வரம்
கொடுத்தார், அதன்படி புருஷனாகிருக்கும் பொழுது ராஜ்யபரி
பாலனம் செய்தும் ஸ்திரீயாகிருக்கும் க்ருஹரஹஸ்யமாகவும் இருந்து
வந்தான், இதை ப்ரஜைகள் விரும்பவில்லை, அவன் புருஷனாகி
ருக்கும்பொழுதும் ஒன்றும் பண்ணாமலிருந்தார்கள், ஸுத்யும்னன் ப்ர
ஜைகளின் அபிப்ராயத்தின்படி புரூரவஸ் என்ற புத்ரனுக்கு ரா
ஜ்யாபிஷேகம் செய்து காட்டிலே தவம் செய்ய வனம் சென்றான்॥

பிறகு மனு யமுனைக்கரையில் தவம் செய்து அதனால் அவ
ருக்கு இக்ஷ்வாகு முதலான பத்து புத்ரர்கள் பிறந்தார்கள் அவர்க
ளில் சர்யாதி என்பவருக்கு ஸுகன்யா என்று பெண்।

ஸீதாத்யா உபாக்யானம் —

ஒருஸமயம் ஜனகாதிராஜன் பரிவாரங்களுடன், ஸகிகளோ
டேதன் பெண் ஸீதையையும் அழைத்துக்கொண்டு பிரிய
வனமொன்றிலுள்ள ஆச்ரம ப்ரதேசம் சென்றார். ஸீதை
யை அங்கு ஸகிகளுடன் வனத்தின் அழகைப் பார்த்துக்கொ
ண்டுவரும் பொழுது அங்கொரு புற்றில் கூட்டிப் பார்த்தாள்
அதில் மின்மினிப்பூச்சி போல் இரண்டு ஒளியைக் கண்டு இ
றைப் புதுவிதமென நினைத்தாள். அதிலிருந்
து ரக்தம் வந்தது அவள் கவனிக்கவில்லை, உடனே அங்கு
வந்திருந்த நல்லோர்களும் மஹரிஷிகளும் தர்சனம் செய்ய
யாமல் திகைக்கப்பட்டார்கள். இதன் காரணத்தை அரசி
க்கும்பொழுது ஸீதையைத்தான் செய்ததை யதார்த்தமாகச்
சொன்னாள். அவர்களெல்லாம் புற்றை அப்புறப்படுத்த
வம் செய்து கொண்டிருந்த முனிவர் கோபம் கொண்ட
தி வெளியே வந்தார். அரசன் அவரை ஸமாதானம் செ
ய்து காப்பாற்றவேண்டி எவ்வளவோ சொல்லியும் இவரி
கோபமும் தணியவில்லை. பணிவிடை செய்து காப்பாற்
றுபவர் பின்னவளைத் தவிர வேறு ஒருவரும் ஆகமாட்டார்
ஆகையால் உன் பெண் என்னைக் காப்பாற்றும் செய்து கொள்ளட்டும்

ஸுநீதா! இந்த வருத்தமான கேட்டை நிவர்த்திக்க ராஜகன்னிகை
யான என்னை என்ன விதம் கொடுப்பேன் என்று அரசன் யோசி
த்தான். ஸுகன்யையை தன் பதியினிடம் என் சொல் வார்த்தை கஷ்
டத்தை தானே தீர்க்கிறேன் என்று இவர்களுக்கு பணிவாயும் செ
ய்து கொடுப்பதால் பல பேருக்கு கஷ்டம் தீர்கிறது. நான் இந்த ராஜ
குணி ரிஷிக்கு ஸகல ஹத்தியும் பணிவிடை செய்து கொண்டு என்
பாதிவ்ரத்யம் தவறாமல் இருந்து வருவேன் என்று கூறினா
ள். அரசன் மிகவும் வருத்தத்துடன் அவளை விவாஹம் செய்து
கொடுத்து வட்டத்தை பட்டணம் சென்றார். ஸுகன்யை இவி
கவும் கோபமில்லாமல் இருந்த போதிலும் அவர் மனது அறிந்து இ
ருந்து உடன் பணிவிடை செய்து வந்தாள். சில ஸமயம் அந்த இட
ப்ரதேசத்தில் தேவவைத்யர்களான அச்வினி தேவர்கள் வந்
திருந்தனர். அவர்கள் அந்த தடாகத்தில் இருந்து ஜலம் கொண்டு சென்றும்
ஸுகன்யையை பார்த்து பெண்ணே நீ யார் என்று கேட்டதற்கு
அவளால் ச்யவனருடைய மனைவி என்று ஸுகன்யா தெரிவி
க்க அனுமதித்து சொல்லப்பட்டார்கள். அவர்களுக்கு ச்யவன
ர் மரியாதை செய்து தனக்கு நல்ல தேஹமும் யௌவனவயதை
யும் அருள வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். அவர்கள்
நாங்கள் இருவரும் தேவர்களின் வைத்யர்கள் என்பதால்

னர்களுக்கு யாகங்களில் பாகம் கொடுக்கப்படவில்லை
தாங்கள், அதை (நாங்கள்) அடையும்படி வழக்கத்தை ஏற்படுத்த வேண்டும்;
அப்படியானால் நீங்கள் கேட்டபடி வயதையும் பெருமையும் அளிக்
கிறேன் என்றுரைத்தார்கள். ச்யவனர் அங்கீகாரம் செய்து உ,
றுதியளித்தார். பிறகு ச்யவனரை அழைத்துக்கொண்டு
யாகம் சென்று ஸுகன்யையும் கூட வர தேவர் இருவரும் இவரி
யும் மேவடும் ஸ்தலத்தில் மூழ்கி எழுந்தார்கள், மூவரும் கொஞ்ச
மும் வேற்றுமையின்றி ஒரே மாதிரியாக இருக்கக்கண்டு ஸுக
ன்யை திகைத்தாள்; தேவர்கள் உன்பர்த்தாவை வரித்துக்கொள்
என்று கூற அவள் அந்த தேவர்களை ஸ்துதி செய்து தன்னு
டைய பதிவ்ரதா தர்மத்தின் மகிமையால் தன் பர்த்தாவான
கழுத்திலே பூமாலையைப் போட்டாள். ச்யவனரும் ஸுகன்யை
யும் ஸந்தோஷமடைந்தார்கள், தேவர்கள் விடைபெற்று தேவலோ
கம் சென்றார்கள்॥ பிறகு சிலகாலம் சென்று சர்யாதிராஜன்
ஒரு யாகம் செய்யத் தீர்மானித்து ச்யவனருடைய ஆச்ரமத்
திற்கு வந்தார். ஆச்ரமத்திலுள்ள தன் பெண் ஒரு யௌவன
புருஷனுடனிருப்பதைக் கண்டு திகைத்துவிட்டார், ஆடிவந்து வ
ணங்கிய தன் பெண்ணை ஆசீர்வாதமும் செய்யவில்லை. மேலும்
அரசன் கூறினார் — ஏ துஷ்டையே! உலகம் போற்றும் முனி

வரைநமாற்றி வேறு ஜாரபுருஷனுடன் கூடி சுகமாக இருக்கிறாயே,
நற்குலத்தில் பிறந்தவளுடைய புத்தி இப்படிக் கெட்டுவிட்டது; ஜார
புருஷனுடன் இருக்கிறாயே லஜ்ஜையில்லாமல் என்னுடையவும் பித்ரு
னுடையவும் இக்குலத்திலுள்ளவர்களையும் அபகீர்த்தியடையும்படிச் செய்துவி
ட்டாயே என்று இவ்விதம் கூறிய பத்தினியைப் பார்த்துப் புன்சிரிப்புடன்
ஸுகன்யை தந்தையே உங்களுடைய சௌபாக்கியமான இவன் சி
யவனர் என்று கூறி நடந்ததை விஸ்தாரமாகக் கூறினாள். அரசன்
ஆச்சரியமடைந்து ஸந்தோஷத்துடன் பெண்ணை அழைத்துக்கொண்டு
ரி அரசன் யாகத்திற்கு அழைத்துவிட்டுச் சென்றான். யாகத்திற்கு
ஸகலருடன் இவனைச் சென்று யாகத்தை நடத்திவைத்து அதில்
அச்வினிதேவர்களுக்கு ஸோமபாகத்தைக் கொடுத்தார். இதை
ப்பொறுக்காமல் இந்திரன் வஜ்ராயுதத்தால் இவனை அடிக்கத் தொ
டங்கினான். இவர் அவன் கையை ஸ்தம்பிக்கச் செய்து
அச்வினி தேவர்களுக்கு ஸோமபானம் கொடுத்து
மஸ்தம் பரிகாசம் செய்துவிட்டார். பிறகு தேவர்களுடன் இந்திரனும்
மன்னித்தான் என்றதையும் ரிஷியாகிய சியவனரைப் புகழ்ந்து சென்றான்॥
இந்த சரித்திரம் மிகவும் விஸ்தாரமாக தேவீபாகவதத்தில் கூறப்பட்டிருக்கிறது॥

அம்பரீஷ உபாக்யானம்.—

வைவஸ்வத மனுவின் புத்திரன் நபகன். அவனுடைய புத்திரன் நாபாகன். அவ
னுடைய புத்திரன் அம்பரீஷன். அவர் சக்ரவர்த்தியாகவும் மஹாபாகவத

உத்தமனாகவும் அரசாட்சி செய்துவந்தான். ஸரஸ்வதீ நதி தீரத்தில்
அச்வமேதயாகம் செய்தான். அவனுடைய பக்தியால் ப்ரீதியடை
ந்து பகவான் ஸ்ரீஹரி, அவனை எப்பொழுதும் ரக்ஷிப்பதற்குத் தன்
னுடைய ஸுதர்சன சக்ரத்தையும் அளித்தார். அவர் பகவானு
டைய ப்ரீதிக்காக த்வாதசீவ்ரதத்தை ஒவ்வொருவருஷம் அனுஷ்டி
ப்பதாகத் தன் பத்நியுடன் ஸங்கல்பம் செய்து அனுஷ்டித்துவந்தா
ன். வ்ரதஸமாப்தி தினமான கார்த்திக மாதம் சுக்லபக்ஷத்வா
தசி தினத்தில் விசேஷமாக பகவானுக்கு ஆராதனம் செய்து
தானங்கள் செய்து உத்தமமானவையாய் அறுபது கோடி கோதான
ம் செய்து ப்ராம்மணோத்தமர்களுக்குப் போஜனம் செய்வித்து த்
வாதசியென்று அவர்களுடைய அனுமதியின் பேரில் தானும்
மூன்று நாள் உபவாஸமிருந்து) பாரணை போஜனம் செய்யப்போ
கும் ஸமயத்தில், பதினாயிரம் சிஷ்யர்களுடன் துர்வாஸமுனிவர் வ
ந்தார். அவரை அரசன் வணங்கி சிஷ்யர்களுடன் அதிதிபோ
ஜனம் செய்யும்படி ப்ரார்த்தித்தான். அவரும் ஆகட்டுமென்று
மாத்யாஹ்நிக ஸ்நானம் செய்யச் சென்றார். ஸ்நான
ம் செய்யும்பொழுது முனிவர் பகவத்யானத்தில் இருந்துவிட்
டார். அன்று த்வாதசி கொஞ்சம் நாழிகைதான் மிகுந்திருந்தது. அதற்
குள் போஜனம் செய்யாவிட்டால் வ்ரதம் பலனில்லாமல் போய்விடும்,

அதிதிக்குப் போஜனமளிக்காமல் தான் போஜனம் செய்யவும் கூடாது
இந்த தர்மஸங்கடத்தில் என்ன செய்வது என்று அரசன் வைதிகர்களான ப்ரா
மணர்களிடம் ஆலோசனை செய்து அவர்களிட்ட தீர்ப்பின்படி கொஞ்சம்
ஜலத்தை மட்டும் சாப்பிட்டால் பாரணை செய்யாத தோஷமும்
அதிதிக்கு முன் போஜனம் செய்த தோஷமும் ஏற்படாது என்று தீ
ர்த்து ஜலத்தை மட்டும் குடித்துவிட்டு பகவானை த்யானம் செய்துகொ
ண்டு முனிவருடைய வருகையை எதிர்நோக்கியிருந்தார். இதற்குள் ய
முனா ஸ்நானத்துடன் வந்த துர்வாஸர் அரசன் ஜலம் குடித்ததை (+) அறிந்து
மிகுந்த கோபத்துடன் அங்கே ப்ரவேசம்
செய்து கொண்டு, ஜ்வலிக்கும் அரசனைப் பார்த்து, கண்ணியமில்லாதவனு
ம் கர்வம் பொருந்தியவனுமான அரசன் என்ன கர்வம் கொ
ண்டவனும் உண்மையில்லாத பக்தியில்லாதவனுமான இந்த அ
ரசனுடைய தர்மமீறுதலைப் பாருங்கள். அதிதியாக வந்த என்னை
அதிதி போஜனத்திற்கு வரித்துவிட்டு அதிதிக்கு போஜனம் செ
ய்விக்காமல் தான் போஜனம் (ஆஹாரம்) செய்துவிட்டான், என்
ன ஆச்சர்யம், அதன் பலனை இப்பொழுதே காட்டுகிறேன் என்
று கூறி தன் ஜடையைப் பிய்த்து அதனால் ஒரு பயங்கரமான க்ருத்
யையை ஸ்ருஷ்டி செய்தார். அந்தக் காளியும் பயங்கர கோபத்துடன் கையில்
வாளை ஏந்திக் கொண்டு அம்பரீஷனைக் கொல்ல

வந்தான் - ராஜாவே ரகுவுடையவன்பால் காமல் பயமின்றி இன்
றுன், பகவானால் கொடுக்கப்பட்ட ஸுதர்சன சக்ரம் தானாகவே
பாய்ந்து காசியை எரித்துக் கொன்று விட்டு முனிவரை நோக்கிச் சென்
றது. முனிவர் பயந்து ஓட சக்ரம் துர்வாஸரைக் கக்கிக் கொ
ண்டே பின் தொடர்ந்தது, அவர் மேருகிரியும் பிரம்மலோகம் தே
வலோகம் எங்கும் ஓடியும் ரக்ஷிப்பாரில்லை, பிறகு மஹா
டம் சிவனிடம் சென்றும் அவர்களும் ரக்ஷிக்காததால்
என்று கூறவே நீட்டம் சென்று விஷ்ணுவின் பாதங்களில்
விழுந்தார். விஷ்ணு - நான் பக்த பராதீனன் எனக்கு ஸ்வா
தந்திரியம் கிடையாது. என் பக்தர்கள் என்னை ஸகலத்
தையும் துறந்து என்னையே சரணமடைந்த பக்தர்களை நான்
விடமுடியாது. ஆகையால் என்னுடைய அந்த பக்தனுக்கு அபரா
தம் செய்தீரோ அவன் காலில் விழுவதே உபாயம் வேறு வழியில்லை,
மேலும், குற்றம் செய்யாத ஸாதுக்களிடம் துன்பத்தை செய்தல்
செய்ய உபயோகித்தால் அந்தக் கேட்டை செய்தவனுக்கே திரும்பும்
சித்தானந்தி, தவம் வித்தை இவைகள் ப்ராம்மணர்களுக்கு நன்
மை செய்யும் ஆனால் அவைகளால் அடக்கமில்லாமல் கர்வ
முள்ளவனுக்கு தீங்கையே செய்யும், ஆகையால் அம்பரீஷனிட
ம் சென்று அவனை ஸமாதானம் செய்யும் என் ஆக்ஞை ர் ||

முனிவர் அம்பரீஷனிடம் சென்று அவன் காலைத் தொட்டார்; அதைக்
கண்டு பெரியவர் காலைத் தொடுவதை சகிக்காமல் வருந்தியவனாய்ச்
சுதர்சன அஸ்திரத்தை ஸ்தோத்ரம் செய்து, நான் கொடை யாகாதி
புண்யங்கள் செய்ததும் ப்ராமணர்களை தெய்வமாக மதித்ததும் பக
வானுடைய ப்ரஸாதத்தைப் பெற்றதும் உண்மையானால் இந்த முனிவ
ரை அஸ்திரம் விடுக்கவேண்டும் என்று ப்ரார்த்தித்தான்; அஸ்திர
ம் சாந்தியடைந்தது. முனிவரும் அரசனைப் புகழ்ந்து ஆசிர்வாதம்
செய்தார். துர்வாஸர் லோகங்களில் சுற்றித் திரும்பி வருவதற்குள் ஒரு
வருஷமானது. அதுவரையில் அரசன் ஜலத்தை மட்டும் ஆகாரமா
கக் கொண்டிருந்தான். இப்பொழுது முனிவருக்குத் திருப்தியாக போ
ஜனம் செய்வித்து அவருடைய ஆசியைப் பெற்றுத் தான் போஜன
ம் செய்தான். துர்வாஸர் அரசனே உன் மஹிமையை மதித்துப் புண்யமா
ன செயலை தேவலோகத்திலும் பூலோகத்திலும் நல்லோர்கள் கொ
ண்டாடுவார்கள் என்று கூறி அவனை வாழ்த்தி ப்ரம்மலோகம் சென்
றார். அம்பரீஷன் பக்தியுடன் ராஜ்ய பரிபாலனம் செய்து புத்
ரர்களிடம் ராஜ்யத்தை ஒப்புவித்து விட்டு வனம் சென்று
பகவத் தியானத்திலிருந்தான். இந்த புண்ய சரித்ரத்தைப் படிப்பவர்
களும் கேட்பவர்களும் பகவானிடம் பக்தியுண்டாகி முக்தியடைவர்
கள். ॥ 9-5 ॥

சௌபரி சரித்ரம்—

இக்ஷ்வாகு வம்சத்தில் "மாந்தாதா" என்பவர் ஏழு தீவுகளுக்கும் சக்ரவர்த்தியாக அரசாட்சி செய்து வந்தார். அவருக்கு புருகுத்ஸன் முதலிய மூன்று பிள்ளைகளும் ஐம்பது பெண்களும் உண்டானார்கள். அந்த சமயம் சௌபரி என்ற முனிவர் யமுனையின் ஜலத்தில் மூழ்கி தவம் செய்து கொண்டிருக்கும் பொழுது மீன்கள் தம்பதிகளாக விளையாடிக் கொண்டிருப்பதைக் கண்டு தானும் விவாஹம் செய்து கொள்ள வேண்டுமென்று ஆவலுண்டாயிற்று. மாந்தாதாவிடம் வந்து தனக்கு ஒரு பெண்ணைக் கொடுக்கும்படி கேட்டார். அரசன் கிழவனுடைய ரூபமுடையதும் அதிருஷ்டமில்லாததுமான தன் பெண்களை ராஜகுமாரிகள் என்றதையும் ஆலோசித்து முனிவருடைய வேண்டுகோளை மறுக்க முடியாததால், முனிவரே என் கன்னிகைகள் எவரை ஸ்வயம்வரமாக வரித்தால் ஆக்ஷேபமில்லை என்று கூறினார். முனிவரும் அப்படிக் கொண்டு மந்திரியால் கன்னியாமாடத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார். முனிவரும் அரசனுடைய மனதையறிந்து அங்கு உட்செல்லும் பொழுதே தன்னுடைய தபோபலத்தால் மன்மதன் போன்ற அழகுடையவனாக மாறிவிட்டார். அவரைப் பார்த்த உடன் ஐம்பது கன்னிகைகளும் எனக்கே இவர் கணவனாகக் வேண்டுமென்று விவாதமுண்டாயிற்று. அரசனும் வேறு வழியில்லாமல் ஐம்பது

பெண்களையும் தெய்வதாகவைப்புக் கொண்டார். ஒரே சேர்த்துத்
தில் ஐம்பதுவாயிரம் மனைவிராக போகசக்தியால் பெற்றதனை
துக்கொண்டு ஐம்பது பெண்களையும் விவாகம் செய்துகொண்
டு வனத்திற்கு அழைத்துச் சென்றார். வனத்தில் தன் தபோ
பலத்தால் ஐம்பது ராஜமாளிகைகளையும் அவைகளில் தேவ
லோகத்தில் உள்ளது போன்ற சகல போகவஸ்துக்களையும்
வேலையாட்களையும் சிருஷ்டி செய்து ஒவ்வொரு கிரகத்திலும்
மன்மதன் போன்ற அழகுள்ள ஒவ்வொரு உருவத்தில் இருந்து
ராஜகன்னிகைகளை ஸந்தோஷமாக இருக்கச் செய்துவரும்
ஸந்தோஷமாக இருந்தார். ஒரு சமயம் மாந்தாதா தன் பெண்
களெல்லாம் எப்படி இருக்கின்றனர் என்று பார்க்க பற்றியுடன் வன
த்திற்கு வந்து பெண்களுடைய ஒவ்வொருவர் வீட்டுக்கும் சென்
று அவர்கள் தன் ராஜ போகத்திற்கும் மேலாக சகல போக
ஸந்தோஷமாக இருப்பதைக் கண்டு ஆச்சரியமடைந்து பெண்
களிடம் உங்களுக்கு என்ன குறை என்று கேட்டான்; அவர்
கள் ஒன்றும் எவ்விதக் குறையுமில்லை என்று சந்தோஷமாக
வாழ்கிறோம். ரிஷி எங்கள் சகோதரிகளுடைய வீடுகளுக்கும் செல்வதில்
ஸந்தோஷம் இல்லை தான் என்று கூறினார்கள். அதனால் மாந்
தாதா ஸந்தோஷமடைந்தார். இவ்விதம் ஸௌபரி முனிவர்

+ ஏராளமான பாவஸ்ருதிகளும் உண்டாயின்று. பாடு பெண்ணுக்குப் பிறப்பு தெலவரே பேத்துடன்

ஸ்ரீ ஸ்வர்க்காச்ரமத்திலிருந்து கொண்டு லோகவழக்கு
அநேக வருஷங்கள் அனுபவித்தார். பின்னர் மீண்டும் முன்
தம் ஆச்ரமம் போன ப்ராமணர்களின் சேர்க்கையைக்
கண்டு பேணப்பட்டு ஸ்வர்க்க இன்பங்களில் திளைத்திருந்தவ
ர் இருக்கின்ற வைகுக்கி விட்டேன். மோக்ஷத்திற்காக பல
யுக்திகள் பெரிய இடையூறாகிவிட்டன. எவ்வளவு காலம் ஸ்வர்க்க
கள் அனுபவித்தால் போதும் என்று திருப்தி ஏற்படாது
இனி மோக்ஷத்திற்காகத் தியானம் செய்ய வேண்டும் என்று
தீர்மானித்து, ஸர்வ வைராக்யம் செய்து கொண்டு தவம்
செய்ய வனம் சென்றார். வனத்தில் தவம் செய்து சென்றார்.
ர் கடைசியில் தன் யோகாக்நியால் மூலாதாரத்தின் சரீரத்
தைத் தகித்தார். அந்த அக்நியிலும் புகுந்து அனும
ரணம் செய்தார்கள் பாதிவ்ரத்ய பெண்மணிகள் பேரிலோகம் சென்று
ர் கள்.// [ஸ்ரீ வால்மீகி ராமாயணம்] ஸூர்ய வம்சத்தில் ப்ரஸித்தமானவர்கள் த்ரிசங்கு, ஹரி
ச்சந்திரன், ஸகரன், கட்வாங்கன், தசரதன் முதலானவர்கள் ||
ராமாயணம் ரகு, அஜன், தசரதர், ராமர் பதிவ்ரத்ய பரிபாலனமென்
ற தர்மத்தைக் காப்பாற்றி ராஜ்யத்தையே தியாகம் செய்தார், தா
மரைப் புஷ்பம் போன்றதும் ஸீதையின் கைப்பட்டால் தோஷமில்லா
யத்தமான அவ்வளவு பதிவ்ரதாவான பாதங்களால் மண்ணையுடன்

வனங்களில் ஸஞ்சாரம் செய்தார். வெகு தூரம் வழி நடந்து களைப்பை
லக்ஷ்மணனும் ஸுக்ரீவனும் தீர்த்து வைத்தார்கள். ஆபரணங்களை மீட்க
ஹநுமானைக் காரப்படுத்தி, அதனால் ஸீதையைப் பரிபூர்ணமாக தேடிவிட
ஸுக்ரீவனுடன் ஸக்யம் செய்துகொண்டு, ராவண ஸம்ஹாரம்
செய்ய வானர ஸைன்யங்களுடன் படையெடுத்து ஸமுத்ரக்கரை
யில் ஸமுத்ரராஜன் பாதை தராததால் கோபமுற்று ஆக்
நேய அஸ்திரத்தை ப்ரயோகம் செய்ய ஸமுத்ரராஜன் வணங்கி அ
ணைகட்ட வழி செய்தான், பாகஸமுத்ரத்தில் அணைகட்டி லங்கை
சென்று ராவணனை ஸேனையுடன் ராக்ஷஸர்களை நாசப்படுத்தி
வனத்தை எரித்து அழிப்பது போல் அழித்து விட்டு பின்பும் அயோத்தி
யை அடைந்து கோஸல அதிபதியாக ஸீதையுடன் பட்டாபிஷே
கம் செய்யப்பட்ட ஸ்ரீஸீதாராமன் நம்மைக் காப்பாற்றட்டும்.

பரசுராமாவதாரகதை —

விஷ்ணுவின் அம்சமான கார்த்தவீர்யார்ஜுனன், அத்ரி மஹரிஷியி
ன் புத்ரனாக அவதாரம் செய்த தத்தாத்ரேயரை குருவாக அடைந்
தான். அவருக்கு சுச்ரூஷை செய்து கொண்டு காலைப்பிடித்து
உபசாரம் செய்யும் பொழுது இவன் யோகாப்யாஸத்தை
நிர்த்தமாடமல் பணிவிடை செய்தான், அதனால் தத்தாத்ரேய
ர் அவனுக்கு ஆயிரம் கைகளைக் கொடுத்தார். மேலும் பெருமை

ஐச்வர்யம் பராக்ரமம் கீர்த்தி யோகசக்தி முதலானவைகளை
யும் அளித்து அனுக்ரகம் செய்தார். அவ்வித ஐச்வர்யங்களுடனு
ம் அதிகப்பலசக்திகளுடனும் மாஹிஷ்மதி பட்டணத்தில் தனக்கு
நிகரில்லாதவனாக அரசாட்சி செய்து வந்தான். ஒரு சமயம்
ராவணன் திக்விஜயம் செய்து கொண்டுவரும் வழியாய் மாஹி
ஷ்மதி பட்டணம் வழியில் ஸமீபமாக ~~நர்மதா~~ நர்மதா
நதியில் ஸ்நானம் செய்து சிவபூஜை செய்து கொண்டிருந்தான்
அச்சமயம் கார்த்தவீரியன் ஸ்திரீகளுடன் ஜலக்ரீடை செய்
து கொண்டு தன்னுடைய கைகளால் நதி ஜலத்தை தடுத்து நி
றுத்தியதால் ஜலம் பெருக்கெடுத்து ராவணனுடைய பூஜைக்குசே
தம் செய்தது. அதனால் ராவணன் கோபித்து படையுடன் யுத்தத்திற்
கு வந்தான். அவனை இழுத்துக்கொண்டு போய் காராக்ருஹத்தில்
போட்டுவிட்டான். பிறகு பிதாமஹன் வேண்டிக்கொள்ள ராவ
ணனை ஸ்நேஹபாவத்துடன் விடுதலை செய்தான்॥
ஒரு சமயம் கார்த்தவீர்யார்ஜுனன் வேட்டைக்கு வனம் சென்று
எதிர்ச்சையாக ஜமதக்னி முனிவரின் ஆச்ரமத்திற்குச் சென்றான்.
முனிவர் அரசனை வரவேற்று அவனுக்கும் பெரிய சைன்யங்களுக்கு
ம் தன்னுடைய காமதேனுவால் உயர்ந்த முறையில் விருந்தளித்தார்.
அரசன் பொறாமை கொண்டு தன் சேவகர்களைக் கொண்டு

காமதேனுவைக் கதறும்பொழுது பலாத்காரமாக அபகரித்துச் சென்றான்.
வெளியே சென்றிருந்த ஜமதக்கினியின் குமாரனான பரசுராமன் வந்து விஷய
மறிந்து அதி கோபத்துடன் வில் அம்பு கோடாலிகளுடன் மாஹிஷ்மதிக்கு யு
த்தம் செய்யச் சென்றார். அரசன் பதினேழு அக்ஷௌஹிணி சைன்யங்க
ளை யுத்தத்திற்கு அனுப்பினான். பரசுராமர் சிவ ப்ரஸாதத்தால் கிடை
த்த தன் ஆயுதங்களாலும் பரசு கோடாலியாலும் சைன்யம் முழுவதையு
ம் ஸம்ஹாரம் செய்துவிட்டார். பிறகு அரசன் யுத்தம் செய்ய வந்து ஒரே
ஸமயத்தில் ஐநூறு விற்களை ஏந்தி ஆயிரம் கைகளாலும் பாணங்களை
ப் பொழிந்தான். ராமன் பாணங்களை அழித்தான். பிறகு மலைகளையும்
மரங்களையும் வாரி வீசினான். மழுவின் கூர் கோடாலியால் ஆயிரம்
கைகளையும் வெட்டி தலையையும் அறுத்தார். அரசனுடைய பதி
னாயிரம் புத்திரர்களும் பயந்து ஓடிவிட்டனர். ராமன் காமதேனுவை அழை
த்துக் கொண்டு ஆச்ரமம் வந்து பிதாவிடம் தெரிவிக்க, பிதாவானவர் ரா
மனிடம் - சக்ரவர்த்தியைக் கொன்றது ப்ராம்மணனைக் கொன்றதற்கு
ஸமமான பாபம் உனக்கு நேர்ந்ததால் அந்த பாபத்தை நீக்க ஒரு வருஷ
ம் தீர்த்தயாத்திரை செய்து வா என்று கூறினார். அவரும் அவ்வாறே
சென்று ஆச்ரமம் வந்தார். ஒரு ஸமயம் பரசுராமரின் தாயார்
ரேணுகை ஸ்நானம் செய்து தீர்த்தம் கொண்டு வரச் சென்றாள். அங்கு
சித்ரரதன் என்ற கந்தர்வன் தேவஸ்த்ரீகளுடன் ஜலக்ரீடை செய்து

+ஆசிரமத்தில்

கொண்டிருந்தாள். ரேணுகை அவளுடைய தேகத்தைப் பார்த்து
ஆச்சரியத்துடன் முனிவருடைய ஹோம வேளையை மறந்திருந்து
நெடுநேரம் கழித்து ஜலத்தை குடத்தில் கொண்டுவந்து
+அனுஷ்டானம் செய்துகொண்டிருக்கும் முனிவருடைய முன்பு
ல் வைத்துக் கைகூப்பி நின்றாள். முனிவர் பத்நியுடைய அத்தியந்த
நிர்மலமான மனோவ்யாபாரத்தை அறிந்து கண் சிவந்து புத்
ர்களிடம் தாயாரை சிரச்சேதம் செய்யும்படி சொன்னார்.
அவர்கள் செய்ய மறுத்து மௌனமாயிருந்தனர். கடைசியில் மூத்த
ன பரசுராமன் பிதாவினுடைய சோகத்தையும் தேஜஸ்
ஸையும் அறிந்து மாதாவை வதம் செய்தார். முனிவர் அவ்வா
ர்த்தையை பரிபாலனம் செய்ததால் உனக்கு வேண்டிய வரத்தைக்
கேள் என்று கூற, ராமரும் மாதாவும் சகோதரர்களும் மீண்டும் பெற
தாயாரும் உயிர்பெற்று எழுந்திருக்க வேண்டும் நான் அவர்க
ளை வதம் செய்தது அவர்களுக்கு நினைவிருக்கக் கூடாது
என்று வரம் கேட்டார். முனிவரும் அவ்விதமே வரமளித்தார்.
எல்லோரும் தூங்கி எழுந்தவர்கள் போல் எழுந்திருந்தனர்.

பிறகு ஒருசமயம் பரசுராமர் தனது சகோதரர்களுடன்
வனம் சென்றிருந்த பொழுது கார்த்தவீர்யனுடைய புத்ரர்கள் தங்
கள் பிதாவைக் கொன்றதற்கு முன் அவமானமடைந்ததற்கும்

பரசுராமரிடம் கோபம் கொண்டு ஆச்ரமத்திற்கு வந்து அக்நி
ஹோத்ரம் செய்துவிட்டு தியானத்திலிருந்த ராமரின் பிதாவான ஜம
தக்நியின் சிரத்தை தாயார் ரேணுகை தடுத்தும் கேட்காமல் தலையை
வெட்டிவிட்டுச் சென்றுவிட்டார்கள். அந்த ஸமயம் ரேணுகை அ
லறியடித்துக்கொண்டு ராம, ராம, என்று கதறினாள். அந்த சப்தத்தை
க்கேட்டு வேகமாக ஆச்ரமத்திற்கு வந்து பிதாவின் மரணத்தா
ல் அதிகுபிதராய் பிதாவின் தேகத்தை ஸஹோதரர்களிடம் காப்பா
ற்றும்படி சொல்லிவிட்டுக் கோடாரியுடன் சென்று அந்த க்ஷத்ரி
யன் ஸேனையும் கொன்று தலை போல் அழித்தார். +அவ்வாறு
க்ஷத்ரியர்க்குக் காலனாய், ஸமந்தபஞ்சகம் என்ற க்ஷேத்ரத்தில்
பித்ருக்களுக்கு தர்ப்பணம் செய்தார். பிறகு
ஆச்ரமத்திற்கு வந்து பிதாவின் உடலுடன் சிரஸ்ஸை ஒட்டவை
த்து பகவானைத் தியானித்து யாகம் செய்து பிதாவை பிழைக்கச்செ
ய்ச்செய்தார். + பூமியை வேதிகையாகவும் பாத்ரமாகவும் இன்னு
ம் க்ஷத்ரியர்களைப் பசுக்களாகவும் (யாகம் செய்தும்) யா
கத்தில் தானம் செய்து பூமி முழுவதையும் ரித்விக்குகளு
க்கு தக்ஷிணையாகக் கொடுத்து ஸரஸ்வதி நதியில் அவப்ருத ஸ்நான
ம் செய்தார். மஹேந்த்ர மலையில் தவம் செய்து கொண்டிருக்கிறார். அடுத்த ம
ந்வந்தரத்தில் இவர் ஸப்தரிஷிகளில் ஒருவராக விளங்குவார். ஸ்ரீ முதலியவர் ஸப்த
ரிஷிமண்டலத்தில் ஒருவராக விளங்குகிறார். பரசுராமாவதாரத்தில்

ஸ்ரீ பூமியிலிருந்து இவ்வை முனிவர்களின் வேண்டுகோளால் தன்மூ
பூமியைவிட்டு பரம யோகத்திற்கு பெயர்ந்து ஸ்ரீ ரகுராஜனுடைய
ந்தத் திடத்தை கோரா ராஜ்யமாகச் செய்தார் என்று புராணவரலா
று॥ தத்தாத்ரேய அவதாரம் யோகஸாஸ்திரத்தையும் ஆத்மதத்வ
ஞானத்தையும் பரவச் செய்வதற்காக. பரசுராமாவதாரம் துஷ்ட
க்ஷத்ரியர்களை வதம் செய்து பூமியின் பாரத்தைக் குறைக்கவே॥ //

யயாதி சரித்ரம் —

நஹுஷ ராஜனின் புத்ரன் யயாதி. அஸுர குருவான சுக்ரனுடை
ய பெண்ணாகிய தேவயானியும் அஸுர ராஜனாகிய விருஷபர்வா
வின் பெண்ணாகிய சர்மிஷ்டை என்பவளும் ஸகிகள். ஒருநாள்
ஜலக்ரீடை செய்யும் பொழுது ஆகாய மார்க்கமாக பார்வதி பரமேச்வ
ரர்கள் செல்வதைப் பார்த்து அந்தப் பெண்கள் அவஸரமாக தங்களுடைய
வஸ்த்ரங்களைக் கட்டிக் கொள்ளும் பொழுது தேவயானியின் வ
ஸ்த்ரத்தை சர்மிஷ்டை அறியாமல் கட்டிக் கொண்டாள். அதனால்
விவாதம் வாக்வாதம் ஏற்பட்டு தேவயானியை சர்மிஷ்டை
ஒரு கிணற்றில் தள்ளிவிட்டு சென்றுவிட்டாள். தேவயானி கிணற்றில்
ஜலமில்லாத இடத்தில் ஆதாரமாக நின்றாள். அந்த ஸமயம் வேட்டை
யாடிக்கொண்டு வந்த யயாதி ஜலம் குடிக்க அந்தக் கிணற்றை எட்டிப் பார்த்
து, அங்கிருந்த பெண்ணிருக்கக் கண்டு தன் மேல் வஸ்த்ரத்தைக் கொடுத்து க
லதுக்கையைப் பற்றி மேலே தூக்கிவிட்டான். அதனைப் பார்த்து

தேவயானி

~~சர்மிஷ்டை~~ — தாங்கள் என் வலக்கையைப் பிடித்துத் தூக்கினதால் தாங்களே எனக்கு
பர்த்தாவாக வேண்டும். நான் சுக்ரனுடைய பெண், ஸகியால் கிணற்றில் தள்ள
ப்பட்டேன். மேலும் ப்ருஹஸ்பதி குமாரனான கசன் என்பவன் ஏற்கெனவே
நான் க்ஷத்ரியனையே பர்த்தாவாக அடைய வேண்டும் என்று எனக்கு சாபம்
கொடுத்திருப்பதால் ப்ராம்மணப் பெண்ணாகிய எனக்கு க்ஷத்ரியனான தாங்
கள் பர்த்தாவாக ஆவதில் தோஷமில்லை என்றாள். அரசனை அனுப்பிவிட்டு
வீடு வந்து தன் பிதாவிடம் நடந்தவற்றைக் கூறினாள். சுக்ரன் ரோஷத்துடன் விருஷபர்
வை வெறுத்து விருஷ்டியென்று தன் செல்வமுடையார். கோபம் வராததால் அசுர
க்கள் உங்களைக் கைவிட்டு விட்டு வந்தேன் என்ன சுக்ரனைத் தேடி ப்ரார்த்தித்தான்.
சுக்ரன் என் பெண்ணினுடைய இஷ்டத்தை நிறைவேற்றுவதைக் கொண்டு என்
ன். பெண்ணும், நான் விவாஹமாகிச் செல்லும்போது அசுரராஜன்
பெண் சர்மிஷ்டை எனக்கு வேலைக்காரியாக அவளுடைய வேலைக்காரிகளு
டன் வந்து பணிவிடை செய்ய வேண்டும் என்றாள். விருஷபர்வாவோ
அப்படிச் செய்து தன் பெண்ணுடைய ஸம்மதத்தைப் பெற்று யயாதிக்கும்
தேவயானிக்கும் விவாஹமாகிச் செல்லும்போது கூட அனுப்பினான்
செல்லும்போது அரசனிடம் சுக்ரன் சர்மிஷ்டையுடன் படுக்கையில் ஸங்க
மிக்கக்கூடாது என்று சொல்லியனுப்பினார். அரசன் அரண்மனையில் வாழ்ந்து கொ
ண்டிருக்கும்போது ஒரு நாள் சர்மிஷ்டை தன் ருதுகாலமானபடியால்
அரசனிடம் வந்து அரசனே தனிமையில் எனக்கும் தாங்கள் புத்ரனை அளிக்க
வேண்டும் என்று வேண்டினாள். அரசன் ஸ்த்ரீயானவள் நியாயமான வேண்டு

கோபிடமிருக்கக்கூடாது என்று தர்மத்தை எண்ணி சுக்ரனு
டைய "தர்மத்தை மறக்கக்கூடாது என்று" வார்த்தையினா
லிந்த தெய்வ கதி என்று கேட்டான். தர்மத்துக்கு தரு
மம், அறம், புண்ணியம் என்று மூன்று பெயர்கள். தேவயானிக்கு யது, துர்வ
சு, என்று இரண்டு பிள்ளைகள். இதை அறிந்து தேவயானி கோபத்துட
ன் பிதாவினிடம் சென்றாள். பின்பு யயாதியும் கூட
ச் சென்று சுக்ரனுடைய காலைப்பிடித்துத் தன்னை மன்னிக்கும்
படி வேண்டியும் கேளாமல் உனக்குக் கிழப்பருவம்
வரக்கடவது என்று சபித்தார். அரசன் சுக்ரனிடம், தங்கள் பெ
ண்ணிடம் எனக்கு இன்னும் ஆசை தீரவில்லை ஆதலால்
தயவு செய்ய வேண்டும் என்று வேண்டினான். சுக்ரனும் உன்னு
டைய கிழப்பருவத்தை மற்றொருவன் தன் இளமையைக் கொடுத்து
மாற்றிக்கொண்டு ஏற்பானேயானால் மாற்றிக்கொள்ளலாமெ
ன்று கூறினார். அதன்படி யதுவிடம் இளமையை வேண்டினான்.
அவ்வாறே புருவைத் தவிர மற்ற நால்வர்களும் வேண்டாமென்று
நிராகரித்தார்கள். புருவானவன் பிதாவின் கிழப்பருவத்தை நிறைவேற்றுவது உ
த்தம புத்ரனுடைய தர்மம் என்று கூறி பின்பு தன் இ
ளமையைக் கொடுத்து பிதாவின் கிழப்பருவத்தை ஏற்றுக்
கொண்டான். யயாதி ராஜன் இளமையுடன் தேவயானியைத் திரு
ப்தி செய்து கொண்டு அநேகம் யாகாதிகளைச் செய்து கொண்டு

சிற்றின்பத்தில் போதுமென்ற திருப்தியில்லாமல் ஆயிரம் வருஷங்கள்
அரசாட்சி செய்துவந்தான்" அதனால் வைராக்கியமடைந்து யயாதி தன்ம
னைவி தேவயானியிடம் - "பிரியே² உலகத்தில், ஆசையுள்ளவனுக்கு, உண்டா
னியங்களும் பசுவும், பொன், பசுக்கள், ஸ்திரீகள் கிடைத்தபோதிலும்
போதுமென்ற திருப்தியேற்படாது. அக்நி - நெய் ஹோமஞ்செய்ய
ச்செய்ய அக்கினி வளர்வது போல் ஆசை பெருகவே செய்யும்,
புத்தியில்லாதவனுக்கு சரீரம் தளர்ந்தாலும் ஆசை தளர்வதில்லை,
விவேகியானவன் ஸகல துக்கங்களுக்கும் காரணமான ஆசையை
விடவேண்டும். ஆசையை விட்டவனுக்கு என்றும் ஸுகமே, தாயார்
பெண், ஸஹோதரி, இவர்களானாலும் தனிமையில் அவர்களுடன்
இருக்கக்கூடாது; ஏனெனில் பலமுடைய இந்திரியங்கள் (வாலிப போதைகளில்) பண்டிதனையுந்
த்தவறாக இழுத்துச் செல்லும். ~~[illegible]~~, நான் ஆயிர
ம் வருஷங்கள் சிற்றின்பங்களை அநுபவித்தும் ஆசை குறையவில்
லை. பகவத்தியானம் செய்து ஸாதுக்களோடு காலத்தைக் கழிக்க
நான், உன்னுடைய மாயையிலிருந்து விலகி உத்தமமானதை நா
டிச்செல்வேன், ஆசையில்லாமல் சென்று பகவானை ஆராதிக்
கப் போகிறேன் என்று கூறி ~~[illegible]~~ பூருவின் யௌவனத்தை அவனுக்
குக் கொடுத்து தன் கிழத்தன்மையை அவனிடமிருந்து பெற்றுக்கொ
ண்டான். பூருவைத் தவிர மற்ற நால்வர்களுக்கும் நான்கு திக்
குகளில் ராஜ்யத்தைப் பகிர்ந்து, நால்வருக்கும் மேலான அதிபதியாக்கி

அதிதியாக நியமித்து வணங்கிச் சென்று பகலானை நியமித்து
நற்கதியடைந்தான்//

சகுந்தலா துஷ்யந்தன் கதை—

பௌரவ வம்சத்தில் பிறந்தவனான துஷ்யந்தன் வனத்தில்
வேட்டையாடச் சென்று கண்வ முனிவர் ஆச்ரமத்தில் மிகுந்த ரூப
வதியான சகுந்தலையைக் கண்டு மோகித்து அவளிடம் விசாரித்து
விஸ்வாமித்ரரின் மேனகையிடம் பிறந்து அவர்களால் வன
த்தில் விடப்பட்டு கண்வரால் வளர்க்கப்பட்டவளை அறிந்து
கொண்டான். சகுந்தலையின் உபசாரத்தைப் பெற்று அவளை
காந்தர்வ விவாஹ முறையாக மனைவியாகக் கொண்டு அன்
று அவளுடன் தங்கி மறுநாள் தன் ராஜ்யத்திற்குச் சென்றான். கண்
வர் இதை அறிந்து சந்தோஷித்தார். உரிய காலத்தில் ஒரு ஆண் குழந்தை
பிறந்து அதற்குக் கண்வர் வைதிக கர்மங்களைச் செய்தார். அ
வனுக்கு பரதன் எனப் பெயர். இளவயதிலேயே சிங்கங்களைப் பி
டித்து விளையாடுவான். முனிவரின் சிஷ்யர்களுடன் சகுந்தலை
புத்திரனை அழைத்துக் கொண்டு துஷ்யந்தனிடம் சென்று விஷயத்
தைத் தெரிவித்தாள். ஆனால் துஷ்யந்தன் அவர்களை ஏற்றுக்கொ
ள்ள மறுத்தான். அப்பொழுது "புத்ரனை" "பரஸ்வ" காப்பா
ற்று" சகுந்தலையை அவமதிக்காதே என்று அசரீரியைக் கே
ட்டு புத்திரனை பரதன் என்று அழைத்து ஏற்றுக்கொண்டான்.

துஷ்யந்தன் வெகுகாலம் ராஜ்யபரிபாலனம் செய்துவிட்டு பரதனுக்கு
ராஜ்யாபிஷேகம் செய்துவிட்டு முக்தியடைந்தான் । பரதன் விஷ்ணுவின்
அம்சமானவன், கங்கை யமுனை தீரங்களில் அநேகம் அச்வமேதமு
தலான யாகங்களைச் செய்து ஏராளமான தானதர்மங்களையும் செய்தான்,
திக்விஜயம் செய்து துஷ்டர்களை அழித்தான் । இருபத்தேழாயிரம் வருஷங்கள்
ராஜ்யபரிபாலனம் செய்து வைராக்கியமடைந்து ஞானத்தால் முக்தியுற்றா
ன் ॥ பரதனுக்கு புத்ரனில்லை மூன்று பெண்கள் ॥ ஸங்க்ருதி என்பவனை புத்
ரன் ரந்திதேவர் என்பவர் தெய்வீகமாகவும் தரித்ரனாகவும் இருந்தார்; ஒரு-
ஸமயம் நாற்பத்தெட்டு நாட்கள் உபவாஸமிருக்க நேர்ந்தது, மறுநா
ள் தைவாதீனமாக ஆஹாரம் கிடைத்து சாப்பிடும் ஸமயம் ஒரு ப்ராம்ம
ண் பசியோடு யாசித்தான்; ப்ராம்மணனிடம் ப்ரியமாக பாவித்து ஒரு பாகம்
அன்னத்தை ச்ரத்தையுடன் கொடுத்தார், மறுபடி சூத்ரன் பசியோடு யா
சித்தவனுக்கு ஒரு பாகத்தைக் கொடுத்தார், மறுபடி நாய்களுடன் ஒரு சண்
டாளன் வந்து கேட்க ஒரு பாகத்தையும் கொடுத்து ஜலம் மாத்திரம் மீதம்
அதைக் குடிக்கும் ஸமயம் ஒரு புலையன் வந்து கேட்க அதையும் கொ
டுத்து பகவானுக்கு அர்ப்பணம் செய்ததாக ஸங்கல்பம் செய்தார்;
அப்பொழுது ப்ரம்ம விஷ்ணு சிவர்களும் தோன்றி அவருடைய கு
ணத்தை பரிசோதிக்கத் தாங்கள் செய்ததென்று கூறி வேண்டிய வர
ம் கேட்கும்படி கூறினார்கள் । உலகத்தில் ஒருவரும் பசிதாகங்களால்

(AA) கர்ணனும் பஞ்ச பாண்டவர்களும் குந்தி, மாத்ரி இவர்களுக்கு சூரியன் முதலான தேவர்களின் தெரிசனத்தாலே பெற்றார்கள் அதிரஸம் பத்ததா லக்கிலே

(இதிஹாஸ வாதியானது)

வருத்தக்கூடாது, நல்லோரிடையத்தக்கதையும் நான்சொ
ல்லுவேன், அதனிலேவந்தால் நன்றுக்கொள்கிறேன் என்று
சொன்னார். சுமேர்த்திக்கேயும் வனம் கிடைக்கும்படியான
ராஜ" // "பாண்டவம்" சந்திரவம்சத்து அரசர்களில் சந்தனு என்பவருக்கு தேவ
காதேவியாடம் மூன்று புத்ரர். பாக அவர்க்கு இரண்டாவதியாட
ம் சித்ராங்கதன் விசித்ரவீரியன் என இருபுத்ரர்கள் சித்ராங்
கதன் யுத்தத்தில் மரணமடைந்தான். விசித்ரவீரியன் காசிராஜ
னின் புதல்விகளான "அம்பிகா" "அம்பாலிகா" என்றவிவை
களையும் ஸ்வயம்வரத்தில் ஜெயித்துக்கொண்டு வரப்பட்டவ
ர்களை விவாஹம் செய்துகொண்டான். சிலநாள்களில் விசித்ர
வீரியன் க்ஷயரோகத்தால் இறந்துவிட்டான். ஸத்யவதியின் வே
ண்டுகோளால் வியாஸர் விசித்ரவீரிய பத்னிகளிடம் திருதரா
ஷ்டிரர் பாண்டுவையும் வேலைக்காரியிடம் விதுரனையும் பெற்றா
ர். திருதராஷ்டிரருக்கு காந்தாரியிடம் துரியோதனன் முதலான து
ரியோதனாதிகளும் துச்சளை என்ற பெண்ணும் பிறந்தார்கள்.
பாண்டுவுக்கு கிந்தமரிஷியின் சாபத்தால் ஸ்த்ரீஸங்கமம் கூடாது. அ
தனால் பாண்டு பத்னியான குந்திக்கு தர்மராஜா, வாயு, இந்திரன்
இவர்களுடைய அனுக்ரகத்தால் யுதிஷ்டிரர், பீமன், அர்ஜுனன் மூவ
ர்களும், மாத்ரி பத்னியிடம் அச்வினிதேவதைகளால் நகுலன்

(AA)

ஸஹதேவன் இவர்களும் ஸஹோதரர்கள் இந்த பஞ்சபாண்டவர்களி
ன் வம்சம் பாரதயுத்தத்தில் மடிந்ததால் உத்தரையின் கர்ப்பத்தில் இரு
ந்த சிசுவை பகவான் அச்வத்தாமாவின் அஸ்திரம் அழிக்காமல் காப்
ப்பாற்றினார். அவரே பரீக்ஷித், விஷ்ணுராதன் என்பவர் இந்த வம்சம் கலி
யுகத்தில் க்ஷேமகன் வரையில் தான். ரோமபாத ராஜனுக்கு ஸந்ததியின்மை
யால் தசரதர் தன் பெண்ணாகிய சாந்தையை ஸ்வீகாரமாகக் கொடுத்தார்
அவளை ரிஷ்யசிருங்க முனிவர் மணந்தார். ஸூர்யப்ரஸாதத்தால் குந்தி
க்கு பிறந்த கர்ணனை ஆற்றில் விட, அவனை அதிரதன் என்பவன் வளர்த்தா
ன். கர்ணபுத்ரன் விருஷஸேனன். யயாதியின் புத்ரன் யது இந்த வம்சத்தில்
கார்த்தவீர்யார்ஜுனன் பிறந்தான். இந்த பரம்பரையில் தேவகன் உக்ரஸேன
ன் ஸஹோதரர்கள். தேவகனுக்கு நான்கு புத்ரர்களும் தேவகி முதலான ஏழுப
ெண்களும், ஏழு பெண்களையும் சூரன் என்பவனுடைய புத்ரன் வஸுதேவர் ம
ணந்தார். உக்ரஸேனனுடைய புத்ரர்களில் ஒருவன் கம்ஸன். வஸுதேவரின் ஸ
ஹோதரிகளில் ஒருவள் குந்தி. வஸுதேவருக்கு ரோஹிணியிடம் பலராமன் முத
லானவர்களும், தேவகியிடம் எட்டு புத்ரர்களும் ஸுபத்ரா என்ற பெண்ணும். வஸு
தேவர் தேவகி தம்பதிகளிடம் பகவான் ஸ்ரீமந்நாராயணன் எட்டாவது புத்ரனா
க அவதாரம் செய்து கோகுலம் சென்று சத்ருஸம்ஹாரம் செய்து அநேகம்
ஸ்திரீகளை விவாஹம் செய்து ஏராளமாக ஸந்ததிகளை உத்பத்திசெய்து பல யாக
ங்களைச்செய்து பாரதயுத்தவ்யாஜமாக பூபாரத்தை நீக்கி அர்ஜுனனுக்கு கீ
தோபதேசம் செய்து உத்தவருக்கு தத்வோபதேசம் செய்து வைகுண்டம்
சென்றார். ||

உ

ஸ்ரீமத் ஸ்ரீகிருஷ்ணாய பரமாத்மனே நம:

10வது ॥ ஸ்ரீ கிருஷ்ணாவதார சரித்ரம் — தசமஸ்கந்தம் —

பரீக்ஷித் - சுகபகவானே! ஸ்ரீ கிருஷ்ண பகவானுடைய அனுக்ரஹத்
தாலேயே என் முன்னோர்களான பாண்டவர்கள், தேவர்களாலும்
ஜயிக்க முடியாத பீஷ்மாதிகளை ஜயித்து ராஜ்யத்தை யடைந்தா
ர்கள், நான் மாதாவின் கர்ப்பத்திலிருக்கும் பொழுது அச்வ
த்தாமனுடைய அஸ்திரத்தால் எரிந்து போகாமல் சக்ராயுதத்
தினால் அந்த பகவானே காப்பாற்றினார். மேலும், அந்த புண்ய
ச்லோகனுடைய கல்யாண குணங்களை, உலகப்பற்றை விட்டவர்க
ளிகளும், மோக்ஷத்தை விரும்புபவர்களும், விஷய ஸுகத்தை
விரும்புபவர்களும் கானம் செய்கிறார்கள். அவருடைய கதை
யை கோஹத்தி முதலான கொடிய பாபங்களைச் செய்தவனைத்
தவிர யாவன் கேட்பான்? தங்களுடைய முகாரவிந்தத்திலிருந்து பெருகும் கதா
ம்ருதமாகிற அம்ருதத்தைப் பருகிக் கொண்டிருக்கும் எனக்கு
மூன்று நாளாக ஜலம் கூட சாப்பிடாமலிருக்கும் எனக்குக் கொ
டிய பசி வேட்கை துன்புறுத்தவில்லை, ஆகையால் அந்த கிருஷ்ண ப
கவானுடைய சரித்ரத்தை விஸ்தாரமாகக் கூறும்படி ப்ரார்
த்திக்கிறேன் என்று கூறினார்॥

சுகர் — ராஜரிஷியே! உன்னுடைய திவ்யமான புத்தி கேசவனிடம் ஈடுபட்டிருக்கிற
து. கங்காதீர்த்தமானது பார்ப்பவர்களையும் ஸ்நானம் செய்பவர்களையும்
ஜலத்தைக் குடிப்பவர்களையும் அது பவித்ரம் செய்வது போல

பகவானுடைய கதையும், சொல்லுபவர்களையும், கேட்பவர்களை
யும் பக்கத்திலிருந்து கேட்பவர்களையும் ஸகல பாபங்களையும் நீக்கிப் பரி
சுத்தம் செய்யும் ஆசையால் அதைக் கூறுகிறேன் கேள்.
ஒருஸமயம் பூமிதேவி, அஸுரஸ்வபாவமுள்ள அரசர்களுடைய பெரு
ங்கூட்டத்தைத் தாங்க முடியாமல் பசு உருவுடன் ப்ரம்மாவிடம் சென்று
தன் துக்கத்தைத் தெரிவித்தாள். ப்ரம்மா சிவனையும் மற்ற தேவர்களை
யும் அழைத்துக்கொண்டு பாற்கடல் கரைக்குச் சென்று பகவானை
த்யானம் செய்தார். பிறகு அசரீரியாகத் தானறிந்து பகவானுடைய கட்
டளையை தேவர்களுக்குக் கூறினார். பூதேவியின் வருத்தத்தை அறிவேன்,
தேவர்கள் பூலோகத்தில் யதுவம்சத்துடன் பிறந்து பூபாரத்தை நீக்கும்
வரையில் இருக்க வேண்டும், நான் வஸுதேவருடைய கிருகத்தில் பு
த்ரனாகப் பிறப்பேன், ஆதிசேஷனும் தமையனாகப் பிறப்பான், மாயை
யும் ஒரு காரியத்திற்காகப் பிறப்பாள், தேவஸ்த்ரீகளும் பிறக்க
வேண்டும் என்று பகவானுடைய கட்டளையைக் கூறி அவ்வாறே தேவ
ர்களையும் ஆக்ஞை செய்து பூமியையும் ஸமாதானம் செய்து விட்டு
ப்ரம்மா தன்னுடைய லோகம் சென்றார்॥
யதுவம்சத்து அரசனான சூரஸேனன் மதுரையைத் தலைநகராகக் கொண்டு
ராஜ்ய பரிபாலனம் செய்து வந்தான். மதுரையில் சூரன் என்பவரின் புத்ரனா
வஸுதேவர் தேவகனுடைய பெண் தேவகியை விவாஹம் செய்து கொண்டு
ரதத்தில் ஏறி தன் வீட்டுக்குத் திரும்பினார். தேவகனுடைய ஸஹோதரன்

+ தன் ஜீவனத்திற்காக

உக்ரஸேனன், அவனுடைய புத்ரன் கம்ஸன், தன் ஸஹோதரி
யான தேவகியைப் ப்ரீதிக்காக தேரிலேற்றி அந்த ரதத்தை ஓட்டிச் செ
ன்றான், தேவகன் ஏராளமான சீர்வகைகளையளித்தான், வாத்ய
கோஷம் முழங்கியது, அந்த ஸமயம் கம்ஸனைக் குறித்து "ஹே அறிவில்
லாதவனே! நீ தேரில் அழைத்துச் செல்லும் இவளுடைய எட்டாவது
கர்ப்பம் (குழந்தை) உன்னைக் கொல்லப் போகிறது" என்று ஒரு
அசரீரி உண்டாயிற்று. அதைக் கேட்டுக் கம்ஸன் கையில் வாளேந்தி
தேவகியைக் கொல்லத் தலைப்பட்டான். அதைக் கண்ட வஸுதே
வர் - கம்ஸனிடம், தாங்கள் உயர்ந்த போஜவம்சத்தரசன், தேவகி உன்னு
டைய ஸஹோதரி, ஸ்த்ரீ, அவளை இந்த விவாஹ ஸமயத்தில் கொல்
வது ஸரியில்லை. பிறந்தவனுக்கு ஒருநாள் மரணம் நிச்
சயம், ஆசையால் பாபஞ்செய்யக்கூடாது, என்று கூறியும் அவன் கேட்கா
ததால் மேலும் கூறினார் - கம்ஸ உனக்கு இவளால் பயமில்லை புத்ர
னே ஆணையால் இவளுக்குப் பிறக்கும் எட்டுக் குழந்தைகளை
யும் உன்னிடம் கொடுத்துவிடுகிறேன் என்று ஸமயோசிதமாகக்
கூறினார். அவனும் ஸமாதானமடைந்து தேவகியைக் கொல்லவில்லை.
வஸுதேவர் தேவகியுடன் தன் வீடு வந்து சேர்ந்தார். நாளடைவில்
தேவகிக்கு முதலாவது புத்ரன் பிறந்தது. வஸுதேவர் ஸத்யம் தவறா
மல் அந்தக் குழந்தையைக் கம்ஸனிடம் கொடுத்தார், அவன் எனக்கெட்
டாவது குழந்தைதானே பயம். இதைக் கொண்டு செல்லுங்கள் என்று

+இது வேறு புராணத்தில் காரியத்தின் முன்பு பகவானால் சொல்லப்பட்ட காலநேமி என்ற அசுரனே கம்சனாகப் பிறந்திருக்கிறான் என்று இதில் தெரியவருகிறது

ஸந்தோஷமாகக் கொடுத்தான். வஸுதேவரும் அதிக ஸந்தோஷத்துடன் குழந்தையுடன் வீட்டுக்கு வந்தார். இந்த ஸமயம் நாரதர் வந்து கம்ஸ நீ உண்மையில் உக்ரஸேன ராஜனுக்குப் பிறந்தவனில்லை. உண்மையில் காலநேமி என்ற அசுரன், உக்ரஸேனன் மனைவி வனத்தில் ஸஞ்சரித்துக்கொண்டிருந்த போது அவளைப் பார்த்து மோகம் கொண்டு உக்ரஸேன வேஷத்துடன் அவளைச் சேர்ந்தான். பிறகு அவள் அறிந்து சாபமிட்டாள். ஆகையால் நீ யாதவனில்லை, அசுரன், இங்கு இருக்கும் கோபர் வஸுதேவர் முதலான கோபர்களும் தேவகி முதலானவர்களும் தேவாம்சமாக உள்ளவர்கள். அசுரர்களான உங்கள் வேரையும் ஸம்ஹாரம் செய்யவே தேவகியிடம் பிறக்கப் போகிறார் என்று கூறிச்சென்றார். இதைக் கேட்டு கம்ஸன், தேவகி வஸுதேவர்களை காராக்ருஹத்தில் போட்டு, அவர்களுக்குப் பிறந்த குழந்தைகளை ஒவ்வொன்றையும் கொன்றான். தன் தந்தை உக்ரஸேனனையும் விலக்கி தானே ராஜாவாகினான்.+ பிறகு கம்ஸன் தன்னுடைய மாமனாரான ஜராஸந்தனை தனக்கு பக்கபலமாகக் கொண்டு, அசுர ராஜ்யமான பாணன், பகன், சாணூரன் முதலியவர்களுடன் சேர்ந்து பூதனை முதலானவர்களுடன் யாதவர்களைத் துன்புறுத்தி வந்தான். சில யாதவர்கள் வேறு தேசங்களுக்கு ஓடிப்போனார்கள். சிலர் கம்ஸனை அனுஸரித்து இருந்தார்கள். தேவகிக்கு முறையாக ஆறு ஆண் குழந்தைகள் பிறந்து அவைகளை வஸுதேவர் கம்ஸனிடம் கொடுக்க அவன் தரையில் அடித்துக் கொன்றான்.

305

தேவகிக்குப் பிறந்த முதல் ஆறு குழந்தைகளும் ப்ரஹ்மாவை பரிஹா ஸம் செய்ததால் ப்ரஹ்மாவின் பேரன்களான அவர்களைய சாபத்தா ல் பிறந்தார்கள். அவர்களுக்குச் சீக்கிரம் சாபநிவ்ருத்தியாகி மோக்ஷத்தையடைய வேண்டியே நாரதர் கம்ஸனுக்கு உபதேசம் செய்தார். ஆகையால் நாரதர் செய்தது தவறில்லை. அவரும் அதிக பாபத்தால் சீக்கிரம் கம்ஸன் மடிய வேண்டும் என்று எண்ணினார். தேவகியின் கர்ப்பத்தில் ஏழாவதாக பகவானுடைய அம்சமான ஆதிசேஷன் தோன்றினான். பகவான் தன் பக்தர்களான யாதவர்களுக்கு கம்ஸனால் ஏற்பட்ட பயத்தை அறிந்து தன்னுடைய மாயா தேவிக்குக் கட்டளையிட்டார் — ஹே தேவி! வஸுதேவருடைய பத்னிகளில் ஒருவளான ரோஹிணி என்பவள் கோகுலத்தில் வஸுதேவருடைய ஸகாவான நந்தகோபருடைய க்ருஹத்தில் கம்ஸனுக்குப் பயந்து வஸித்து வருகிறாள். என்னுடைய ஆதிசேஷாம்சமான தேவகியின் வயிற்றில் (கர்ப்பத்தி)லிருக்கும் கர்ப்பத்தை ரோஹிணியின் உதரத்தில் சேர்க்கவேண்டும். பிறகு நான் தேவகிக்கு எட்டாவது புத்ரனாக அவதாரம் செய்வேன். அந்த ஸமயம் நீ கோகுலத்தில் நந்தகோபருடைய பத்னியான யசோதைக்குப் புத்ரியாகப் பிறக்க வேண்டும். இத்தகாரியங்களைச் செய்வதால் மனிதர்கள் உன்னைப் பல இடங்களில் துர்க்கை, பத்ரகாளி, விஜயா, வைஷ்ணவி, குமுதா, சண்டிகா, க்ருஷ்ணா, மாதவி,

கந்யகா, மாயா, நாராயணீ, ஈசாநீ, சாரதா, அம்பிகா, என்று ப
லபெயர்களில் உன்னைத் தூபம் தீபம் நைவேத்யங்கள் செய்து பூஜிப்பார்கள்।
ரோஹிணியிடம் பிறந்தவனை ஸங்கர்ஷணன், ராமன், பலன், என்று பலபெ
யர்களில் கூறுவார்கள் என்று கூறினார்। மாயையும் அவ்வாறே செய்கி
றேன் என்று கூறி அவ்வாறே செய்தாள்। ஜனங்கள் தேவகியின் கர்ப்பம்
சிதைந்தது ஹா ஹா என்று கூறினார்கள்। பகவான் வஸுதேவருடைய தி
யானத்தில் தோன்றி தேவகியின் கர்ப்பத்தில் ப்ரவேசித்தார்। அத
னால் தேவகி மிகவும் தேஜஸ்ஸுடன் விளங்கினாள்। அதைக்கண்ட
கம்ஸன் தேவகி கர்ப்பம் இவ்வாறு இருந்ததில்லை ஆகையால் என்னை
வதம் செய்ய ஹரியே தோன்றியிருக்கிறார் இப்பொழுது இவளைக் கொ
ன்றால் கர்ப்பிணி ஸ்த்ரீயைக் கொன்றேன் என்று ஜனங்கள் நிந்திப்பா
ர்கள், நரகமும் ஏற்படும் என்று எண்ணிக் கொல்லாமல் அவனுடைய பி
றப்பை எதிர்பார்த்து வைரபுத்தியுடன் இருக்கும்பொழுதும் தூங்கும்
பொழுதும் நிற்கும்பொழுதும் சாப்பிடும்பொழுதும் எந்நேரமெல்லா
ம்பொழுதும் ஹரியாகவே பார்த்துக் கொண்டிருந்தான்। ப்ரம்மா
வும் சிவனும் மற்றும் பரிவாரங்களுடனும் நாரதர் முதலான ரிஷி
கள் தேவர்கள் இவர்களுடனும் அங்கு வந்து பகவானை ஸ்தோத்தி
ரம் செய்தார்கள்। நீர் உலகத் தோற்றத்திற்குக் காரணமானவர்,
ஸத்யஸ்வரூபர், நீர் ஒருவராகவும் மாயையால் மயங்கி பலவாகப் பா
ர்க்கிறார்கள்।

ஸாதுக்களைக் காப்பாற்றவும் துஷ்டர்களை அழிக்கவும் மாயையால்
பல தேகங்களை எடுத்துக் கொள்கிறீர், உன்னையால் நிஸ்சிந்தையான
ரூபரே, இவர்கள் பக்தி செய்து ஸுலபமாக ஸம்ஸாரக் கடலைத் தாண்
டுகிறார்கள், அந்த பக்தர்கள் அதற்காகவே பக்தி மார்க்கத்தை பூலோக
த்தில் விட்டுச் செல்லுகிறார்கள். இவர்கள் தங்களை ஞானிகளாக எண்ணி
பக்தி மார்க்கத்தை விட்டவர்கள், அவர்கள் கீழ் நிலையையே அடைவார்கள்
பக்தி செய்பவர்களுக்கு எங்கிருந்தும் கெடுதலில்லை, உம்முடைய நாமங்களை
யும் ரூபங்களையும் சரித்திரங்களையும் சிந்திப்பவர்கள் ஸம்ஸார ப
ந்தத்தை யடைய மாட்டார்கள். பல அவதாரங்களை யெடுத்து லோகங்க
ளைக் காப்பாற்றுவது போலவே இப்போதும் துஷ்டர்களை அழித்து பூபார
த்தை நீக்கும் தங்களை சரணமடைகிறேன் நமஸ்காரம் என்று ஸ்து
தி செய்துவிட்டு, தாயே தேவகி உன்னுடைய பாக்யத்தால் உன் வயிற்றில்
பரமபுருஷன் தோன்றியிருக்கிறார். அவர் யாதவர்களைக் காப்பாற்றுவா
ர் சீக்கிரத்தில் கம்ஸனை அழிப்பார் ஆகையால் இனி கம்ஸ பய
ம் வேண்டாம் என்று தேவர்கள் இப்படிச் சொன்னார்கள்॥

பிறகு சுபமான ஆவணி மாதம் கிருஷ்ணபக்ஷம் அஷ்ட
மி ரோஹிணி நக்ஷத்திரம் கூடிய சுபதினம், நவக்கிரகங்கள் சுபஸ்தா
னத்தில் இருக்கிறார்கள், ஆகாயத்தில் நக்ஷத்திரங்கள் ப்ரகாசித்தன, பூ
லோகத்தில் கிராமநகரங்களில் மங்கள காரியங்கள் நடந்தன।

நதிகளெல்லாம் தாமரைப் புஷ்பங்களுடனும் அதிக ஜலத்துடனும் விளங்கின,
வனங்கள் புஷ்பங்களால் அழகாக விளங்கின, நல்ல குளிர்ந்த வாஸனையுடன்
காற்று வீசிற்று, ப்ராம்மணர்களின் க்ருஹங்களில் யாகாக்நிகள் ஜ்வலித்தன,
ஸாதுக்களுடைய மனங்கள் தெளிவாக இருந்தன, ஆகாயத்தில் தேவதுந்
துபி முழங்கின, கந்தர்வர் பாடினார், முனிவர் ஸ்துதி செய்தனர், அப்ஸ
ரஸ்கள் நடனமாடினர் தேவர்கள் புஷ்பமாரி பொழிந்தார்கள், வாத்ய கோஷ
ம் போல் மேகங்கள் கர்ஜித்தன. இவ்வாறு மங்களமே பொருந்திய அன்று இ
ரவு சந்திரோதய காலத்தில் ரோஹிணீ நக்ஷத்திரத்தில் ஸர்வ ப்ராணிகளின்
ஹ்ருதயத்தில் வஸிக்கும் பகவான், கிழக்கு திக்கில் பூர்ண சந்
திரன் உதயமாவது போல் தேவகியிடமிருந்து புத்ரனாக அவதாரம்
செய்தார். அந்த ஆச்சரியமான குழந்தை, செந்தாமரை இதழ் போ
ன்ற கண்கள், சங்கம் சக்ரம் கதை, தாமரை மலர் இவைகளை ஏந்
திய நான்கு கைகள், மார்பில் ஸ்ரீவத்ஸம் என்னும் மறு, கழுத்தில் கௌ
ஸ்துப ரத்ன மாலை, அரையில் பீதாம்பரம் (மஞ்சள் பட்டு) நீல
மேகம் போன்ற காந்தி, வைர ரத்னங்கள் பதித்த கிரீடம் குண்டல
ங்கள், ரத்ன காந்தியால் பளபளக்கும் அழகிய அளகங்கள்,
அரைநாண் மாலை, தோள்வளைகள், கைவளைகள், இவ்வாறு ஆ
பரணங்களுடன் ஜ்வலிக்கும் புத்ரனாக வந்திருக்கும் ஹரியை, வஸுதே
வர் தன் கண்களால் பார்த்தார். அந்த புத்ரோத்ஸவ ஸமயத்தில்

வஸுதேவர், தான் காராகிருகத்தில் இருப்பதால் ஆனந்தஸாகரத்தில் மூழ்கி உத்தம ப்ராம்மணர்களுக்கு மனதால் பதினாயிரம் கோதானம் செய்வதாக ஸங்கல்பம் செய்தார். அங்ஙனமே புத்ரனையும் புகழ்ந்து அனந்தனுக்கு அஞ்ஜலிபந்தனம் செய்து ஸ்தோத்ரம் செய்தார்— தாங்கள் மாயையைக் கடந்த ஸச்சிதானந்த ப்ரஹ்மமே லோகத்தை ரக்ஷிக்க அவதாரம் செய்திருக்கிறீர். இந்த துஷ்டனான கம்ஸன் நீங்கள் என் புத்ரனாக அவதாரம் செய்யப் போவதை அறிந்து உங்கள் ஸஹோதரர்களைக் கொன்றான். இப்பொழுது உங்களுடைய மஹிமையை அறிந்து ஆயுதம் ஏந்தி வருவான் என்றும் கூறினார். தேவகியும் பகவானை துதி செய்து இந்த அத்புத ரூபத்தை த்யானத்தாலேயே அறியக்கூடிய இதை மனிதர்களுக்குக் காட்ட வேண்டாம்; பயத்தால் ஸ்வபாவ ரூபமான நான் கம்ஸனால் உங்களுக்கு ஆபத்து நேரிடுமோ என்று பயப்படுகிறேன் என்று கூறினாள். பகவான்— ஸ்வாயம்புவ மனுவின் காலத்தில் "ப்ருச்னி" என்றும் வஸுதேவர் "ஸுதபஸ்" என்றும் இருக்கையில் என்னைக் குறித்து ஆயிரம் திவ்ய வர்ஷங்கள் கடுமையான தவம் செய்தீர்கள். என்னைப் போன்ற புத்ரனை வரமாகப் பெற்றீர்கள், நான் உங்களுக்கு ப்ருச்னிகர்ப்பன் என்ற பெயரில் பிறந்தேன், பிறகு நீங்கள் கச்யபர் அதிதியாக பிறந்த பொழுது வாமனனாக உபேந்திரனாக அவதரித்தேன், இப்பொழுது வஸுதேவர் தேவகியாகப்

பார்த்த பொழுது கிருஷ்ணனாக அவதாரம் செய்திருக்கிறேன். முன்பு சது
நினைத்து
ர்புஜர் கோடி கட்டியணைக் கிட்டுவம் செய்தீர்கள்; அந்த நானே புத்திரனாக
வந்திருக்கிறேன் என்று அறிந்து கொள்வதற்காகவே இவ்வாறு ரூப
த்துடன் தரிசனம் கொடுத்தேன். நீங்கள் இருவரும் என்னை இவ்வ
மையம் புத்ரமென்றும், நிலையம் புத்ரன் என்று எண்ணியபடி
நினைத்துக் கொண்டு கடைசியாய் பரமபதத்தை அடைவீர்கள் என்று கூறி
வசுதேவர் தேவகியும் பார்த்துக் கொண்டிருக்கும் போதே குழந்தை
ருடன் ஸாதாரண லோகத்தவர் குழந்தையானார். பகவா
னுடைய ஆக்ஞைப்படியே வஸுதேவர் குழந்தையை எடுத்துக் கொண்டு வெ
ளியே செல்ல நினைத்ததும் யோகமாயையால் பலமாகத் தாளிட்ட
கதவுகள் தானே திறந்தன. வாயில் காத்திருந்த காவலர்கள் உணர்வு
கள் மயக்கத்தில் ஆழ்ந்தனர். இரவு இருளில் கிளம்பி, அந்த ஸமயம்
குழந்தையைக் கூடையில் வைத்துக் கொண்டு வெளியே வந்தார். ஆதிசேஷன் கு
டையுடன் மழைத் தாரைப் போட்டது. பகவானின் மேல் தாரை விழாமல் ஆ
திசேஷன் தன் படங்களால் குடை போல் படுத்தித் தடுத்தான். கூடவே
வந்தான். வழியில் யமுனையில் ஆறும் பெரு வெள்ளமாகப் பெருகிக் கொ
ண்டிருந்தும் அவளைக் கட்ட வழி விட்டது போல் வழிவிட்டது. வஸுதேவர்
நந்தகோபருடைய கோகுலத்தில் எல்லோரும் தூங்கிக் கொண்டிருக்கும்
பொழுது கதவுகள் திறக்க யசோதையின் படுக்கையில் இந்தக் குழ
ந்தையை

விட்டுவிட்டு அங்கே அவளுக்குப் பிறந்திருக்கும் பெண் குழந்தை
யை எடுத்துக் கொண்டு மதுராபுரியில் பழைய காராகிருகம் வந்தார். அ
ங்கே தேவகியின் படுக்கையில் அந்தக் குழந்தையைக் கிடத்தினார். முன்பே
ன் போலவே கால்களில் விலங்குகளை மாட்டிக் கொண்டு முன்போ
லவே இருந்தார். உள் வெளிக் கதவுகளும் முன்போலவே தாளிட்டுக்
கொண்டன. யசோதைக்குப் பிறந்த குழந்தையை அங்கே நின்றவர்க
ள் தூக்கத்தில் ஆணோ பெண்ணோ என்று அப்பொழுது அறியவில்லை. தேவ
கியின் குழந்தை அழுகை சப்தத்தைக் கேட்டு கம்ஸனுடைய காவ
லாளிகள் ஓடிப்போய் கம்ஸனுக்குத் தெரிவித்தார்கள். கம்ஸன் பரப
ப்புடன் ஓடிவந்தான். தேவகீ, கம்ஸனிடம், - ஸஹோதரனே எந்திய
புத்ரர்களைக் கொன்றாய். இது கடைசியானது பெண் குழந்தை இதுவொன்றை
விட்டுப் பெண்ணாவது இருக்கட்டும், இதைக் கொல்லாதே, நீ கொடுத்ததாக
இருக்கட்டும் என்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டாள். அந்தத் துஷ்
டன் கேளாமல் அழுது கொண்டிருக்கும் தேவகியின் கையிலிருந்து
பெண் குழந்தையைப் பிடுங்கி இரு கால்களையும் பிடித்துப் பாறையில் அ
டித்துக் கொல்ல கையை ஓங்கினான். அது அவன் கையிலிருந்து
மேலே ஆகாயத்தில் ஆயுதங்கள் ஏந்திய எட்டுக் கைகளுடன் காளி
யாகத் தோன்றினாள். தேவர்கள் ஸ்துதி செய்தார்கள். காளி மூட
னே கம்ஸ! உன்னைக் கொல்லப் போகிற சத்ரு னெங்கேயோ வளர்ந்து

வசித்தான், எதிரியவர்களைக் கொல்லவேண்டாமென்று கூறிச்
சென்று பல இடங்களில் பலவிதமான பெயர்களுடன் பக்தர்களால்
கொண்டாடப்பட்டவளாக இருந்தாள். அந்தவார்த்தையைக்கேட்டுக்கம்ஸ
ன், தேவகிவஸுதேவர்களை விடுதலைசெய்து வணக்கத்துடன், தெய்வம்
கூடப்பொய் சொல்கிறது, எட்டாவது ஆண்குழந்தை என்னைக்கொல்ல
ப் போகிறது என்று நம்பி உங்களுடைய எல்லாக்குழந்தைகளையும் கொ
ன்றேன், என் பிழையைப் பொறுத்துக்கொள்ளுங்கள், எல்லாம் அவர
வர்கள் முன்வினைப்பயனே என்று வருத்தத்துடன் கூறி பாதங்களில் வணங்
கினான். தேவகிவஸுதேவர்களும் கோபம் தணிந்து இருந்து நீ சொல்வது
உண்மையெனக் கூறினார்கள், கம்ஸன் அவர்களிடம் விடைபெற்று
வீட்டிற்குச் சென்றான். மறுநாள் கம்ஸன் மந்திரிகளை அழைத்துக்காளி
கூறியதைச் சொன்னான். அதைக் கேட்டு அவர்கள், அரசனே அப்படி
யானால் உங்களுக்குச் சத்ருவான குழந்தை மறைவாகவளர்கிறதால் நா
ங்கள் கிராமங்கள் சேரிகள் பட்டணங்களில் சென்று அங்குள்ள பிற
ந்தோ பிறக்காதோ எல்லாக்குழந்தைகளையும் கொன்றுவிடு
கிறோம், தவிரவும் நமக்கு தேவர்கள் விரோதிகள் தேவர்களுக்கு ஆதார
மானவர் விஷ்ணு, விஷ்ணுவுக்கு இதர்மங்களும் அதைச் செய்யும் பிரா
ஹ்மணர்களும் யாகம் செய்ய உபகாரமான பசுக்களும், ஆகையால், பிரா
ஹ்மணர்களையும் தபஸ்விகளையும் யாகம் செய்யும் பிராஹ்மணர்களையும்

பசுக்களையும் தர்மங்களையும் வேதங்களையும் அழித்துவிட்டால்
ஹரிக்குபலம் குறையும் அதனால் தேவர்கள் பலஹீனமடைவார்கள், ஆ
கையால் ரிஷிகளை வதைப்பதே நாம் வாழ உபாயம் என்று கூறினார்கள்।
இவ்வாறு துர் மந்திரிகளின் போதனையைக் கேட்டு கேடுகாலத்தால்
பிராமணர்களை ஹிம்சை செய்ய அனுமதியளித்தான். அவர்களும்
மாயையால் பல உருவங்களுடன் ஸாதுக்களுக்குக் கேடு செய்தார்க
ள். நல்லவர்களுக்குக் கெடுதல் செய்தால், ஆயுள் ஐசுவரியம்
புகழ், தர்மம், புண்ய லோகங்கள் எல்லா நன்மைகளும் அழியும்
என்பதை அவர்கள் அறியவில்லை॥ //

கோகுலத்தில் நந்தகோபர் தனக்குப் புத்ரன் பிறந்த உத்ஸவத்தைத் தான
ஸ்நானம் செய்து பிராமணர்களை அழைத்து ஸ்வஸ்திவாசனம், அ
நேக தானங்கள் செய்தும் கிராமத்தை அலங்காரங்கள், வாத்ய கோ
ஷங்கள் செய்தும் ஜாதகர்ம மஹோத்ஸவத்தை வெகு விமரிசையாகக்
கொண்டாடினார். பகவான் அவதாரம் செய்ததிலிருந்து கோகுலம் ஸகல
ஸம்பத்துக்களும் செழித்து லக்ஷ்மீகரமாக விளங்கியது॥ நந்த
கோபர் கோகுலத்தைக் காவல் புரிய கோபாலர்களை நியமித்துவிட்டு
கம்ஸனுக்குக் கொடுக்கவேண்டிய வருஷ வரிக்கப் பணத்தை எடு
த்துக்கொண்டு மதுரைக்கு வந்தார். இதை அறிந்து வஸுதேவர், அரச
னுக்குப் பணத்தைக் கொடுத்துவிட்டு நந்தகோபர் தங்கியிருக்குமிடத்தி
ற்கு வந்தார்।

நந்தகோபர் வஸுதேவரைத் தழுவி அணைத்து உபசரித்து ஒருவருக்கொரு
வர் க்ஷேமத்தை விசாரித்துக்கொண்டார்கள். பிறகு வஸுதேவர் "ஸஹோதரனே! வ
யதாகிவிட்டது இனி மேல் குழந்தை பிறக்காது என்றிருந்த உங்களுக்கு தெய்வ
கிருபையால் குழந்தை பிறந்திருக்கிறது. என் புத்திரன் தாயாருடன் கோகுலத்தில்
ஸௌக்யமா? உங்களால் அன்புடன் வளர்க்கப்பட்டு உங்களிடத்தில் பற்றுள்ளான் என்
று அறிகிறேன். ஸ்நேகிதர்கள், அவரவர்கள் மனைவியால் வேறிடத்தில் உள்ள
வாழும்படியாயிற்று; ஒருவர் கஷ்டப்பட்டால் மற்றவரும் ஸுகமாக இருக்க மு
டிவதில்லை." என்று கூறினார். நந்தகோபரும், "கம்ஸன் உங்கள் புத்திரர்கள
ல்லோரையும் கொன்றுவிட்டான்; கடைசியாகப் பிறந்த பெண்ணும் ஆகா
சத்தில் பறந்து சென்றுவிட்டது. எல்லாம் கர்மவினையே. வேறு யாரைக் கா
ரணம் சொல்வது" என்று கூறினார். வஸுதேவர் "நீங்கள் வந்த காரியம் தீர்ந்து
விட்டது. கோகுலத்தில் பல எதிர்பாராத கஷ்டங்கள் நேரிடலாம் என்று
சகுனங்களால் அறிகிறேன். ஆகையால் இங்கு தங்க வேண்டாம்" என்று கூறினார்.
நந்தகோபரும் அவ்வாறே கூட வந்தவர்களுடன் மாட்டுவண்டிகளில் கோ
குலம் புறப்பட்டார். "பெரியவர் வஸுதேவர் சொன்னது பொய்யாகாது"
என்று எண்ணி ஆபத்து வராமல் இருக்க பகவானை ஸ்ரீஹரியை சரணமடைந்தார்.

பூதனை என்ற ராக்ஷஸி, கம்ஸனுடைய உத்தரவால் கிராமங்க
ள், நகரங்கள், சேரிகள், இடங்களுக்குச் சென்று சிறு குழந்தைகளைக் கொன்
று கொண்டு ஆகாசமார்க்கமாக ஸஞ்சாரம் செய்து ஒரு ஸமயம் கோகுல

(x) நல்லகாரியங்கள் செய்யும் பொழுது ராக்ஷஸர்களை விரட்டும் வேதமந்திரங்களோ, பகவத் நாம ஸங்கீர்த்தனமோ இல்லையேல் அங்கு ராக்ஷஸர்கள் நுழைவார்கள்

வந்து பார்வையால் அழகான ஸ்திரீ வேஷத்துடன் நந்தகோபனுடைய கிருகத்தில் பிரவேசித்தாள். அவளுடைய அழகில் மயங்கி கோபி ஸ்திரீகள் மெதுவாக வந்து தொட்டிலில் தூங்கும் குழந்தையை எடுத்து ஸ்தனத்தில் விஷத்தைக்கொண்டு மடியில் வைத்துப் பால் கொடுக்க ஆரம்பித்தாள். எல்லாமறிந்த அந்த மாயாவி ஒன்றும் அறியாதது போல் கண் மூடியிருந்து, அவளுடைய பாலுடன் சேர்ந்து பிராணனையும் சேர்த்து உறிஞ்சினார். அவள் விட்டுவிடு என்று கதறியும் விடவில்லை, அவள் பயங்கர ராக்ஷஸி ரூபத்துடன் அலறிக்கொண்டு மடிந்தாள். அவளுடைய பெரிய சரீரம் ஆறு மைல் தூரத்திலுள்ள மரங்கள் பொடியானது. அவளுடைய மார்பில் விளையாடிக் கொண்டிருக்கும் குழந்தையை பரபரப்புடன் எடுத்து கோபிகைகள் யசோதை ரோஹிணியுடன் ஸ்நானம் செய்வித்து பகவானுடைய நாமங்களைச் சொல்லி ரக்ஷை செய்தார்கள் (x). பிறகு பால் கொடுத்து தூங்க வைத்தார்கள். நந்தகோபர் மதுரையிலிருந்து வரும் வழியில் அந்த பெரிய சரீரத்தைக் கண்டு ஆச்சரியமடைந்து வஸுதேவருடைய சொல் ஸத்யமாயிற்றே என்று எண்ணி அவளுடைய சரீரத்தைக் கோடரியால் வெட்டி எரித்தனர். அந்தப் புகை அகில் சந்தன வாஸனையுடன் வெகுதூரம் பரவியது. கிருஷ்ண பூதனை ராக்ஷஸி கொல்ல வேண்டும் என்ற எண்ணத்துடன் பகவானுக்கு விஷத்தைக் கொடுத்தாள்.

+ பூதனையைப் போல் சரீரம் கூடவில்லாமல் சகடாஸுர
ன் மோக்ஷமடைந்தான் பகவானுடைய பாதம் தீண்டியதால்
என்று நாராயணீயம்
⊗ சணமேல் கட்டின்

அதனால் அவன் பாபம் நீங்கி உத்தமகதியடைந்தான். பக்தி சிரத்தையுடன்
பகவானுக்கு பழம் பக்ஷ்யம் முதலானவைகளை அளித்து பூஜை செய்பவர்கள்
நற்கதியடைவார்கள் என்பதில் ஸந்தேகமேயில்லை. "இந்த பூதனா மோக்ஷம்
என்ற சரித்திரத்தைக் கேட்பான் பகவானிடம் பக்தி ஏற்படும்"

ஒருதினம், நந்தநந்தனன், நிமிர்ந்து உட்கார ஆரம்பித்தான் அன்று குழந்தை
யின் ஜன்ம நக்ஷத்திரமும் சேர்ந்தது. அதற்காக ஒரு உத்ஸவம் நடத்தினார்
கள்; அதில் பிராமணர்கள் புண்யமந்திரங்களை ஜபம் செய்து அபிஷேகம்
செய்தார்கள், வாத்யகோஷங்கள் செய்து அநேக தானங்கள் செய்து வ
ட்டின்முன் ⊗ மேடமாக பாத்திரங்கள் வைக்கப்பட்டிருந்த ஒரு வண்டியின் கீ
ழ் குழந்தையை (தொட்டிலில்) தூங்கவைத்தார்கள், வந்தவர்களுக்கு உடை
கள் அளித்து போஜனம் செய்வித்து உபசாரம் செய்து கொண்டிருந்த யசோ
தை ரோஹிணியும் பசியால் அழும் குழந்தையை கவனிக்கவில்லை, அழும்
பொழுது குழந்தை தன் கால்களை உதைத்தது. அந்த உதை குழந்தையைக் கொ
ல்லக் கம்ஸனால் ஏவப்பட்டு, அந்த வண்டியில் ~~[illegible]~~ ஒளிந்து கொண்
டிருந்த அஸுரன் மேல் விழ வண்டி கவிழ்ந்து சகடாஸுரனும் அழிந்
தான். + வண்டியிலிருந்த பாத்திரங்களும் சிதறிவிழுந்தன. அதைக்கண்ட கோ
பர்கள் ஓடிவந்து வண்டி எவ்விதம் கவிழ்ந்தது என்று ஆச்சர்யத்துட
ன் சிறுபாலர் இருவர்களிடம் கேட்டனர், அவர்களும் இந்தக் குழந்தை
கால்களால் கவிழ்ந்தது என்று கூறினர், நந்தகோபர் குழந்தையைக்

சாந்திகர்மாக்களைச் செய்தார் ॥

ஒருநாள் யசோதை குழந்தையை மடியில் வைத்துக்கொண்டு கொஞ்சிக்கொ
ண்டிருக்கும்பொழுது திடீரென்று குழந்தை கனத்தது. ஆகையால் கீ
ழே விட்டு ஆச்சரியப்பட்டு பகவானை தியானம் செய்தாள். அப்பொழுது
கம்ஸனால் ஏவப்பட்ட திருணவர்த்தன் என்ற அஸுரன் புயல் காற்
றாக உருவத்தில் கோகுலத்தில் தோன்றி புழுதியை வாரி இறைத்து கண்
ணை மறையச் செய்தான். ஒருவருக்கொருவர் அறியமுடியவில்லை. குழ
ந்தை இருக்கும் இடம் தெரியாமல் யசோதை அழுது புலம்பினாள்.
சிறிது நேரத்தில் புயல் அடங்கியது. ஆனால் அஸுரன் தன் தோளில்
க்ருஷ்ணனைத் தூக்கிச் சென்றான். அப்பொழுது அவனால் குழ
ந்தையின் பாரத்தைத் தாங்க முடியாமல் கீழே போட நினைத்தான். ஆ
னால் குழந்தை அவனுடைய கழுத்தைக் கெட்டியாகப் பிடித்துக்கொ
ண்டிருந்ததால் கீழே போட முடியாமல் மூச்சுத் திணறி கற்பாறை
யின் மேல் விழுந்து இறந்தான். அவன் சரீரத்தின் மேல் விளையா
டிக்கொண்டிருக்கும் குழந்தையைக் கண்டு கோபிகைகளும் யசோதையும் எடு
த்து அணைத்து எல்லோரும் சந்தோஷமடைந்தனர். நந்தர் வஸுதேவ
ருடைய சொல்லை நினைத்து ஆச்சரியமடைந்தார் ॥

ஒருநாள் யசோதை குழந்தைக்குப் பால் கொடுத்துக்கொண்டிருக்கும்
பொழுது குழந்தை கொட்டாவி விட்டது. அப்பொழுது அதன்

வாயால் அண்டசராசரங்களெல்லாம் கண்டு ஆச்சரியமடைந்தாள். ஜகத்
ஜல உலகெல்லாம் பகவத்தினிடம் மாயையினின் தோற்றம் என்பதைத் தெ
ரிவித்தனர். யதுகுலத்திற்கு ஆசாரியரான கர்க்கமுனிவர் வஸுதே
வரால் அனுப்பப்பட்டு நந்தகோபனுடைய கிருஹத்திற்கு வந்தார். நந்த
கோபர் அவருக்கு உபசாரம் செய்து "ஸ்வாமி! தாங்கள் ஜோதிஷசாஸ்தி
த்திலும் கரைகண்டவர், எங்கள் குழந்தைகளுக்கு நாமகரணம் செ
ய்விக்க வேண்டும்" என்று கேட்டுக்கொண்டார். கர்க்கர் "நான
யாதவர்களுக்கு ஆசாரியன் என்பது ப்ரஸித்தம், நான் இந்தக் குழந்
தைகளுக்கு நாமகரணம் செய்வதை அறிந்தால், வஸுதேவருக்கு
ம் உமக்கும் உள்ள ஸ்நேஹம், தேவகியின் எட்டாவது குழந்தை பெண்
ணாக இருக்க முடியாது, உன்னைக் கொல்லப் போகிறவன் மறைவா
க உள்ளான் என்ற மாயாதேவியின் வார்த்தை இவைகளை ஆலோசனை
செய்து மறைவாக வளரும் குழந்தை இதாகத்தானிருக்கும் என்று
எண்ணி பாபியான கம்ஸன் கொல்லவருவான், அது அனர்த்த
மாகும்" என்றார். அதைக் கேட்ட நந்தர் "இந்த ரஹஸ்யத்தை ஆடம்
பரமின்றி ரஹஸ்யமாகத்தான் நடத்தி வைக்க வேண்டும்" என்று கே
ட்டுக்கொண்டார். கர்க்கர் "இந்த ரோஹிணியின் புத்ரன் தன்னு
டைய குணங்களால் ஜனங்களை ஸந்தோஷிக்கச் செய்வான், ஆகை
யால் ராமன் என்றும், அதிக பலமுள்ளவன் ஆகையால் பலன் என்
றும்,

யாதவர்களை இணைத்து வைப்பதால் ஸ்ரீகிருஷ்ணன் என்றும்
கூறுவார்கள். யசோதையாள் புத்திரனுக்கு முன் யுகங்களில் வெளுப்பு
சிகப்பு, மஞ்சள் நிறங்கள் இருந்தன. இப்போது கருப்பு நிறமாக
இருப்பதால் கிருஷ்ணன் என்றும், ஒருசமயம் வஸுதேவருக்கு
புத்திரனாக இருந்ததால் வாஸுதேவன் என்றும், தத்துவஞானிகள் அறி
வாளிகள் கூறுகிறார்கள். இவனுடைய குணங்களையும் செயல்க
ளையும் அனுஸரித்து அநேகம் பெயர்களும் உண்டு.
அவைகளை நானும் அறிவேன் மற்றவர் அறியார். இவனால் உங்க
ளுக்கு பலவகையிலும் க்ஷேமம் உண்டாகும், கஷ்டங்களிலும்
இவனிடம் ப்ரியமானவர்களுக்கு எல்லா கஷ்டங்களும் தீரும்,
நாராயணனுக்கு ஸமமாக இருப்பான், இவனை ஜாக்கிரதையாகக்
காப்பாற்றும் என்று கூறி கர்க்கர் சென்றார். நந்தகோபரும்
யசோதையும் சந்தோஷப்பட்டார்.

ராமகிருஷ்ணர்கள் தவழ ஆரம்பித்தார்கள், தவழும்பொழுது கா
ல் சலங்கைகளின் சப்தத்தைக் கேட்டு மகிழ்ந்து தாயாரிடம் செல்
லுவார்கள், கன்றுகளின் வாலைப்பிடித்து இழுத்து விளையாடுவா
ர்கள், அதைக்கண்டு கோபிகைகள் வீட்டு வேலைகளை மறந்து ஸந்தோ
ஷிப்பார்கள். இந்தக் குழந்தைகள் பரபரப்பாக விளையாடும் பொழுது அ
க்னி ஜலம் முள் இது போன்றவைகளால் அவர்களுக்கு கெடுதல்

சோராமல் இருப்பதற்கு தாயார்கள் வீட்டு வேலைகளை மறந்துமிக
வும் இமைப்பட்டார்கள். சில நாள்களில் நடக்க ஆரம்பித்து மற்ற கோபா
லர்களுடன் விளையாடுவதைக் கண்டு கோபிகைகள் மகிழ்ந்தார்கள்.
ராமகிருஷ்ணர்களுடைய அழகான சிறுவிளையாட்டைக் கண்டு கோபி
கைகள் மகிழ்ந்து கிருஷ்ணனைக் குறித்து யசோதையிடம் கூறினார்கள்—
யசோதே! உன் குமாரன் கண்ணன், மாடுகளைக் கறக்க வேண்டாத சமயத்தில்
கன்றுகளை அவிழ்த்துவிடுகிறான் நாங்கள் கூச்சலிட்டால் சிரிக்கிறான்
பால் தயிர் வெண்ணெய்களை தந்திரமாகத் திருடுகிறான், திருடிய அவைக
ளை சாப்பிட்டு மீதியை குரங்குகளுக்குக் கொடுக்கிறான், மீதியானால்
திரவபாண்டத்தை உடைத்துவிடுகிறான், சில சமயம் தயிர் பால் கிடைக்க
வில்லையானால் கோபத்துடன் குழந்தைகளைக் கிள்ளி அழவிட்டு ஓடிவிடு
கிறான். அவனுக்கு பயந்து எட்டாத உயரத்தில் உறியில் வைத்திருந்
தால், நாற்காலி உரல் முதலானவைகளை அடுக்கி மேல் நின்று தாழி
யில் ஓட்டை போட்டு தயிர் பால் வெண்ணெய்களை சாப்பிடுகிறான். இரு
ட்டான அறையில் இருந்தால் தன் ஆபரணங்களில் உள்ள ரத்னங்களி
ன் ப்ரகாசத்தால் அறிந்துவிடுகிறான், வீட்டு வேலையில் ஈடுபட்டி
ருப்பதால் எங்களால் கவனிக்க முடிவதில்லை. பூஜா ஸ்தானங்களி
ல் மலமூத்ர விஸர்ஜனம் செய்துவிடுகிறான். இவ்விதமெல்லாம்
செய்துவிட்டு உன்னிடம் ஸாதுக் குழந்தை போல் இருக்கிறான்.

ஷஷ்டம் அருணைக்கண்டு

இவ்விதம் அவர்கள் சொல்லும்பொழுது தாயார் மடியிலி

த்த பயத்தை மறைக்க முடியாமைக்கண்டு தெரிந்து ஆனந்தப்ரவசமாகி

யசோதை குழந்தையைக் கண்டுக்களித்தாள்.

அதோவா கோபர்கள் அவர்களுடன் விளையாடிக்கொண்டிருக்கும்

பொழுது ராமன் தேவானவர்கள் யசோதையிடம் கிருஷ்ணன் ம

ண்ணைத் தின்றான் என்றார்கள். அவள் கிருஷ்ணனைக் கையை

ப்பிடித்து அதனால் பயந்து வாழிக்கும் கிருஷ்ணனிடம் ஏன் மண்ணை

த்தின்றாய் ராமன் தேவானவர்கள் சொல்லுகிறார்களே என்றாள்.

கிருஷ்ணன் அம்மா நான் சாப்பிடவேயில்லை எல்லோரும் பொ

ய் சொல்லுகிறார்கள் என்றான். அப்படியானால் வாயைத்திற

என்று அவள் சொல்ல வாயைத்திறந்தான், அதில் சகல உலகங்

களையும் தன்னுடே கோகுலத்தையும் கண்டு, இது சொப்பனமோ அல்

லது ஈச்வரனுடைய மாயையோ, என் புத்தி மோஹமோ, அல்லது எ

ன் குழந்தையின் ஐச்வர்யமோ என்று உண்மையை அறி

யேன் மனதிற்கெட்டாதவருடைய சக்தியால் எல்லாம் தோ

ன்றி மறைக்கிறதோ, அவருடைய மாயையால் நானும்

பதி என் மகன் என்று மயங்குகிறேனோ அவரை சரணமடைகிறேன்

என்று உணர்ந்து மதித்தாள். பகவான் தன் மாயையைத் தாண்ட அ

வள் தன் போல என் புத்ரன் என்று எண்ணி குழந்தையை ஆசையுடன்

மடியில் வைத்து மகிழ்ந்தாள். உபநிஷத்துக்களாலும் பக்தர்களா
லும் புகழப்படும் மஹிமையுள்ள பகவானைத் தன் புத்திரனாகக் கொண்டாள்.
வஸுக்களுக்குள் ஒருவரான துரோணர் என்பவர் அவருடைய பத்னி
தரை என்பவள் இருவரும் தவம் செய்து பூலோகத்தில் நாங்கள் பிறந்து
பகவானிடம் பக்தி செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்
கள். அவ்விதமே துரோணர் நந்தகோபராகவும், தரை யசோதை
யாகவும் பிறந்தார்கள். அவர்களுக்கு இக்கிருஷ்ணனிடமும் கோபர்
கோபிகைகளிடமும் பக்தி ஏற்பட்டது. பிரம்மாவின் வரத்தையனு
ஸரித்து பகவான் ராமனோடு அவதாரம் செய்து பல லீலைகளைச் செ
ய்து அவர்களை ஸந்தோஷப்படுத்தினார். இதையாலேயே பெற்
ற தாய் தந்தையர்களான தேவகீ வஸுதேவர்களுக்குக் கிடையாத
பகவானுடைய லீலா விநோதானுபவம் இவர்களுக்குக் கிடைத்த
து. || ஒரு நாள் யசோதை வேலைக்காரிகளை வெவ்வேறு வேலைகளை
ச் செய்ய உத்தரவிட்டுத் தானே தயிர் கடைந்தாள். கடையும் பொழுது கிரு
ஷ்ணனுடைய பால லீலைகளை நினைத்துப் பாடிக் கொண்டிருந்தாள். அப்பொழுது க
ண்ணன் தாயிடம் பால் குடிக்க வந்து மத்தைப் பிடித்துக் கொண்டான். அவனை
யசோதை மடியில் வைத்து அவன் சிரிக்கும் முக அழகைப் பார்த்துக் கொண்டி
பால் கொடுத்தாள். பால் குடித்துக்கொண்டிருக்கும் பொழுது அடுப்பில் வைத்
திருந்த பால் பொங்குவதைப் பார்த்து குழந்தையைக் கீழே விட்டு வேகமாக

ஓடினான். அதனால் கோபமடைந்து பொய்யாக அழுது கொண்டு
அங்கிருந்த கல் குழவியால் தயிர்த்தாழியை உடைத்துவிட்டு வெண்ணெ
யைக் கையில் எடுத்துக்கொண்டு மறைவான இடத்தில் தின்றுகொ
ண்டிருந்தான். யசோதை பாலை இறக்கிவிட்டு வந்து தாழி உடைத்திரு
ப்பதைக் கண்டு சிரித்தாள், கண்ணனைக் காணவில்லை, தேடும்பொழு
து உரியிலுள்ள வெண்ணெயை எடுத்து தான் சாப்பிட்டு குரங்கிற்கு
க்கொடுத்துக் கொண்டு உரலின் மேல் உட்கார்ந்திருப்பதைக் க
ண்டு மெள்ள ஒரு கழியை எடுத்துக்கொண்டு சென்றாள். அவனை
ப் பார்த்தவுடன் கண்ணன் பயந்தவன் போல் வேகமாக ஓடினான். தாயு
ம் தலைவாரி கோலமாக வேகமாக ஓடி அவனைப் பிடித்தாள். அழுதுகொ
ண்டு மை இட்ட கண்களைக் கையால் கசக்கிக்கொண்டு பயந்து நடுங்
கும் அவனை அதட்டிக் கழியை எறிந்துவிட்டு கயிற்றால் கட்ட முயன்றா
ள். பெரு உரலில் கட்டும்பொழுது கயிறு இரண்டு அங்குலம் கு
றைவாக இருந்தது. மற்றொரு கயிற்றைச் சேர்த்துக் கொண்டு கட்டினாள்.
அதுவும் இரண்டு அங்குலம் குறைவாக இருந்தது. இப்படியே வீட்டிலுள்ள
கயிறுகளெல்லாவற்றையும் கட்டியும் இரண்டு அங்குலம் குறைவாக இருந்தது
பக்கத்திலுள்ள கோபிகைகள் சிரித்தார்கள், யசோதையும் புன்சி
ரிப்புடன் ஆச்சரியமடைந்தாள். தாய் படும் சிரமத்தைக் கண்டு க
ண்ணன் கட்டுண்டான். (இதனால் பக்தனிடம் பகவானுடைய அன்பு காட்
டப்பட்டது).

குபேரனுடைய புத்ரர்களான நளகூபரன், மணிக்ரீவன்
என்கிற இவ்விருவர்களும் கைலாஸத்தில் உள்ள உபவனத்தில் மத்யபானம் செய்து
வெறிபிடித்தவர்களாக ஸ்திரீகளுடன் ஸஞ்சாரம் செய்து வட கங்கையி
ல் ஜலக்ரீடை செய்து கொண்டிருந்தார்கள். நாரதர் அவ்வழியாக எதிர்-
சையாக வந்தார், அவரைக் கண்டு ஸ்திரீகள் வெளிவஸ்திரங்களைக் க
ட்டிக்கொண்டார்கள், ஆனால் குடிவெறியும் பெண்வெறியும் பிடித்த மற்ற
இவ்விருவர்களும் வஸ்திரம் கட்டிக்கொள்ளவில்லை. அவர்களுடைய மதத்தை
அடக்கி அநுக்ரஹம் செய்ய நாரதர் மரமாகும்படி சாபமிட்டார். என்னு
டைய அநுக்ரஹத்தால் பூர்வஜன்ம நினைவு இருக்கட்டும், நூறு வருஷங்க
ளுக்குப் பிறகு வாஸுதேவனுடைய தரிசனத்தால் பக்தி ஏற்பட்டு சா
பம் நீங்கி தேவலோகம் செல்லுங்கள் என்று கூறிவிட்டுச் சென்
றார். அந்த சாபத்தின்படி குபேரபுத்ரர் இருவரும் கோகுலத்தில் மருதமரங்
களாக ஆனார்கள். அப்பொழுது பகவான் நாரதருடைய வார்த்தையை அநு
ஸரித்து உரலில் கட்டுண்டபடியே மெள்ளச் சென்று நெருங்கி இருக்
கும் அந்த இருமரங்களுக்கிடையே நுழைந்து உரலை இழுக்க மரங்கள் ப
லத்த சப்தத்துடன் வேருடன் சாய்ந்தது. அதிலிருந்து இரு தேவபுருஷர்
கள் தோன்றி பகவானை ஸ்துதி செய்து யதுபதியான வாஸுதேவனுக்கு
நமஸ்காரம் என்று கூறி வணங்கி நாரதருடைய கிருபையால் தங்கள் தரி
சனம் கிடைத்தது, நாங்கள் தங்களுடைய பக்தர்கள், எங்களுடைய

வாக்குக்கு உங்களுடைய குணங்களைச் சொல்லுவதிலும்,
காதுகள் கதையைக் கேட்பதிலும், கைகள் பூஜை செய்வதிலும்,
மனம் பாதங்களை ஸ்மரணத்திலும், தலை தாங்கள் வஸிக்குமிடங்களி
ல் வணங்குவதிலும், கண்கள் தங்கள் ஸ்வரூபமான பாகவதர்களை தரிசனத்
திலும் ஈடுபட்டிருக்கட்டும் என்று வேண்டினார்கள். நார
தர் உங்களுக்குச் செய்த சாபமே மகா அனுக்ரஹத்தை அளிக்கும். பக
தர்களை தரிசித்தாலே பந்தம் நீங்கும். நீங்கள் கேட்டுக்கொண்டபடி
என்னிடம் பக்தி நிலைக்கட்டும். செல்லுங்கள் என்றருளினர்.
அவர்களும் பகவானை வலம் வந்து விடை பெற்று தேவலோகம் செ
ன்றார்கள். மரம் விழுந்த சப்தத்தைக் கேட்டு நந்தர் முதலான
கோபர்கள் ஓடிவந்து மரங்கள் விழுந்திருப்பதையும் அதனிடையில்
உரலில் கட்டுண்ட கண்ணனையும் ஆச்சர்யத்துடன் பார்த்து மர
த்தை சாய்த்தது யார் என்று கேட்க அங்கிருந்த சிறுவர்கள் கண்
ணனால் என்றுரைத்தனர். நந்தர் குழந்தை ஆபத்தினின்று தப்பி
யதைப் பார்த்து ஸந்தோஷத்துடன் உரல் கட்டை அவிழ்த்துவிட்
டுச் சென்றார். கண்ணன் கோபிகைகள் புகழ்வதைக் கேட்டுச்
சிலசமயம் நர்த்தனம் செய்வார், பாடுவார். அவர்கள் ஏவினால்
ஆஸனம், படி, பாதுகை இவைகளை எடுத்துக்கொடுப்பார். இவ்
விதம் பல லீலைகளை அவர்களுடைய ப்ரீதிக்காகச் செய்து

பக்தர்களுக்கு அதீனமானவரென்பதைக் காண்பித்தார்। ஒருவேளை
த்ரிவிக்ரமத்தைப் படியும் அளந்து கேட்டுக் கண்ணன் இன்னொருக
ஸிறும் தான்யத்தை எடுத்துக்கொண்டு போய் அவனுடைய பெட்டி
யால் போட்டார். அவன் இன்னொரு திராயமுறைக்கே கொடுத்தான்,
கண்ணனும் அவன் பெட்டியால் தான் போட்டதால் ரத்னங்களால் அ
(போல)
ந்தப்பெட்டி நிரம்பியது। மஹாவிஷ்ணுவைப் போல விளங்கினார்॥

ஒருகால் நந்தகோபர் முதலான கோபர்கள் ஒன்றுகூடி
ஆலோசனை செய்தார்கள். அப்பொழுது உபநந்தன் என்பவர் இந்த
கோகுலத்தில் பூதனை, சகடன், புயல்காற்று மரங்கள் முதலிவை
களால் ராமக்ருஷ்ணர்களுக்குப் பல ஆபத்துக்கள் தோன்றியது
ன். அதிர்ஷ்டவசமாய் பிழைத்தனர், ஆகையால் இனி இருக்கவேண்டாம், ஸமீ
பத்திலுள்ள ப்ருந்தாவனம் பசுக்களுக்கும் நமக்கும் ஸௌகர்யமாகவா
யிருக்கும் இடம் அங்கே செல்லலாம் என்று கூறினார். அதன்படி எல்லோ
ரும் பசுக்களுடன் வண்டிகளில் ராமக்ருஷ்ண
ர்களுடன் யசோதை ரோஹிணி இவர்களும் ப்ருந்தாவனம்
சென்று வண்டிகளை அரைச்சந்திர வடிவாக நிறுத்தி குடிசை
களையும் அமைத்துக்கொண்டார்கள். ப்ருந்தாவனம், கோவர்த்த
னமலை, யமுனாநதி இவைகளைக் ~~இவைகளை~~க் கண்டு ராமக்ருஷ்ணர்கள்
மிகவும் ப்ரீதியடைந்தார்கள். ராமக்ருஷ்ணர்கள் கன்று மேய்க்கும்
பருவத்தை அடைந்தார்கள்।

ஒருநாள் கண்டு உருவத்துடன் பாணாசுரன் தோள்களை அறு
க்கப்ப்ரவேசித்தான், கண்ணன் அதைஅறிந்து ராமனிடம் காட்டியு
ந்தக் கன்றின் கிருபாணங்களைக் கைப்பற்றித்து அருகிருந்தவாடர
த்தில் வந்திருந்தார் வானரப் புலிகளுடன் அஸுரனைப் பிடித்துவ
ந்தான், எல்லோரும் ஆச்சரியமடைந்தார்கள்॥ ஒருநாள் அவ
ன் கன்றுகளை மேய்க்கக் கொண்டு போனவந்து கன்றுகளுக் கெ
லம் காட்டுத்தீக்களும் பிடித்தார்கள், அங்கே பெரிய கொக்கு ஒ
வடிவத்துடன் பகாசுரன் தோன்றிக் கண்ணனை விழுங்கினான், அ
வன் தொண்டையை அனலாகக் காந்த வெளியே உமிழ்ந்தான், தன் மே
க் கால்களினால் கொல்ல யத்தனம் செய்யும் பொழுது அவனு
டைய மூக்கைக் கோரைப்புல்லைக் கிழிப்பது போல் கிழித்துக்கொ
ன்றான், எல்லோரும் மகிழ்ந்தார்கள்॥ ஒருநாள் மாலையில்,
மைனாவல் அப்போது மேகத்தின் குரலைப்போல் நாதத்தின் கண்ணும் பலவிதங்களைச்
செய்தார்கள்॥ கண்ணன் ஒருநாள் வனபோஜனம் செய்யவிரு
காலையில் கொம்பு ஊதி, தன் தோழர்களை ஆயிரக்கணக்கானவர்களை
எழுப்ப அவர்களுடனும் எவ்வெவைக்கும் ஆயிரக்கணக்கான கன்
றுகளுடனும் உறிகளில் அன்னம் முதலானவை கட்டி கொம்பு யாழ்
இவைகளுடனும் வனம் சென்றார். எல்லோரும் தளிர், புஷ்பம், பழங்க
ள், இலைகளாலும், தலைக்குப் பூக்களாலும் அலங்காரம் செய்து கொ
ண்டிருந்தார்கள்.

பசுவினைக் கொடிவர்களி முதலானவைகளை அளித்து வைத்தும் ஆடியும், ஆடி
ப்பாடித்தும் புல்லாங்குழல் கொம்புகளை ஊதியும், பசுக்கன்றுகளைப் போல
கத்தியும், மயில்களைப் போல் ஆடியும், குரங்குகளின் வாலைப் பிடித்திழுத்தும்
பலவிதமாக விளையாடினார்கள். (ஞானிகளுக்கு ப்ரஹ்மானந்த அனுப
வமாகவும், பக்தர்களுக்கு தெய்வமாகவும், அஞ்ஞானிகளுக்கு மனி
தக்குழந்தையாகவும் உள்ள பகவானுடன், விளையாட கோபர்களுக்
கு முன் செய்த மிகுந்த புண்யத்தால் ஸந்தர்ப்பம் கிடைத்தது.) ॥
ராமக்ருஷ்ணர்களுடன் கோபர்களும் ஸந்தோஷமாக விளையாடிக்கொ
ண்டிருப்பதைப் பொறுக்காமல் பூதனை பகாஸுரர்களுக்கு ஸஹோதரனா
ன அகாஸுரன் கம்ஸனால் அனுப்பப்பட்டு ராமக்ருஷ்ணர்களைக்
கொல்ல அவர்கள் வரும் வழியில் மலை போன்ற பெரும் பாம்பு உரு
க்கொண்டு பெரிய வாயைத் திறந்து கொண்டு படுத்திருந்தான்.
கோபர்கள் மலைப்பாம்பின் வாய் போன்ற குகை என்று எண்ணி கன்று
களுடன் வாயில் நுழைந்தார்கள். அஸுரன் அவர்களை விழுங்கி
விடாமல் கண்ணனுடைய வரவை எதிர்பார்த்திருந்தான். இதை அறி
ந்த கண்ணன் இவனைக் கொல்ல வேணும், பக்தர்களான கோபர்களை
க் காக்கவும் வேணும் என்று எண்ணி அவன் வாயில் நுழைந்தான்,
ஆகாயத்திலிருந்த தேவர்கள் கலங்கினார்கள். அஸுரர்கள் மகிழ்ந்தா
ர்கள். அந்த ஸமயம் பகவான் அவன் கழுத்தில் நின்று தன் சரீரத்
தை

வளர்த்தார் அதனால் அவன் தொண்டை கிழிந்து மூச்சடைப்
படியாமல் பிராணவாயு மண்டையைப் பிளந்து சென்றது. அவனுடை
ய உடலிலிருந்து ஒரு ஜோதி தோன்றி கண்ணனிடம் ஐக்கியம
தன் அமிர்த கடாக்ஷத்தால் பார்க்க கோபர்கள் கன்றுகள் எல்லா
ம் தூங்கி எழுந்தது போல் உயிர் பெற்று மகிழ்ந்தனர்கள். கண்ணனு
ம் வெளியே வந்தான். தேவர்கள் பூமாரி பொழிந்தார்கள். வாத்ய
கோஷத்துடன் ஸ்தோத்ரம் செய்தார்கள். இது பதினொரு வயது
திருவிளையாடல் மாயக் கிடைப்பது.

பிறகு பகவான் தான் அகாசுரனிடமிருந்து காப்பாற்றிய கோப
ர்கள் கன்றுகளுடன் யமுனையின் மணல் திடலுக்கு வந்து
(கூறினார்:) நண்பர்களே! இந்தத் திடல் மெத்தவும் அழகாக இருக்
கிறது. விளையாடுவதற்கு இந்த மிருதுவான மணல், மலர்ந்த தா
மரையின் வாசனையுடன் கூடிய மணம், கரையில் புஷ்பங்கள் கொண்ட
ய மரங்கள். இந்த அழகான இடத்தில் போஜனம் செய்ய வேண்டு
ம். நாம் பசியுடனிருக்கிறோம். பகல் நேரம் அதிகமாகிவிட்டது. கன்றுகள்
ஜலம் குடித்துவிட்டு பக்கத்தில் புல் மேய்ந்து கொண்டிருக்கட்டும்
என்று கூறினார். சிறுவர்களும் அப்படி செய்துவிட்டு, உறிகளி
ல் கொண்டு வந்திருக்கும் தங்கள் உணவுகளை எடுத்து பகவானுட
ன் ஸந்தோஷமாக சாப்பிட ஆரம்பித்தார்கள். அந்த மணல் மேட்டில்

பகவானை நடுவில் வைத்து இவர்கள் தாமரை இதழ்கள் போல வட்ட-
வடிவமாக உட்கார்ந்தார்கள். புஷ்பங்கள் இலைகள் தளிர்கள் பாறைக
ள் இவைகளிலும் இலைக்குரிய வேலையையும் அன்னங்களை வைத்துச் சாப்
பிட்டார்கள். சாப்பிடும்பொழுது அவரவர் தங்கள் திறமையைப் பேசி
க்கொண்டும் சிரித்து உல்லாசமாகப் பேசிக்கொண்டும் சாப்பிட்டார்
கள். கண்ணன், புல்லாங்குழலை இடையில் செருகிக்கொண்டும், ஊது
கொம்பையும் பிரம்பையும் கக்கத்தில் இடுக்கியும், இடது கையில் ருசி
யான அன்னத்தை வைத்துக்கொண்டு, விரல்களின் இடுக்கு
களில் ஊறுகாய்களை வைத்துக்கொண்டும், நடுவில் நின்றுகொ
ண்டு சுற்றியுள்ள நண்பர்களை வேடிக்கையாகப் பேசிச் சிரிக்க
வைத்துக்கொண்டும், யக்ஞங்களில் தேவதையாக இருந்து ஹவிஸ்
ஸைப் பெறும் பகவான், ஆகாயத்தில் தேவர்கள் பார்த்துக்கொண்
டிருக்கும்பொழுது பாலலீலையாக இவ்விதம் போஜனம் செய்தார்.
இவ்விதம் இவர்கள் போஜனம் செய்துகொண்டிருக்கும் பொழுது கன்
றுகள் புல் மேய்ந்துகொண்டே வனத்தில் வெகுதூரம் சென்றுவிட்ட
டன. கோபர்கள் பயந்தார்கள். கண்ணன் பயப்படவேண்டாம்,
நான் கன்றுகளை தேடி வருகிறேன் என்று கூறி சாப்பாட்டு மீதி அ
ன்னத்தைக் கையில் வைத்துக்கொண்டு கன்றுகளைத் தேடிச் செ
ன்றார். அந்த சமயம் பிரம்மதேவன் பகவானுடைய அகாஸுரமோ
க்ஷ லீலையைக் கேட்டு மோஹமடைந்து

பகவானுடைய லீலையைக் காண விரும்பித் தன் மாயாசக்தி
யால் கன்றுகளையும் பகவான் திரும்புவதற்குள் போஜன
ம் செய்து கொண்டிருந்த கோபர்களையும் வேறிடத்தில் மறைத்து
வைத்துவிட்டார். வனத்தில் தேடியும் காணாததால் கண்ணன் சிந்தி
த்து பிரம்மாவின் செயல் என்று அறிந்தார். பிறகு கோபர்களுடைய
தாய்மார்களுக்கும் பிரம்மாவுக்கும் ஸந்தோஷத்தையுண்டுபண்
ண கன்றுகளாகவும் கோபர்களாகவும் அவரே ஆனார். அந்தந்தக்
கன்றுகளின் நிறம் குணம், அந்தந்த கோபாலர்களுடைய நிறம் குணம்
முதலானவைகள் சிறிதும் மாறாமல் அந்தந்த கிருகங்களில் சேர்ப்
பித்தார். "ஸர்வம் விஷ்ணுமயம் ஜகத்" எல்லாம் விஷ்ணுவே என்ற
உபநிஷத் தத்வத்தை இந்த ஸந்தர்ப்பத்தில் பகவான் விளக்கினார். அவ்வா
றே தினமும் காலையில் கன்றுகளை ஓட்டிக்கொண்டு போய் மாலையில்
கோபர்களுடன் வீடு திரும்புவார். வரும்பொழுது குழல் சத்தம்
கேட்ட உடனேயே கோபிகைகள் மகிழ்ந்து ஆனந்தமடைவார்கள்.
கன்றுகளாகவும் கோபாலர்களாகவும் பகவானே ஆனந்தஸ்வரூபனா)
இருப்பதால் பசுக்களுக்கும் கோபியர்களுக்கும், கன்றுகளிடமும்
கோபால சிறுவர்களிடமும் முன்னைக்காட்டிலும் மிகுந்த ப்ரீதி நா
ளுக்குநாள் வ்ருத்தியடைந்து வந்தது. இவ்வாறு ஒரு வருஷம் பூர்த்தியடை
ய சில நாட்களே இருந்தது. ஒருநாள் கோவர்த்தன மலையால்

மேய்ந்து கொண்டிருந்த பசுக்கள் வெகுதூரத்திலிருந்து கன்றுகளை
ப் பார்த்தவுடன் அதிவேகமாக ஓடிவந்து கோபர்கள் தடுத்தும் நிற்காம
ல் கன்றுகளுக்கிதரமாகவே ப்ரீதியுடன் பாலூட்டியது. இவ்விதம் கோ
பச்சிறுவர்களிடம் கோபகோபாலர்களுக்கும் பசுக்களுக்கும் கன்றுகளி
டமும் முன்பில்லாத அதிக அன்பைக் கண்டு திகைத்துடன் பலராம
ர் தன் ஞானக்கண்ணால் பார்த்தார். எல்லாம் வாஸுதேவமயமாக ப்ரம்ம
மா தான் மறைத்து வைத்துவிட்டு ப்ருந்தாவனம் வந்து பார்த்தார், முன்போ
லவே கோபர்கள் கன்றுகள் வனம் சென்று விளையாடிக்கொண்டிருப்பதைக்
கண்டார். ப்ரம்மலோக நியமப்படி ஒரு நிமிஷமே, பூலோகக் கணக்கின்
படி ஒரு வருஷமாயிற்று. ப்ரம்மா தான் மறைத்து வைத்திருப்பது உண்மை
யா, ப்ருந்தாவனத்திலுள்ளது உண்மையா என்று தெரியாமல் பகவானை
ஏமாற்ற நினைத்துத் தானே ஏமாந்தார். பிறகு ப்ரம்மா ப்ருந்தாவனத்
திலுள்ள ஸகல கோபச்சிறுவர்கள், கன்றுகள் எல்லாம் வெவ்வேறான
ரும் வைகுண்டத்தில் பகவான், நீலமேகச்யாமளராகவும் சதுர்பு
ஜராகவும் திவ்ய அலங்காரபூஷிதராகவும் அணிமாதி ஐச்வர்ய தே
வதைகள் ஸேவை செய்வதாகவும் உள்ளதோ அவ்விதமே கண்டார்.
ப்ருந்தாவனத்தில் அந்தத் தோற்றம் மாயையால் மறைந்தது. முன்போ
ல யமுனை மணல்திட்டில் போஜனம் செய்துகொண்டிருந்த நிலைமைக
கண்டு விமானத்திலிருந்து கீழே இறங்கி பகவானுடைய பாதங்களில்

மறைத்தவர்களை ஸமர்ப்பணம் செய்து

விழுந்து பலதடவை வணங்கி நிருக்கத்துடன் ஆனந்தபாஷ்பம்
பெருக்கிக் கொண்டவராகத் தோத்திரம் செய்தார். ஹே தேவா! ஸ்துதிசெ
ய்யத் தகுந்தவரே! நீலமேகச் யாமளரே! பீதாம்பரதாரியே! குன்
றுமணி, மயில் தோகைகளால் அலங்கரிக்கப்பட்ட திருமேனியையுடையவரு
ம், காட்டுப் பூக்களின் மாலையணிந்தவரும், ஒருகையில் அன்னமும்,
பிரம்பு, கொம்பு, புல்லாங்குழல் இவைகளைத் தரிப்பதால் அழகானவ
ரும், மிருதுவான பாதங்களையுடையவருமான கோபாலனுக்கு
நமஸ்காரம். ஸ்துதிகள். தங்களுடைய, என்னை அனுக்ரஹம் செய்ய
எடுத்துக்கொண்ட ஸகுண ரூபமான அத்புத ஸத்வமூர்த்தியின் மஹி
மையை யென்னால் அறியமுடியாது, அவ்வாறு இருக்க ஸச்சிதானந்
த பரப்ரம்ம ஸ்வரூபத்தை எவ்வாறு அறிவேன்! ஸனகாதி யோகியானதங்க
ளிடம் பக்தியில்லாமல் நிர்குண ரூபத்தை அறிய முயற்சி செய்பவ
ர்களுக்கு சிரமம் தான் பலன். பதினாலு லோகங்களோடுகூடிய
ப்ரம்மாண்டத்திற்கு அதிபதியான நான் எங்கே, அநேக
கோடி ப்ரம்மாண்டங்களுக்கு நாயகனான தாங்கள் எங்கே. என்
னைக் காட்டிலும் தாங்கள் மிகவும் மேலானவர். கர்ப்பத்திலுள்ள
சிசு தாயாரின் வயிற்றை உதைத்தால் அவள் பொறுப்பது போல என்னு
டைய அபராதத்தைத் தாங்கள் பொறுத்தருள வேண்டும். தாங்கள் ஆதி
நாராயணன். ஸகல ப்ராணிகளிடத்திலும் ஆத்மாவாக இருக்கும்
தங்களை அஞ்ஞானிகள் வெளியில் தேடுகிறார்கள்.

ஸந்நிதானத்தே ப்ரயாண பரமாத்மாவைத் தன் பக்கல் கொண்டிருந்த
கோகுல பரிந்தாவன வாஸிகளுடைய பாக்யத்தை என்னவென்பேன்
மிகுந்த பாக்ய சாலிகளாகிய தங்களுக்குத் தான் எல்லாமறிந்தவர்த்துங்களிடம்
விடைபெறுகிறேன் என்றுங்களிமேன்றும் ப்ரதக்ஷிணங்கள் செய்து பாதங்
களில் வணங்கி விடைபெற்று ப்ரும்ம லோகம் சென்றார் மீண்டேடப்போ
னகன்றுகள் ஓட்டி வந்து தன் பாலருடன் வன போஜனம் செய்து வ
ட்டு அகாஸுரனுடைய உடலைப் பார்த்துக் கொண்டு பரிந்தாவனம் வந்தா
ர். கோபர்கள் இன்று கண்ணன் அகாஸுரனைக் கொன்றான் என்று கூறி
னார்கள் ॥ இச்சரித்ரத்தைக் கேட்பவர்களுக்கு ஸர்வ மங்களமுண்டாகும் ॥

ராமகிருஷ்ணர்கள் கௌமாரம் அதிகவயதாகியதால் கன்றுமே
ய்க்கும் தொழிலை விட்டுப் பசுமாடு மேய்ப்பவர்களாக ஆனார்கள் பரிந்தாவனம் கோ
வர்த்தன கிரி இவைகளில் மாடுகளை மேய்த்துக் கொண்டும் அங்கு கான
புஷ்பங்களைப் பார்த்துக் கொண்டும் பலவிளையாட்டுக்கள் விளையாடிக்
கொண்டும் கோபாலர்களுடன் விளையாடிக் கொண்டும் மல்யுத்தம் செ
ய்து கொண்டும் ஆனந்தமாகத் திரிந்தார்கள் ஸிலஸமயம் மல்யுத்தம் செ
ய்து களைத்து அதிலே களைப்பைத் தீர்த்துக் கொள்வான் ~~கண்ணன்~~ கோ
பாலர்கள் கண்ணனை தொடையில் படுப்பார் கால்களைப் பிடிப்பார்கள் ராமகிருஷ்ணர்களு
டைய ஸ்நேகிதர்களான ஸ்ரீதாமா, ஸுபலன், தோககிருஷ்ணன் மு
தலானவர்கள், ஒருநாள், ஸ்ரீராம, கிருஷ்ண, ஸமீபத்தில் வந்து

335

மரத்தோட்டம் உள்ளது அதில் இனியான பனம்பழங்கள் ~~வ...~~

வழிந்து கொண்டிருக்கிறது. அந்த வனத்தை அநேக அசுரர்களுட

ன் தேனுகன் என்ற அசுரன் காவல் புரிகிறான். பழங்களை மற்றவர்

சாப்பிடவோ, [illegible] கொய்யவோ விடுவதில்லை. அந்தப் பழங்களை சாப்

பிட விரும்புகிறோம் முடியுமானால் அளியுங்கள் என்று கூறினார்கள்.

நண்பர்களின் விருப்பத்தை நிறைவேற்ற ராமகிருஷ்ணர் தாள வனம்

-பனந்தோப்பு சென்றார்கள். பலராமர் பனைமரங்களைக் கை

யால் உலுக்கி பழங்களை பூமியில் விழச் செய்தார். பழங்கள் விழும் சப்தத்தை

க் கேட்டு கழுதை உருவம் கொண்ட தேனுகன் வேகமாக ஓடிவந்து தன்

பின்கால்களால் ராமனின் மார்பில் உதைத்துக் கனைத்து மறுபடியு

ம் உதைக்கத் தூக்கிய பின்கால்களையும் ஒரு கையால் பிடித்துத் தூக்கிச் சுற்றி

பனையின் மேல் எறிந்தார். சுற்றும்போதே அவன் இறந்துவி

ட்டான். அவனுடைய சரீரத்தால் தாக்குண்ட மரம் மற்றொரு மரத்தில் மோ

தி அங்குள்ள மரங்கள் யாவும் பெரிய காற்றினால் போல் சாய்ந்தன.

பிறகு தேனுகனுடைய கூட்டாளிகள் கூட்டமாக வந்தார்கள்.

அவர்கள் எல்லோரையும் ராமனும் கிருஷ்ணனும் பின்கால்களைப்

பிடித்துச் சுற்றி மீதமுள்ள மரங்களில் எறிந்தார்கள். அதனால் அந்த

தோட்டம் முழுவதும் அசுரர்களின் சரீரங்களாலும் பனம்பழங்களாலும்

நிரம்பியது. தேவர்கள் பூமாரி பொழிந்தார்கள். பிறகு அந்த வனம்

பயமின்றி பசுக்களையும், எல்லா மனிதர்களும் பழங்களைச் சாப்
பிடவும் போகாமையால் எல்லோரும் சேர்ந்து வருந்தினார்கள்॥
ஒருநாள் கண்ணன் பலராமனைத் தவிர மற்ற நண்பர்களுடன் யமுனைக்கு வந்
தார். கோபர்களும் பசுக்களும் தாகத்தால் வாடி கலந்த யமுனை ஜலத்தைக்
குடித்ததால் எல்லோரும் இறந்து கரையில் சாய்ந்தார்கள். கண்ணன் தன்னு
டைய அம்ருதக் கண் பார்வையால் அவர்களை உயிர்ப்பித்தார். அவர்கள்
முகுந்தக் கண்ணனுடைய கிருபை யென்று நினைத்து வியந்தார்கள்॥
கருநாகம்
காளியன் என்ற கொடிய விஷமுள்ள ஸர்ப்பம் அந்த யமுனைத் தேக்கமான
மடுவில் வசித்து வருவதால் அந்த ஜலம் விஷமாகி ஜ்வாலை கொதித்து க
ரையில் உள்ள மரங்களும் பறவைகளும், மடுவின் மேல் ஆகாயத்தில் பற
க்கும் பக்ஷிகளும் எரிந்து மடிந்தன. இந்த அபாயத்தை நீக்கவும் யமுனா ஜ
லத்தைச் சுத்தம் செய்யவும் எண்ணி, காளியனை அடக்குவதற்கு,
அந்த மடுவின் பக்கத்திலுள்ள மிக உயரமான ஒரு கடம்ப மரத்தின் மேல்
ஏறி தோள் தட்டி வேகமாக மடுவில் குதித்தார். அதிக கனமுள்ளவ
ராகிய பகவானுடைய அந்த வேகத்தில் மடுவின் ஜலம் நூறு வில் க
டை தூரம் கரையேறிக் கொந்தளித்தது. அச்சப்தத்தைக் கேட்டு அடித்த
லவனாகிய காளியன் கோபத்துடன் வந்து கண்ணனைக் கடித்துத் தன் உட
லால் சுற்றினான். அதைக் கண்ட கோபர்கள் சோகத்தாலும் பயத்தாலும் கீழே
சாய்ந்தார்கள். பசுக்களும் கன்றுகளும் கண்ணீர் வடித்து நின்றன.
அந்த சமயம் சேரியில் அநேகம் அபசகுனங்கள் ஏற்பட்டன।

அதைக்கண்டு ராமன் இல்லாமல் கண்ணன் தனியாகச் சென்
றிருப்பதையும் கண்ணன் சேர்ப்பாரால் சகலமானவர்களும் ராமனு
டன் கண்ணன் நடந்து சென்ற அடிச்சுவட்டைப் பார்த்து யமு
னாக்கரை வந்து ஜலமத்தியில் அசையாமல் இருக்கும் கண்ணனையு
ம் கரையில் கதறிக்கொண்டிருக்கும் கோபர்கள் பசுக்களையும் க
ண்டு எல்லோரும் கண்ணனுடைய லீலைகளை நினைத்து மிகவும் வரு
ந்தினார்கள். அந்த ஹ்ருதத்தில் விழுந்து ப்ராணஹானி அடைய எத்தனித்த நந்
தகோபர் முதலானவர்களை ராமன் தடுத்தான். பகவான் கட்டு
ண்டப்பட்டவர்கள் என்னச் சோர்ந்தவர்களின் துக்கத்தையறிந்து
கட்டுவிலிருந்து [illegible] வந்தார். காளியன் கோபத்துடன் படத்தைத் தூ
க்கிப் பகவானைப் பார்த்துக்கொண்டிருக்கும் பொழுது சிரித்து அவ
து படத்தை அமுக்கி அதன் மேல் நர்த்தனம் செய்தார். பகவானு
டைய நர்த்தன விசேஷத்தையறிந்து தேவர்கள் அதுஸம
யாக பலவாத்ய கோஷங்களைச் செய்து புஷ்பவ்ருஷ்டி செய்து ஸ்து
தி செய்தார்கள். காளியன் கோபத்துடன் எவ்வளவு வேகமாகத்
தூக்க எவ்வளவு முயன்றும் பகவான் நர்த்தனம் செய்து வச
செய்தார். கடைசியாக பல் முழுவதும் ரத்தத்தைக் கக்கிக்கொண்டு ஸ்ரீ
நாராயணனைக் அறிந்து மனதால் சரணமடைந்தான். அந்த ஸ
மயம் காளியனுடைய பத்நிகள் தங்கள் குழந்தைகளை முன்னிட்டுக்
கொண்டு அபராதியான பர்த்தாவைக் காப்பாற்று பகவானைச் சரணம்

அடைந்து ஸ்தோத்திரம் செய்தார்கள். லோகபாலர்களான தாங்கள்
எங்கள் பர்த்தா, தங்களை யாரென்று அறியாமல் ஏதோ தவறை செய்த
பிழையைப் பொறுத்து பதிகளான எங்களுக்காக அவர்களுக்கு ப்ரா
ணபிக்ஷை அளிக்கவேண்டும். தங்களுடைய கட்டளையை எதிர்பார்க்கிறோ
ம் என்று கூறினார்கள். பகவான் பிரசன்னமடைந்து அவர்களைப் பார்த்
டார். அவன் வெகு வேகமாக எழுந்து கொண்டு அஞ்சலி செய்து கொண்டு நின்றான்
ஸர்ப்பங்கள் கோபஸ்வபாவமுள்ளவைகளாக தாங்கள் ஸ்ருஷ்டி
த்ததால் ஸ்வபாவத்தை மாற்ற முடியவில்லை. மாற்றுதல் கஷ்டம் போல என்
ன்று. பகவான் — ஸர்ப்பராஜனே, இந்த ஜலம் மானிடர்களுக்கு உப
காரமாக ஆகவேண்டும். ஆகையால் நீ உன் பரிவாரங்களுடன் ஸமுத்த
ரத்திற்கு சீக்கிரம் செல்லவேண்டும். நான் உன்னை சிக்ஷித்த இந்த கா
ளியமர்த்தனத்தை (நாகமர்த்தனத்தை) இரண்டு ஸந்தியா காலங்களிலும்
நினைப்பவர்களுக்கு ஸர்ப்பபயம் வரக்கூடாது. இந்த தீர்த்தத்தில்
உபவாஸமிருந்து என்னை ஸ்மரித்துக்கொண்டு ஸ்நானம் செய்பவர்
களுக்கு ஸர்வபாபமும் நீங்கும். ஸ்ரீ ரமணகம் என்ற த்வீபத்தில்
வஸித்துக் கொண்டிரு. கருடனுக்குப் பயந்து இங்கு வந்தாய். என்னு
டைய பாத அடையாளம் உன் சிரஸில் இருப்பதால் கருடன் துன்பம்
செய்யமாட்டான் ஆகையால் நீ அங்கு செல்லவேண்டும் என்று கூறினார்.
காளியனும் அவனுடைய பத்னிகளும் உயர்ந்த ஆடைகளையும் ரத்னங்களை
யும் பகவானுக்கு அர்ப்பணம் செய்து ப்ரதக்ஷிண நமஸ்காரம் செய்து

விடைபெற்று ப்ராமணக்ஷபம் சென்றோர்கள். காளியனுடைய
விஷத்தினால் யமுனையின் ஜலம் விஷமயமாயிற்று॥ காளியனுடை
ய பூர்வரலாறு - ஒருசமயம் யமுனையின் கரையில் சௌப
ரி முனிவர் தவம் செய்துகொண்டிருந்தார். அங்குள்ள கடம்ப மரத்
தில் உட்கார்ந்துகொண்டு கருடன் மீன்களைத் தின்றான். இதைக்
கண்ட முனிவர் தவத்திற்கு இடையூறாக இருந்ததால் அவர் கோபத்துடன் இ
ங்கு கருடன் வந்தால் தலை வெடித்து இறக்க வேண்டும் என்று சாபமி
ட்டார். ஆகையால் இங்கு கருடன் வருவதில்லை॥ ரமணகத்வீபத்தி
ல் ஏராளமான ஸர்ப்பங்கள் வாழ்ந்து வந்தன. அவைகளைக் கரு
டன் தோன்றியபடி அழித்து வந்தான். நாகங்கள் பயந்து மாத
ம் ஒருவராக ஒரு மரத்தடியில் நாகங்கள் கருடனுக்கு ஆகாரமா
வதாக ஒப்பந்தம் செய்துகொண்டன. அதன்படி சிலகாலம் நடந்து
வந்தது. காளியன் கருடனுடைய பாகத்தைத் தானே பெற்றுக்
கொண்டுவந்தான். அதனால் கருடனுக்கும் காளியனுக்கும் சண்
டை நடந்து காளியன் தோல்வியுற்று, சௌபரி முனிவரின்
சாபம் நினைத்ததால் கருடனுக்குப் பயந்து யமுனா மடுவில்
வாழ்ந்தான்॥ நந்தகோபர் முதலானோர் மகிழ்வுடனிரு
ந்து யமுனையில் அநேக தானதர்மங்களைச் செய்து பசுபுட
ன் அன்றிரவு அங்கே தங்கினார்கள். காட்டுத்தீ பரவியது
எல்லோரும் கிருஷ்ணனை சரணமடைய அவர் அந்த

தீயைப் பருகி பக்தர்களைக் காப்பாற்றினார் ॥ ஸ்கந்தம் அத்யாயம் 10 - 17 ॥

பிறகு எல்லோரும் கோகுலம் சென்றார்கள். கோடைகாலம் வந்தது. ராமகிருஷ்
ணர்களுடன் கோபாலர்கள் தினமும் வனம் சென்று, குழல் கொம்புகள் வாத்
யம் வாத்ய கோஷங்களுடன் பலவித விளையாட்டுகள் செய்து மகிழ்ந்
தார்கள் மகிழ்ச்சியாக இருந்தார்கள். அப்போது ப்ரலம்பன் என்னும் அசுரன் இடையனாய்
ராமனது கட்சி, கிருஷ்ணனது கட்சி, இருகட்சிகளிலும் பல கோபர்கள்
ராமன் கட்சியிலும் இவர் கிருஷ்ணன் கட்சியிலும் சேர்ந்து விளையாடி
னார்கள். விளையாட்டில் ஜெயித்தவர்களை அபஜயமடைந்தவர்கள்
தோள்வரை சுமக்கவேண்டும் என்று பேசிக்கொண்டு விளையாடினா
ர்கள். ப்ரலம்பன் என்ற அசுரன் ராமன் கட்சியில் கோபாலவேஷத்து
டன் சேர்ந்து. கிருஷ்ணனைக் கொல்லமுடியாது ராமனையாவது கொ
ல்லவேண்டும் என்று எண்ணி அவர்களுடன் விளையாடினான். கிருஷ்ண
ன் இதை அறிந்து கொண்டான். கிருஷ்ணன் கட்சி தோல்வியடைந்தது
அதனால் கிருஷ்ணன் ஸ்ரீதாமனைச் சுமந்தார். ப்ரலம்பன் பலராமனை
ச் சுமந்து கொண்டு வெகுதூரம் சென்றவுடன் ஆகாயத்தில் கிளம்பினான்
அந்த சமயம் அவனுடைய பயங்கரமான அஸுர ரூபத்தைக் கண்டு திடுக்கிட்ட ராமன
ஸங்கிராமத்தை நினைத்து உடன் அவன் தலையில் முஷ்டியால் இடிக்கவே அ
ஸுரன் தலைசிதைந்து உயிரிழந்தான். எல்லோரும் அவனைப் பாராட்டின
ர்கள். தேவர்களும் சந்தோஷமடைந்தார்கள் ॥

பசுக்கள் ஒருநாள் கோடையால் தாகத்துடன் ஜலத்தைத்
தேடிச் சென்று "முஞ்சாரண்யம்" என்ற காட்டுக்குச் சென்றுவிட
டன. கோபர்களுடன் ராமகிருஷ்ணர்கள் தேடிச் சென்று பசுக்களை அ
வைகளின் பெயர்களைச் சொல்லி அழைத்தார்கள். அவைகளும் கத்தி
க்கொண்டு ஓடிவந்தன. அந்தசமயம் அக்காட்டுத் தீப்பற்றியது
கோபாலர்கள் கிருஷ்ணனைச் சரணமடைந்தார்கள். பகவான் அவர்
களைக் கண்களை மூடிக்கொள்ளச் சொல்லி, தீயைப் பருகி அவர்
களையும் பசுக்களையும் பழைய ஆலமரத்தடியில் சேர்த்தார்.
பிறகு போஜனம் செய்துகொண்டு வீடு திரும்பினார்கள்.//

மழைக்காலம் பிறந்து சரத்காலம் வந்தது. பகவான்
வனம் சென்று பசுக்களுடன் கோபவேஷம் பூண்டு கொண்
டையில் மயில்தோகை, காதுகளில் ஆபரணமாக கர்ணிகார
புஷ்பங்கள், அரையில் பீதாம்பரம், கழுத்தில் வைஜயந்தி என்ற
பதித்துக் கட்டி காலவரை தொங்கும், இவைகளால் அ
லங்காரம் பெற்ற வேஷத்துடன் வேணுகானம் செய்துகொண்டு கோ
பாலர்களுடன் விளையாடினார். கண்ணனுடைய வேணுகானம் கேட்ட
உடனே கோபிகைகள் தங்களை மறந்து கண்ணனுடைய லீலை
களைப் பாடுவார்கள்.// ஹேமந்த ருதுவான மார்கழிகாலம் வந்தது
மார்கழி மாதத்தில் கோகுலத்துப் பெண்கள் தாங்கள் கிருஷ்ணரை
அடைவதற்காக ஹவிஸ்ஸை போஜனம் செய்துகொண்டு

ஏகோபாதம் காத்யாயனீ விரதத்தை அனுஷ்டித்தார்கள். ஒவ்வொரு நா
ளும் அருணோதய காலத்தில் யமுனையில் ஸ்நானம் செய்து மணலால் அ
ம்பிகையொன்று விக்ரகம் அமைத்து கந்தபுஷ்ப தூபதீபங்களை நைவேத்யங்கள் செ
ய்து பக்தியுடன் பூஜை செய்து "ஹே காத்யாயனீ, மஹாமாயே, யோகசக்
தியே, ஸர்வலோக நாயகி; தேவியே உனக்கு நமஸ்காரம்; நந்தகோ
பகுமாரனை எனக்குக் கணவனாக அருள வேண்டும்" என்று! ஒவ்வொ
ருவரும் தனித்தனியே வேண்டிக்கொண்டு பெருங்காளியைத் துதித்துவிரத
ம் அனுஷ்டித்து வந்தார்கள். நதிக்கு ஸ்நானத்திற்குச் செல்லும்போது தங்
கள் தோழிகள் ஒவ்வொருவரையும் அழைத்துக்கொண்டு செல்லும்போது கை
கோர்த்துக்கொண்டு கிருஷ்ணலீலைகளைப் பாடிக்கொண்டே செல்வார்கள்.
கோபிகைகள் வழக்கம்போல் யமுனைக்கரையில் வஸ்திரங்களை வைத்துவி
ட்டு ஸ்நானம் செய்யும்பொழுது கிருஷ்ணன் காணக் கூடச் செய்து கொண்டு
விளையாடிக்கொண்டிருந்தார்கள். ஸ்ரீபலராமரின்றி ஏவியது ~~இ~~ இருவனை
கண்ணன் பிள்ளைகளுடன் அங்கு வந்து, கோபிகைகளின் வஸ்திரத்தி
ன் பலவற்றையும் எடுக்க, அவர்களுடைய வஸ்திரங்களை எடுத்துக்கொண்டு அ
ருகிலிருந்த கடம்ப மரத்தில் ஏறிக்கொண்டு பரிஹாஸம் செய்து கொண்டி
ருந்தான். பெண்கள் கெஞ்சிக் கேட்டு அவரவர் வஸ்திரங்களைப் பெற்றுக்கொண்
டார்கள். விரதம் இன்று நிறைவு பெற்றதைக் கிருஷ்ணன் அறிந்தான்.
கழுத்தளவு ஜலத்தில் நின்றால் நடுங்கிக்கொண்டிருக்கும் அவர்கள் வெ
ட்கத்தோடு வரப்பார்த்துக்கொண்டு பக்தியுடனும் அடக்கத்துடனும்,

ஸ்யாமஸுந்தர் நாங்கள் உன் பக்தைகள் நீ சொல்வதைக்
கேட்கிறோம் தாமரைநிறத்தினால் எங்கள் வஸ்திரங்களைக் கொடுக்கவில்லை
யேல் அரசனிடம் கூறுவோம் என்றார்கள்।
பகவான் - நீங்கள் என் பக்தைகளானால் என் சொ
ல்லைக் கேட்பதானால் இங்கு வந்து வஸ்திரங்களை வாங்கிக்கொள்ளு
ங்கள் என்றார். அவர்களும் இவைகளால் ரஹஸ்யஸ்தானத்தை
மறைத்துக் கொண்டு கரையேறினார்கள். பகவான், அவர்களுடைய
அத்யந்த பக்தியை அறிந்து தோளில் வஸ்திரங்களை வைத்துக்கொ
ண்டு நீங்கள் விரதானுஷ்டான காலத்தில் வஸ்திரமில்லாமல்
நதியில் ஸ்நானம் செய்தது தேவாபராதமாகும். அந்தப்பாபம்
நீங்குவதற்காக இருகைகளையும் கூப்பி வணங்கிவிட்டு வஸ்திரங்க
ளைப் பெற்றுக்கொள்ளுங்கள் என்று கூறினார். அவர்களும் விரதபல
னைக் கருதி அப்படியே செய்தனர். பகவான் வஸ்திரங்களை அளித்
தார். அவர்களும் மிகுந்த கோபமில்லாமல் வஸ்திரங்களை வாங்கி
உடுத்திக்கொண்டு பகவானையே பார்த்துக்கொண்டு லஜ்ஜையு
டன் நின்றார்கள். பகவான் தன்னுடைய பாதஸ்பர்சத்திற்காக ஸ
ங்கல்பம் செய்து அவர்கள் விரதானுஷ்டானம் செய்தார்கள் என்று அறி
ந்து, கோபஸ்த்ரீகளே உங்களுடைய ஸங்கல்பம் வீண்போகாது.
என்னிடம் அசைக்கமுடியாத ஆசைவைத்தவர்களுக்கு வேறு

ஹ்ருதய அனைசரந்படாது. வறுக்கப்பட்டவையோ, வேகவைக்கப்ப
ட்டவையோ தான்யங்கள் முளைக்காது அதுபோலவே தான்; உங்களுடை
ய வ்ரதபலனைச் சிலகிரயுகள் உங்களுக்கு சொல்கிறேன். பெண்களே நீ
ங்கள் சேரிக்கு செல்லுங்கள் என்று கூறினார். அவர்களும் திவ்ய
டன் பகவானுடைய பாதகமலங்களை ஸ்மரித்துக்கொண்டு சென்றார்
கள். பிறகு பகவான் கோபர்களுடன் ப்ருந்தாவனத்திலிருந்து வனத்
தின் அழகைப் பார்த்துக்கொண்டு வெகுதூரம் சென்று யமுனையில்
பசுக்களுக்கு ஜலம் காட்டி மேயவிட்டு தாங்களும் ஜலம் குடித்துவிட்
டு+ [illegible] ராமகிருஷ்ணர்களிடம் கோபாலர்கள் - ஹேரா
ம, கிருஷ்ணா எங்கள் பசியைத் தீர்த்துவையுங்கள் என்று கூறினார்கள்.
பகவான் - கோபர்களே ஸமீபத்தில் ப்ராமணர்கள் ஆங்கிரஸ ஸத்ரம்
என்ற யாகம் செய்கிறார்கள் அங்கு சென்று என்னுடைய பெயரையும் அண்ணா
வனுடைய பெயரையும் சொல்லி அன்னம் கேளுங்கள் என்று கூறினார்
அவர்களும் அவ்விதமே சென்று அவர்களை வணங்கி, பசுக்களை ஓட்டி
க்கொண்டு +(நண்பர்களுடன்) வந்திருக்கும் ராமகிருஷ்ணர்கள் பசியுடனிருக்கிறா
ர்கள் அவர்களால் அனுப்பப்பட்டு வந்திருக்கிறோம். உங்களுக்கு ச்ரத்
தையிருந்தால் அன்னம் கொடுங்கள் என்று கூறினார்கள். கர்
மமார்க்கத்திலேயே ஈடுபட்டிருக்கும் அவர்கள் கிருஷ்ணனை வைகுண்ட
நாக அறியாமல் மனுஷ்யனாக நினைத்து அன்னம் கொடுக்கிறேன் என்றோ
இல்லையென்றோ கூறவில்லை. கோபர்கள் நடந்ததை கண்ணனிடம்

கூறினார்கள். பகவான் சிரித்துக்கொண்டு, கோபாலர்களை
நீங்கள் அங்கே சென்று தீக்ஷிதபத்நிகளிடம் முன்போல் கேளுங்க
ள், கொடுப்பார்கள் என்று கூறி அனுப்ப அவர்களும் பத்நிக
ளையாஜ்ஞ ஸ்த்ரீகளிடம் வந்து முன்போலவே யாசித்தார்க
ள். அந்த ஸ்திரீகள் வெகுநாளாகக் கண்ணனைக் காணத்து
ல் கொண்டவர்கள் ஆகையால் அவர்கள் பரபரப்புடன் நானா
வித அன்னங்களைத் தயாரித்து எடுத்துக்கொண்டு யமுனைக்
கரைவந்து ராமகிருஷ்ணர்களைக் கண்டார்கள். பிராமண பத்
நிகள் கண்ணனைக் கண்டு ஸகல லௌகீக நினைவுகளையும் மறந்
மைய்மறந்து நின்றார்கள். பகவான், பாக்யசாலிகளே என்னைக் காண
வந்தது பற்றி சந்தோஷம். நல்வரவு. உட்காருங்கள். உங்களு
க்கு என்ன வேண்டும்? புத்திசாலிகள் என்னிடம் நிஷ்காம
பக்தி-பரமபக்தியைச் செய்கிறார்கள். உங்கள் பர்த்தாக்க
ள் உங்களுடைய யாகம் செய்வதால் அங்கே செல்லுங்கள். தீக்ஷித ப
த்நிகள் - பிரபோ உங்களுடைய பாதாரவிந்தங்களை அடைந்தவர்
கள் ஸம்ஸார துக்கத்தை அடையமாட்டார்கள் என்று வேதவாக்
கியம். ஸகல பந்துக்களையும் த்யாகம் செய்து வந்திருக்கிறோம்
நாங்கள் உங்களுடைய பாத துளஸியை சிரஸில் தரித்து இங்கேயேயிருக்க
விரும்புகிறோம். மேலும் நாங்கள் பர்த்தாக்களின் அனுமதியின்றி
வந்திருப்பதால் அவர்கள் எங்களை ஏற்றுக்கொள்ள மாட்டா

ர்கள் ஆசையானவர்களுக்கு வேறு கதியில்லை என்று கூறினார்கள்।

பகவான் — உங்களுடைய கணவர்களோ பந்துக்களோ உங்களைக் கோ
பிக்க மாட்டார்கள், ஊராரும் தூஷிக்க மாட்டார்கள், தேவர்களும் உங்க
ளை ஏற்றுக் கொள்ள அனுமதிப்பார்கள், என் பாதினைவைப்பதிக்க அங்க
ங்களுக்குத் தேவையில்லை என்னை மனதால் த்யானம் செய்து கொண்டிருந்தா
ல் சீக்கிரத்தில் என்னையே (நாராயணனையே) நேரில் அடைவீர்கள் எ
ன்று கூறினார். அவர்களும் யாகசாலைக்குத் திரும்பி அவர்களுடன் ஸஹதே
ஹமாக ஸத்ர யாகத்தை [+ தீர்த்திதார்கள்] முடித்தார்கள். அந்த யாகசாலையில் பர்த்தாவா
ல் தடுக்கப்பட்ட ஒரு ஸ்த்ரீ மட்டும் அங்கேயே பகவானுடைய ஸ்வ
ரூபத்தை த்யானம் செய்து சரீரத்தை விட்டு முக்தியடைந்தாள்।
பகவான் அவர்கள் கொண்டு வந்த அன்னங்களை கோபாலர்களுக்கு அளித்
துத் தானும் புஜித்து ப்ரஹ்ருஷிதர்கள், யக்ஞ புருஷனே நேரில் வ
ந்து அன்னம் கேட்டும் காமாவில் திடப்பட்ட நாம் கொடுக்கா
மல் மாயையால் ஏமாந்துவிட்டோமே, ஸ்த்ரீகளுக்கு உள்ள பகவத்ப
க்தி நமக்கு இல்லாமல் போய்விட்டதே என்று வருந்தி, பக்தியுள்ள
ஸ்த்ரீகளை மனைவிகளாக அடைந்த நாம் பாக்யசாலிகளே என்று
ஸமாதானமடைந்து பகவானைப் போய்ப் பார்க்க கம்
ஸனுக்குப் பயந்து போகாமல் வாஸுதேவனை [illegible]
காறும் அவர்களுடைய அபசாரத்தைப் பொறுத்திட வேண்டும்
என்று வேண்டிக்கொண்டனர்॥ 10-23

॥ கோவர்த்தன உத்தரணம், கோவிந்த பட்டாபிஷேகம் ॥

ஒருசமயம் நந்தகோபர் முதலான பெரியோர்கள் இந்திரயாகம் செய்ய
ஆரம்பிப்பதையறிந்து கண்ணன் அவர்களிடம் - இந்த யாக
ம் யாரைக் குறித்து, என்ன பலனைக் கருதி, இது சாஸ்திர முறையா
னதா, அல்லது லௌகிக கர்மாவா, ஒருவேளை செய்யும் கர்
மத்தை அறிந்து செய்தால் தான் பலன் உண்டு. ஆகையால் என
க்குக் கூறுங்கள் என்று கேட்டான். நந்தர் - மழைக்கு அதிபதி
இந்திரன். மேகங்களால் மழை பொழியச் செய்து நம்மையும் ம
ற்றவர்களையும் ஜீவனமான ஜலம் அருளி பயிர்களைச் செழிக்கச்
செய்து காப்பாற்றுகிறான். அவனால் கிடைத்த தானியங்களால் அவ
னைக் குறித்து யாகத்தைச் செய்து மீதியைச் சாப்பிடுபவர்க
ள் தர்மம் அர்த்தம், காமம் என்ற புருஷார்த்தங்களை அடைவார்
கள். இவ்விதம் பரம்பரையாகச் செய்து வரும் தர்மத்தை, காமம்,
லோபம், பயம், த்வேஷம் இவைகளினால் விடுபவர் செய்யாவிட்
டால் யாருக்கும் நன்மை உண்டாகாது. அதைக் கேட்டு கண்ணன் -
பெரியோர்களே! உலகத்தில் பிராணிகள் அவரவர் செய்த புண்ய பா
ப கர்மாக்களுக்குத் தக்கபடி, பிறப்பு இறப்பு ஸுகம் துக்கம் இவைகளை அ
இயற்கையான
னுபவிக்கிறார்கள். அந்தக் கர்மாக்களும் அவர்களின் ஸ்வதவத்தினால் ஸத்வ ரஜஸ் தமோ
குணங்களோ இவர்களை பாவஸ்ரித்து செய்யப்படுகின்றன,

அவைகளை மாற்ற ஸ்வதந்திரமில்லாத ஈச்வரனைக் கற்பிப்பதில் பயனி
ல்லை, ஆகையால் இந்திரன் தேவையில்லை, ப்ராமணனுக்கு வேதம் ஜீவ
னம், க்ஷத்ரியனுக்கு ராஜ்யபரிபாலனம், வைசியனுக்கு வார்த்தை,
சூத்ரனுக்கு மேல்வர்ண ஸேவை, அவைகளில் வார்த்தையென்று கிரு
ஷி வியாபாரம், கோஸம்ரக்ஷணம், வட்டிவாங்குதல் என்று நான்
கில் நமக்கு கோஸம்ரக்ஷணம் ஜீவனம், நமக்கு தேசமோ நகரமோ
கிராமமோ இருப்பிடமில்லை அநேகமாக வனம் மலைகளே, ஆகை
யால் இந்த யாகத்திரவியங்களால் ப்ராமணர்களைக் கொண்டு
அக்நியில் ஹோமம் செய்வித்து அவர்களுக்கு கோமுதலான தானங்க
ள் செய்து பசுக்களுக்கு ஸ்நானம் செய்வித்து புற்கள் கொடுத்து வி
சேஷமாக பக்ஷ்ய போஜ்யாதிகளுடன் அன்னம் தயார் செய்து நம
க்கு ப்ரத்யக்ஷ தெய்வமான இந்த கோவர்த்தனகிரியை பூஜை செய்
து நிவேதனம் கொடுத்து ப்ராமணர்களுக்குப் போஜனம் செ
ய்வித்து அதன் பிறகு, மற்ற ஸகல ஜாதியர்களுக்கும் உரியமுறை
யாய் போஜனமளிக்க வேண்டும், பிறகு கோபாலர்கள் ஸ்திரீகள்
நாமெல்லோரும் புதிய உடை ஆபரணங்களால் அலங்காரம் செய்
து கொண்டு பசுக்கள், ப்ராமணர்கள் அக்நி, கோவர்த்தனமலை
இவைகளை ப்ரதக்ஷிணம் செய்ய வேண்டும் இதுவே எனது அபிப்ராயம் இ
தை நீங்கள் ஸம்மதித்துச் செய்தால் கோக்களுக்கும், ப்ராமணர்கள், மலை
எனக்கும் ப்ரீதி ஏற்படும், என்றுகூறினன்।

இவ்வாறும் இந்திரனுடைய செல்வத்தை அடக்கக்கண்ணன்
கூறியவார்த்தையைக் கேட்டு எல்லோரும் சம்மதித்தார்கள்,
அவ்விதமே செய்தார்கள், பகவான் அந்த கோவர்த்தனகிரியின்
உள்ளே பெரிய உருவில் இருந்து, அவர்கள் கொடுத்த அன்னபான
திபலிகளைத் தானும் கூட இருந்து கொடுத்துக்கொண்டு தானே
சாப்பிட்டார். கோபஸ்திரீகள் மாட்டு வண்டிகளிலும் கோபர்
கள் நடந்தும் மலையை வலம் வந்தார்கள். பகவான் கோபர்களை
இந்த மலை சேரின்ப பூஜையை ஏற்றுக்கொண்டது, இதை அவம
தித்தால் நம்மைக் கெடுக்கும் ஆகையால் வணங்கவேண்டும
என்று கூறி அவர்களுடன் வணங்கிடப்பூஜை உத்ஸவத்தை மு
டித்துக்கொண்டு எல்லோரும் இருப்பிடம் வந்தார்கள் ॥
இந்திரன் தன்னைக் குறித்த யாகம் நிறுத்தப்பட்டதை அறிந்து கோ
பத்துடன் ப்ரளயகாலத்தில் உலகங்களை அழிக்கும் மேகக் கூட்டத்
தைப் பார்த்து, கிருஷ்ணன் என்ற இடைமனிதனுடைய பலத்தை
நம்பி பணமதம் படைத்த இந்தக் கோபர்கள் தேவர்களான நம்
மை அவமதித்துவிட்டார்கள் ஆகையால் நீங்கள் அங்கு சென்று
பெரிய மழை பொழிந்து கோபாலர்கள் பசுக்கள் கோகுலம் எ
ல்லாவற்றையும் அழியுங்கள். நானும் ஐராவதத்தின் மேலேறிக்கொ
ண்டு வாயு தேவர்களுடன் பின்னால் வருகிறேன் என்று கூ
றினான்.

இந்திரனால் ஆணையிடப்பட்ட மேகங்கள் இடி மின்னல் புயல் காற்
றுடன் தாரைதாரைகளாகவும் பனிக்கட்டி மழையாகவும் பொழிந்த
மேகங்கள் தெரியாமல் வெள்ளம் பெருகிக்கொண்டிருந்ததை அழி
த்தன. கோபாலர்கள் இந்திரனது தொல்லையில் கிருஷ்ணனைச் சரணமடைந்தா
ர்கள். பகவான் ஆகாயத்தில் பெய்யும் இவ்வளவு பெருமழைக்குக் கோ
பமடைந்த இந்திரனே. அவனுடைய மதத்தை அடக்கி சரண
மடைந்த கோபாலர்களைக் காப்பாற்றுகிறேன் என்று ஒரு
கையால் கோவர்த்தன மலையைப் பெயர்த்துக் குடைபோல் தூ
க்கி, கோபர்களே! நீங்கள் எல்லோரும் பசுக்கள் முதலியவை
களுடன் மலையெடுத்த பள்ளத்தில் வந்து பயமின்றி வாழுங்கள்
என்று கூறினார். அவர்களும் அவ்வாறே செய்தார்கள். ஏழு நாட்க
ள் வரை மழை பெய்தும் பகவான் ஒரு அடியும் அசையாமல் நின்
றான். அதைக் கண்டு ஆச்சரியமடைந்து கர்வமடங்கி மேகங்க
ளை நிறுத்தச் செய்தான். மழை நின்றதும் பகவான் கோபர்களை வெ
ளியே வரும்படி சொன்னார். அவர்களும் தங்கள் உடைமைகளுடன்
வெளியேறியதும் பழைய இடத்தில் மலையை வைத்தார். தேவர்க
ள் பகவானை வாழ்த்தினர்கள். தேவர்கள் வாத்ய கோஷம் செ
ய்து பூமாரி பொழிந்தார்கள். கோபாலர்கள் பகவானுடைய கோவர்த்தனோ
த்தாரணம் கண்டு ஆச்சரியமடைந்து ஏழுவயதுக் குழந்தையான கிருஷ்ணன் எப்படி இக்கு
ன்றை இவ்வளவு நாள் தூக்கிப் பிடித்தது என்று கேட்டார்கள்.

நந்தகோபர் - திருவண்ணன் நாராயணனும் அவன் ஸ்ரீமன்புதா
க்காசாரியார்களியதை நினைவுபடுத்துகிறார். கண்ணன் கோவர்த்தன
மலையைத் தாங்கி கோகுலத்தைக் காப்பாற்றியதால், தேவேந்திரன் ப
கவானுக்கு அபசாரம் செய்ததால், கர்வம் நீங்கி வெட்கமடைந்
து கோலோகத்திலிருந்து காமதேனுவை அழைத்துக் கொண்டு
வந்து பகவானுடைய பாதங்களில் விழுந்து வணங்கி அனுஜ்ஞை விஜ்ஞ
ய்து கொண்டு - பகவானே! துஷ்டர்களை நிக்ரஹித்து தர்மத்தைக்
காப்பாற்றவே தங்களுடைய அவதாரம், என்னைக் குறித்த யாக
த்தைத் தடுத்ததால் கோபமடைந்து தங்களுடைய மஹிமை
யையறியாமல் கோகுலத்தை மழையால் நான் அழிக்கச் செய்
த அபசாரத்தைப் பொறுத்தருளவேண்டுமென்று ஸ்துதித்து வணங்
கி சரணமடைந்தான். பகவான் - இந்திரனே! ஐச்வர்யத்தால்
கர்வமடைந்திருந்த உன்னுடைய கர்வத்தை யடக்கிவைக்
கு அநுக்ரஹம் செய்யவே யாகத்தைத் தடை செய்தேன். என்னு
டைய ஆக்ஞையை அநுஸரித்து கர்வமின்றி அடக்கத்துடன்
உன் கார்யங்களைச் செய்துவருவாய். நீ போகலாமெ
ன்று கூறினார். உடன் தன் கன்றுகளுடன் வந்த காமதேனு அச்சு
தா! தாங்கள் எங்கள் குலத்தைக் காப்பாற்றினீர்கள். பசுக்கள் ப்ராமண
ர்கள் தேவர்கள் ஸாதுக்கள் இவர்களுக்கு க்ஷேமத்தை உண்டு பண்ணவே
ண்டும், விஷ்ணுவானதாங்கள் பூபாரத்தை நீக்க அவதாரம்

செய்திருக்கிறீர்கள். நமக்கு தேவரின் ஸ்ரவால், கோக்களான
எங்களுக்கு இந்திரனாக இருக்கிறபடியால் அபிஷேகம் செய்யப்போ
கிறேன் என்று வாக்தானம் செய்து தன்னுடைய பாலால் பகவா
னுக்கு அபிஷேகம் செய்தது, இந்திரனும் ஐராவதத்தின் கையால்
கொண்டுவரப்பட்ட ஆகாச கங்காஜலத்தால் தேவ ரிஷிகளு
டன் பகவானுக்கு அபிஷேகம் செய்து "கோவிந்தன்" என்று
அழைத்தான். தேவர்கள் தேவஸ்திரீகள் ரிஷிகள் ஸித்தர் முதலியவர்களு
டன் புஷ்பமாரி பொழிந்தார்கள். பகவானுடைய கோவிந்தபட்டாபி
ஷேக மஹிமையால் பூமியானது செழிப்படைந்தும் பசுக்க
ள் அதிகமாகப் பால் கொடுத்தும் இயற்கை வளம் சேர்ந்து ஜன
ங்களும் வியாதிகளின்றியும் லோகம் மங்களமாக வாழ்ந்தது,
இந்திரன் கோவிந்தபட்டாபிஷேகம் செய்து தேவர்களோடு
கூடப் பகவானிடம் விடைபெற்றுச் சென்றான்.||
ஏகாதசியன்று நந்தகோபர் ஏகாதசி உபவாஸமிருந்து பகவானைப் பூ
ஜித்து த்வாதசி பாரணைக்காக அன்றிரவு நிசிவேளையில் யமுனைக்கு
ஸ்நானம் செய்யச் சென்றார். அகாலத்தில் ஸ்நானம் செய்பவரைப் பிடிக்க
வருணனின் தூதன் வருணலோகம் கொண்டு சென்றான். இதனைக் கண்டு
மில் கோகுலத்திலுள்ளவர்கள் அலறினார்கள். பகவான் அவர்களுக்கு அப
மளித்து வருணலோகம் சென்றார். வருணன் பகவானை ஸ்துதி செய்
வணங்கினான். சேவகன் அறியாமல் தகப்பனாரை அழைத்துவந்ததா

